www.tamilarangam.net

# சமர்

இதழ்-26




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இணையத்தில் (இன்ரநெற்றில்) சர்வதேசிய தோழமையை பலப்படுத்த

வர்க்கம், சாதியம், பெண்ணியம், தேசியம், நிறம், மதம், பண்பாடு, கலாச்சாரம், இசை, சுற்றுச் சூழல் ... என சமுதாயத்தின் அனைத்து விடையங்களையும் உங்களுடன் பகிர்ந்து கொள்ளும் பக்கங்கள் இவை.

சமுதாய விடுதலையை அடிப்படையாகவும், உண்மைகளை ஆதாரமாகம் கொண்டு சர்வதேச நிகழ்வுகளை பகுத்தாய்வு செய்யும் உங்கள் பக்கங்கள் இவை. இதில் பங்கு கொள்ள உங்களையும் அழைக்கின்றோம்.

இணையத் தொடர்பு ☞ **http://tamil-caste-race-class-nation-feminism-literature-culture.org/**

## ♀ஆணாதிக்கமும் பெண்ணியமும் (இணையத்தில் கட்டுரைகளை பார்வையிட முடியும்)

- 850 பக்கங்களைக் கொண்ட இந்த நூல் பெண்ணின் விடுதலையைப் பற்றி உலகளவில் பேசுகின்றது. பல்வேறு தலைப்புகளில் எழுதப்பட்டுள்ள அதே நேரம், ஆணாதிக கொடூரத்தை புள்ளிவிபர ரீதியாகவும், இந் நூல் கொண்டுள்ளது.
- இந்த நூலை வெளியிடுவதில் பொருளாதார ரீதியாக உள்ள நெருக்கடியில் கைகொடுக்க விரும்புபவர்களிடம், உதவியை கோருகின்றோம்.
- இந்த நூலை பெற விரும்புபவர்கள் 75 பிராங் அனுப்புவதன் மூலம் பெறமுடியும். அத்துடன் மேலதிக பிரதிகளையும் பெற்று விற்கவும் முடியும்.
- இந்த நூல் பற்றிய அனைத்து விமர்சனங்களையும், அபிப்பிராயங்களையும் வரவேற்கின்றோம்.

**கார்ல் மார்க்ஸ்சின் மூலதனம் ஐந்து பாகத்தையும் பெற விரும்புபவர்கள் 325 பிராங்கையும், தபால் செலவையும் அனுப்பி பெறமுடியும்.**

மக்கள் கலை இலக்கிய கழகத்தின் பாடல் கசெட்டுகளைப் பெற விரும்புபவர்கள், கசெட்டுக்கு 25 பிராங் வீதம் அனுப்பி பெறமுடியும்.

7வது பாடல் கசெட் : ஆண்ட பரம்பரையா அடிமைப் பரம்பரையா
8வது பாடல் கசெட் : காவி இருள்
9வது பாடல் கசெட் : வசந்தத்தின் இடி முழக்கம்
10வது பாடல் கசெட் : பாரதிதாசன் பாடல்கள்

இலக்கியம் எஞ்சிப்போயுள்ளது. இதை தத்துவார்த்தரீதியில் ஏகாதிபத்தியத்துக்கு சேவைசெய்ய கோட்பாட்டுதுறையில் அ.மார்க்சை சார்ந்துள்ளனர். இதன் ஊடாக கம்யூனிச எதிர்ப்பிரச்சாரத்தை ஒழுங்குபடுத்த செய்யம் முயற்சிகள் ஏகாதிபத்திய முயற்சிபோல் என்னதான் முயன்றாலும் அது பாட்டாளி வர்க்கத்தின் போர்க்குரல் முன் தோற்கடிக்கப்படும். கம்யூனிச எதிர்ப்பு பிரிவுகள் கூடிக்குலவி நடத்தும் விவாதம் எப்படி ஒடுக்கப்பட்ட மக்களின் நலன்களை, போராட்டத்தை ஒடுக்குவது என்பதை அடிப்படையாக கொண்டது. சமூகபற்றுள்ளவர்கள், சமூகத்தின் துயரத்தை உண்ர்பவர்கள் அதை மாற்ற விரும்புபவர்கள் இந்த கம்யூனிச எதிர்ப்பு கூத்தடிப்பை புறக்கணித்து அம்பலப்படுத்த வேண்டியது சமூக நோக்குள்ளவர்களின் முன்னுள்ள ஒரேயொரு பணியாகும்.

பி.இரயாகரன்
15.12.1999



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சமூகத்தை புரிந்து கொள்ள முயல்வோம்

நீண்ட இடைவெளிக்கு பின் சமர் உங்கள் கைக்கு கிடைக்கின்றது. 'ஆணாதிக்கமும் பெண்ணியமும்' என்ற தலைப்பிலான நூல் ஒன்றை எழுதி முடிக்கும் பணி காரணமாகவே சமர் காலதாமதமாகியது. இக்கால இடைவெளியில் பலவிடயங்கள் உலகளவில் நடைபெற்றன. அவைகள் சிலவற்றை துண்டுப்பிரசுர வடிவில் கொண்டு வந்திருந்தோம். அதில் முக்கியமானவை இதில் பிரசுரமாகியுள்ளது.



புலம்பெயர் சமூகத்தின் அனைத்து நாடு தழுவிய அளவில் புரட்சிகரமான போக்கு மேலும் மேலும் இழிந்து போகின்றது. வன்முறை, தனிநபர் காழ்ப்புணர்வுகள் கூடிய தூற்றும் சமூக அரசியல் வடிவம் எல்லாத் தளத்திலும் விரிவாகியுள்ளது. மறுதளத்தில் இன்று புரையோடிப் போயுள்ள சமூகம் பற்றிய அக்கறையின்மை, அரசியல் மாற்றுக்கான நேர்மையான தேடுதலை கைவிட்டுச் செல்வதன் ஊடாக மேலும் தன்னை நிர்வாணமாக்கி வருகின்றது.

இன்று புலம் பெயர் சூழலில் வந்து கொண்டிருக்கும் சஞ்சிகைகள் அனைத்தும் விதிவிலக்கின்றி தனிமனிதர்களின் எழுத்துச் சுதந்திரத்துக்கு வேட்டு வைக்க பின்நிற்கவில்லை. எழுத்துச் சுதந்திரத்தின் வானளவு பாதுகாவலராக பிரகடனம் செய்த படி வாழும் புலம்பெயர் சஞ்சிகைகள் உண்மையில் அதற்கு எதிரானவை. அம்மா 9,10 இல் எனது ஒரே எழுத்துகளை இரு முறை அறுவைச் சிகிச்சை செய்து அலங்கோலப்படுத்தி அசிங்கப்படுத்தினர். ஆனால் எந்த எழுத்தையும் தனி மனித சுதந்திரத்தை உள்ளடக்கி வெட்டியதில்லை என்று அம்மா எழுதக் கூட தயங்கியதில்லை. ஆனால் நிலைமை இதற்கு தலைகீழானவை. உயிர் நிழல் இது போல் எனது எழுத்தை வெட்டித் திருத்தியது. நோர்வே சக்தி இதழ் கூட இதை செய்தன. எக்ஸில் எனது எழுத்தைப் போட இடம் இல்லை என்று கட்டுரையைப் பார்க்காமலே கூறிவிடுகின்றனர்.

இந்தளவும் எதன் அடிப்படையில் நிகழ்கின்றன என்பதே அடிப்படையிலான கேள்வியாகும். மார்க்சியம் பற்றி ஏதும் தெரியாது, மார்க்சிய எதிர்ப்பில் அதன் மீதான வெறுப்பில் புலம்பெயர் இலக்கிய உலகம் கைகோர்க்கின்றது. எவ்வளவு முரண்பாடு இருந்தாலும் இவர்கள் தமது பொதுப் பார்வையில் மார்க்சியத்தை அன்னியப்படுத்துவதில் பொது உடன்பாடு உடையவர்களாக உள்ளனர். இச்சஞ்சிகையை நடத்துபவர்கள் ஒரு எழுத்தாளராக எழுதும் முழுமையான ஆற்றல் அற்றவர்களாக இருந்தபடி, ஆங்காங்கே சிலவற்றை எழுதும் இவர்கள் சமூகம் மீதான ஒரு சீரிய பார்வையற்றவர்கள். சாதாரண குட்டி பூர்சுவா மனவிருப்புகளை வெளிப்படுத்தும் இவர்கள், மார்க்சியத்துக்கு எதிராக எழுதுபவர்களுக்கு விருந்து வைத்து எழுத வைப்பவர்கள். மார்க்சியத்துக்கு எதிராக தம்மை பிரமுகராக்கியவர்களிடம், சீடர்களாக தரையில் அமர்ந்த படி, தயவு கூர்ந்து எழுத இரந்தும் கேட்ட படி இந்தியா வரை தமது பணம் மற்றும் கூட்டங்கள் வைப்பது வரை, புலம் பெயர் இலக்கிய சஞ்சிகைகள் சார்ந்த இலக்கியம் சீரழிந்து போயுள்ளது. சுரண்ட, அது சார்ந்து ஆணாதிக்கத்தையும், இனவாதத்தையும்..... கட்டமைக்கும் அனைத்து சமூக நடைமுறை போக்கையும் எதிர்த்து போராடும் மார்க்சியத்துக்கு எதிராக, உருவான பிரமுகர்கள் தம்மை இலக்கியவாதியாக குறிப்பிட்டு எழுதும் எழுத்தே சமூக அங்கீகாரம் கொண்டவை என்ற பிரமுகத்தன ஆசை, இவர்களை அவர்களிடத்தில் நக்கி வாழ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வைக்கின்றது. இது சமூகத்தின் தேவையை கொச்சைப்படுத்தி மறுத்து நிற்க்கின்றது. மார்க்சியம் எதிர்த்து போராடும் சமூக அவலத்தை பாதுகாக்க அதில் உருவான பிரமுகர்கள், சமூக மாற்றத்துக்கான நடைமுறையை நிராகரிக்கும் இந்த பிரமுகர்களின் எழுத்தால் நிரப்பப்பட்டு வரும் இச்சஞ்சிகைகள், பிரமுகத்தனமான எழுத்தால் சமூகத்தை சோரத்துக்கு இட்டுச் செல்லுகின்றனர்.

மழைக்கு முளைத்த காளான்கள் போல் உருவான சஞ்சிகைகள் எந்த சமூகத் தொடர்ச்சியிலும் உருவானவையல்ல. அதே நேரம் எந்த சமூகத்தையும் பிரதி பலிப்பதாக பிரகடனம் செய்ததில்லை. அதே நேரம் பிரகடனம் செய்யாத மார்க்சிய எதிர்ப்பை கையாள்வதில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர். இவை தனிநபர் காழ்ப்புணர்வுகளை தமது சொந்த அரசியல் இருப்பாக கொண்டு, பிரமுக இருப்பை கனவு காண்கின்றது. மறுதளத்தில் புலம்பெயர் இலக்கிய உலகம் தனது சொந்த தனிநபர் காழ்ப்புணர்ச்சிகளை காட்டிக் கொடுக்கவும் தயங்கவில்லை. ஏகாதிபத்திய உள்ளூர் அரசியல் பொலிசுக்கு, மார்க்சியத்துக்கு எதிரான இயல்பான அவர்களின் போக்கு இசைவான காட்டிக் கொடுப்பில் தன்னையும், தனது இலக்கிய சோரத்தையும் பாதுகாக்க முனைகின்றது. என் மீதான ஏகாதிபத்திய அரசியல் பொலிசின் விசாரணை திட்ட வட்டமாக புலம் பெயர் இலக்கிய காட்டிக் கொடுப்பின் ஒரு அங்கம் தான். இதை எல்லா இலக்கியவாதிகளும் காட்டிக் கொடுத்தார்கள் என்ற அடிப்படையில் நான் கருதவில்லை. ஆனால் எனது எழுத்து முடக்கப்பட வேண்டும் என்பதில் புலம்பெயர் இலக்கியம் மனதார விரும்புகின்றது. அது எந்த வழியில் என்றாலும் அதை மறைமுகமாகத் தன்னும் மௌனத்தினூடாக ஆதரவைக் கொடுக்கின்றது. போலித்தனமான பிரமுகத்தன ஆசையுடன் கூடிய இலக்கிய பம்மத்தை நான் ஒருவன் மட்டுமே நிர்வாணப்படுத்துவதால், எனது எழுத்தின் இருப்பு அச்சுறுத்தலாக உள்ளது. இது நின்று போவது பிரமுகர்களின் பொற் காலம் என்று நம்பும் நிலையில், இதற்கு எதிராக முடிந்ததை செய்ய முயலுகின்றது. ஆனால் சமரின் இருப்பு தான் மற்ற எந்த புலம்பெயர் நாட்டையும் தாண்டி பிரான்சில் மார்க்சியத்துக்கு எதிரான சஞ்சிகையின் வரவை நிலை நிறுத்துகின்றது என்பதை காணத் தவறுகின்றது.

என் எழுத்துக்கு புலம் பெயர் நாட்டில் இருந்து இலங்கை வரை கோட்பாட்டில் பதில் அளிக்க முடியாதவர்கள், எனது எழுத்தை "தனிநபர் தாக்குதல்" கொண்டவை என்ற அவதுற்றைப் பொலிந்து, தமது சோரம் போகும் அரசியல் பிழைப்பை பலர் செய்ய பின்நிற்கவில்லை. எனது எழுத்து "தனிநபர் தாக்குதல்" கொண்டது எனக் கருதின், அதை கோட்பாட்டில் செய்யாத வரை, இப்படி கூறுவதே தனிநபர் தாக்குதல் தன்மை வாய்ந்தவை என்பதில் சந்தேகம் இருக்கமுடியாது. புலம்பெயர் சமூக சிதைவுகள் விரிவாகி மனித அவலங்கள் கூர்மையாகி வரும் இன்றைய நிலையில் அது பற்றி யாரும் பேசுவதில்லை. புலம் பெயர் அவலம் மேலும் மேலும் விரிவாகி வரும் போக்கில், அவற்றை பற்றி அக்கறை கொள்ள வேண்டிய சமூகப் பொறுப்பு எம்முன்னுள்ளது.



இந்த சமரில் இருந்து மார்க்சியத்தை ஏற்றுக் கொள்ளும் போக்கில் ஏற்படும் மார்க்சிய விலகல் சார்ந்து, விமர்சனத்தை தீவரமாக்க வேண்டியளவுக்கு புறநிலைமை கோருகின்றது. இது மேலும் தத்துவார்த்தம் சார்ந்து சமர் இருப்பது தவிர்க்க முடியாததாகிவிடுகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலங்கையில் ஒரு புரட்சிகரமான சர்வதேசியத்தை நிறுவும் போராட்டத்தில் ஏற்படும் திசை விலகல்கள் மீது



மிக அண்மையில் "தமிழீழ புதிய சனநாயக கட்சி" ஒன்றை 'தேச பக்தன்' இதழ் பிரகடனம் செய்திருந்தது. 1983 இல் எப்படி பல்வேறு இயக்கங்கள் உருவானதோ, அதற்கு எப்படியான ஏற்ற சூழல் இருந்ததோ, அதையொத்த 'கட்சி'ப் பிரகடனங்கள் புதிய போக்காகியுள்ளது. 'கட்சி'ப் பெயரிலான பிரகடனங்கள் புரட்சியை ஏற்படுத்திவிடுவதில்லை. இலங்கையில் சிங்கள இனவாத இன அழித்தொழிப்பிற்கு எதிரான போராட்டத்தில், புலிகள் வலது பிற்போக்கு இனத் தேசியவாதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் நிலையில், மாற்றான கட்சிப் பிரகடனங்கள் விசனிக்கத் தக்கவகையில், அதன் அரசியல் வெளிப்பாடுகள் காணப்படுகின்றது. விமர்சன ரீதியாக பலவற்றை தேசபக்தன் கொண்டிருந்த போதும், முக்கியமான கோட்பாட்டு விடயங்கள் மீது மட்டும் விமர்சிக்க முனைகின்றது.

இலங்கையில் ஒரு பாட்டாளி வர்க்க கட்சியை உருவாக்குவதற்கும், ஒரு முற்போக்கு தேசிய முன்னணியை உருவாக்குவதற்கு முன், குறைந்த பட்சம் சில அடிப்படையான அரசியல் நிலைமைகளை பூர்த்தியாக்கியிருக்க வேண்டும்.

1.ஏகாதிபத்திய பொம்மை சிங்கள இனவாத அரசு இன அழித்தொழிப்பையும், புலிகளின் வலது இனவாதப் பிற்போக்கையும், இலங்கை நிலைமையில் குறிப்பாக கவனத்தில் கொண்டே கட்சிப் பிரகடனம் செய்யப்பட வேண்டும். அதாவது இலங்கையில் ஒரு கட்சி கட்டப்படும் வடிவமும், இந்தியாவில் ஒரு கட்சி கட்டப்படும் வடிவமும் முற்றாக வேறுபட்டவை. இந்தியாவில் 1960 களில் ஏற்பட்ட நக்சல்பாரி எழுச்சியின் தோல்விகள், அதன் மீதான அரசியல் விவாதம் பல கட்சிகளை உருவாக்கியது. இது சரியான அரசியல் மார்க்கத்தை தனித் தனியான அரசியில் அணிதிரட்டல்களில் இருந்து, நடைமுறையூடாக நிறுவி ஒன்றுபட்ட கட்சியை நோக்கி முன்னேறும் அரசியில் நடைமுறையை, இந்தியாவின் குறிப்பான புரட்சிகர சூழல் ஏற்படுத்தியுள்ளது. அதாவது பல குழுக்கள் தனித் தனியாக உருவாகி, அதில் இருந்து ஒன்றுபட்ட கட்சியை வந்தடையும் நிலைமை அங்கு காணப்படுகின்றது. இது 1960 களில் ஏற்பட்ட எழுச்சி, தோல்வியில் எற்பட்ட அனுபவ ரீதியான நடைமுறை ஊடாக, தத்துவார்த்த ரீதியில் முரண்பாடுகள் உருவான போது, அங்கு இவ் உருவாக்கம் சட்ட பூர்வ, சட்ட விரோத நிலைமைகள் ஊடாக பல கட்சிகள் வந்தடைந்தது. ஒரு கட்சியில் இருந்து புரட்சிகர முரண்பாட்டை அடிப்படையாக கொண்டு பல கட்சிகள் உருவாகுவதும், அதில் இருந்து ஒரு ஒரே கட்சியை நோக்கி மீள முன்னேறுவதும் என்ற நடைமுறை காணப்படுகின்றது.

இந்த நிலைமை இலங்கைக்கு பொருந்துமா? இலங்கையில் நிகழும் இனவாத யுத்தமும், பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொடர்ச்சியின்மையும் அதிகளவுக்கு பாதகமாகவுள்ளது. அத்துடன் சட்ட பூர்வமான அனைத்து செயல் களமும் பாசிய வன்முறைக்கும், படுகொலைக்கும் உள்ளாவதால், சட்ட விரோதமான செயல் வடிவம் மட்டுமே மாற்றுப் பாதையாக உள்ள போது, கட்சி கட்டப்படும் வடிவம் முற்றாக மாறானது.

கட்சியை மார்க்சிய லெனிய மாவோ சிந்தனைக்குள் காணப்படும் முரண்பாட்டின் அடிப்படையில் (இந்தியாவில் உருவாகுவது போல்) மிக இறுக்கமான ஒரே கோட்பாட்டு நபர்களைக் கொண்டு மட்டும் உருவாக்க வேண்டிய அவசியம் இங்கு அற்றுப் போகின்றது. மார்க்சிய லெனிய மாவோ சிந்தனை ஏற்றுக் கொள்ளும், பரந்த புரட்சிகர பிரிவை உள்ளடக்கிய வகையில், இக்கட்சி முரண்பட்ட பிரிவுகளை உள்ளடக்கியே உருவாக்கப்படவேண்டும். ஏனெனின் பொதுவாகவே பாசிசம் அனைத்து சட்ட பூர்வ ஜனநாயக வடிவங்களை ஒடுக்குவதால், பாட்டாளி வர்க்க சக்தி இதனால் பலத்த நெருக்கடிகளை முகம் கொடுக்கும் போது, முரண்பட்ட கோட்பாட்டு உருவாக்கம் இயல்பாகின்றது. இந்த முரண்பட்ட பிரிவுகளிடையே பாட்டாளி வர்க்கப் புரட்சியை நேசித்து போராடக் கூடிய பிரிவுகளின் ஐக்கியம், முரண்பாட்டையும் பிளவையும் விட முதன்மையானது. இலங்கையின் பாசிச நெருக்கடிக்குள் ஐக்கியம் மார்க்சிய லெனிய மாவோ சிந்தனையை முன்வைக்கும் சக்திகளுக்கு முதன்மையானது. முரண்பாடு இரண்டாம் பட்சமானது. இது மட்டும் தான் இலங்கையில் புரட்சிகர சூழலை உருவாக்கும் ஆற்றல் வாய்ந்தவை. இங்கு ஐக்கியம் புரட்சிகர நெருக்கடிகளை சந்திக்கின்றமையால், பிளவு இரண்டாம் பட்சமாவதுடன், ஐக்கியத்தை நோக்கிய தேடுதல், கோட்பாட்டு ஒருமையை புரட்சிகர சரியான பாதை உருவாக்குவதை தீவிரமாக்கும். இங்கு பிளவு என்பது, முரண்பாடு என்பது குறித்த புரட்சிகர நெருக்கடிகளில் அர்த்தமுள்ள அரசியல் நடைமுறைப் பாதையில் களையப்பட்டுவிடும்.

இதை விடுத்து பிளவு ஏற்படின் அது கோட்பாட்டு அடிப்படையை கொண்டிருப்பின், அப்பிளவு ஐக்கியம் ஏற்பட்ட பின் ஏற்படின், ஐக்கியம் ஏற்படாத பிளவுகள் நீடிப்பதை விட ஒரு முன்னேற்றமான நிலையில் நிகழ்வதாக இருப்பதால், அப் பிளவையிட்ட அச்சம் இரண்டாம் பட்சமாகி விடுகின்றது. இன்று ஐக்கியம் எல்லாவற்றையும் விட முக்கியமானது, முதன்மையானது. இதை காணத் தவறும் எல்லா நடத்தைகளும், குறிப்பாக இலங்கை நிலைமையை மதிப்பிடத் தவறியதன் விளைவாகும். இது குழுவாதத்தின் பொதுவான தன்மையாகும். இது இலங்கையின் புரட்சிகர நிலைமையை உருவாக்கத் தடையான குறுங்குழுவாதமாகும்.

2. ஐக்கியத்தை முதன்மையானதாக முன்வைத்து, உருவாக்காத கட்சிப் பிரகடனங்களை முன்வைக்கும் போது, குறைந்த பட்சம் ஒரு கட்சி தனது திட்டத்தின் அரசியல் உள்ளடக்கத்தை, அரசியல் சக்திகள் மத்தியில் விரிவாக விவாதித்து இருக்கவேண்டும். முரண்பட்ட அனைத்து விடயங்களையும் முழுமையாக விவாதித்து இருக்க வேண்டும். திட்ட அரசியல் அடிப்படைகள், முரண்பட்ட கூறுகளை தனித்துவமாக, அவற்றை விரிவாக பரந்த தளத்தில் விவாதிக்காத கட்சிப் பிரகடனங்கள் குறுங்குழுத்தன்மை வாய்ந்தவையாகும். இது ஐக்கியத்தை புறக்கணிக்கும் தனிமைவாத பண்பாடாகும். இலங்கையின் நெருக்கடியான அரசியல் நிலையில் இது போன்ற செயல்கள் சிறுபிள்ளைத் தனம் வாய்ந்தவையாகும். விவாதமும் இன்றியும், ஐக்கியத்தை முதன்மைப்படுத்தாத கட்சிப் பிரகடனங்கள், கடந்த கால இயக்க பாணியிலான தொடர்ச்சியேயாகும். இலங்கையின் குறிப்பான நிலைமை பற்றி மதிப்பீடு இன்றி இவை வெளிவருவது, புரட்சிகர நிலலமை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மீது நம்பிக்கையின்மையை ஏற்படுத்தி மேலும் பின் தள்ளுவதாகும்.

3.கட்சி ஒன்றை இன்று பகிரங்கமாக பிரகடனம் செய்வது என்பது, இலங்கையின் நிலைமையை மதிப்பிடத் தவறியதன் விளைவாகும். கட்சி ஊழியர்களையே உருவாக்க முடியாத புறநிலை உள்ள போது, அதுவே பணியாக உள்ள போது, கட்சிப் பிரகடனங்கள் வெறும் விளையாட்டு விளம்பரமாகிவிடுகின்றது. கட்சி பற்றிய புரட்சிகரத் தன்மையைப் பொதுத் தன்மையில் கேலிக்குரியதாக்கிவிடும். பகிரங்கத் தன்மை மேலும் புரட்சிகர நெருக்கடியை தோற்றுவித்து, குறைந்த பட்ச வேலையைக் கூட முடமாக்குவதாகும். கட்சியின் பணி பற்றிய மதிப்படின்றியே குறுங்குழுவாத பிரகடனமாகவே முன் வருகின்றது.

"தமிழீழ புதிய சனநாயக கட்சி" யின் அரசியல் திட்டம் மீதான விவாதத்தை செய்வதற்கு, அதை இது வரை பார்க்கமுடியவில்லை. ஆனால் சில கட்சி வெளிப்பாடுகளை, கொள்கைகளை தேசபக்தன் இதழில் வெளிப்படுத்தியிருந்தனர். இதன் மீதான விமர்சனம் இன்று அவசியமாகிவிடுகின்றது.

முதலாவதாக அவர்களின் கட்சிப் பெயர் "தமிழீழ புதிய சனநாயக கட்சி" என்று குறிப்பிடுகின்றனர். புதிய சனநாயக கட்சி என்பதன் பின்னால் உள்ள வர்க்க அடிப்படை, அரசியல் ரீதியாக கேள்விக்குள்ளாகின்றது. புதிய சனநாயக புரட்சி ஜனநாயகப் புரட்சியை அடிப்படையாக கொள்கின்றது. இது சாராம்சத்தில் தேசிய முதலாளித்துவ பிரிவை உள்ளடக்கிய ஒரு முன்னணியாக இருக்கும் போது, அது ஒரு கட்சியாக எப்படி இருக்க முடியும். கட்சி என்பது ஒரு வர்க்கத்தின் பிரதிநிதியாகவே எப்போதும் இருக்கின்றது. புதிய சனநாயகம் என்பது இரண்டு வர்க்கத்தின் (பாட்டாளி மற்றும் தேசிய முதலாளிகளின்) புரட்சிகர போக்காக இருப்பதால் மட்டுமே, அக்கால கட்டம் புதிய சனநாயகம் என்று வரையறுக்கப்பட்டது. இந்தக் கால கட்டத்தில் ஒரு முன்னணியிருக்க முடியுமே ஒழிய, கட்சி என்பது வர்க்க சமரசத்தை அரசியல் ரீதியில் கொண்டதாகும். இரண்டு வேறுபட்ட வர்க்கத்தின் அரசியல், ஒரு கட்சியில் எப்படி ஒன்றுபட்டு இருக்க முடியும். ஒரு முன்னணியில் இது சாத்தியமானது. கட்சியில் சாத்தியமானதில்லை. ஒரு முன்னணி, ஒரு கட்சியின் அரசியல் உள்ளடக்கம், வேறுபாடு சரியாக புரிந்து கொள்ளாத வரை, புதிய சனநாயக புரட்சியின் உள்ளடக்கத்தைப் புரிந்து கொள்ள முடியாது.

தேசிய முதலாளித்துவ பிரிவுகளின் சனநாயகப் புரட்சி, ஏகாதிபத்திய சகாப்தத்தில் குறிப்பாக சோவியத் புரட்சியின் பின்பு, தனித்துவமாக சொந்த வர்க்க ஆற்றலூடாக புரட்சி செய்யும் ஆற்றலை இழந்துவிட்டது. அப்படி ஒரு முயற்சியை செய்து முன்னேறும் ஒவ்வொரு நிலையிலும், அது தரகு முதலாளித்துவ பிரிவாக சீரழிகின்றது. ஆனால் சனநாயகப் புரட்சி உலகமயமாதல் நிகழ்ச்சியூடாக தீவிரமான கொதி நிலையில் வெளிப்பட்டுவருவது இயங்கியலாக உள்ளது. இந்த நிலையில் பாட்டாளி வர்க்கம் தனது வர்க்க கடமையுடன், தேசிய ஜனநாயகப் புரட்சியையும் நடத்த வேண்டிய பொறுப்பை கவனத்தில் கொள்கின்றது. பாட்டாளி வர்க்கம் சனநாயகப் புரட்சியை முன்னெடுக்க வேண்டிய நிலைக்கு ஏகாதிபத்திய சகாப்தம் நீடிக்கின்றது. இந்தக் கால கட்டத்தை உள்ளடக்கிய புரட்சிகர சமூக அமைப்பை உருவாக்க, புதிய சனநாயக கால கட்டம் வரையறுக்கப்பட்டு புதிய சனநாயக அரசியல் நடைமுறை ஐக்கியத்தின் ஊடாக ஒருங்கமைக்கப்படுகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இங்கு இந்த புதிய ஜனநாயக கால கட்டத்திய அணிகளை ஒன்றிணைப்பதில் பாட்டாளி வர்க்கம் முன்முயற்சி எடுக்கின்றது. பாட்டாளி வர்க்கம் தனது சொந்த கம்யூனிசக் கட்சியை தாண்டி, பல்வேறு வர்க்கப் பிரிவுகளை தனது தலைமையில் ஒன்றிணைக்க கட்சியை அல்ல முன்னணி அமைப்புகளை உருவாக்கின்றது. சனநாயகப் புரட்சிகர கடமைகளை நிறைவு செய்யும் திட்டத்தை அடிப்படையாக கொண்ட, பல்வேறு வர்க்க பிரிவுகளின் கோரிக்கையை உள்ளடக்கிய ஐக்கிய முன்னணியை உருவாக்கின்றது. இதற்குள் பாட்டாளி வர்க்கம் உள்ளிட்ட தேசிய முதலாளித்துவ கூறுகளும், சனநாயக கடமைக்கு அப்பால் தனது வர்க்க நலனை நிறைவு செய்யும் கடமையை கொண்டு காணப்படுகின்றது. சனநாயகப் புரட்சிக்குரிய கடமைகளை சனநாயகக் கட்சி ஒன்று தலைமை தாங்கும் பட்சத்தில், பாட்டாளி வர்க்க கட்சியின் வர்க்கக் கடமை கேள்விக்குள்ளாகி விடுகின்றது. கட்சி என்பது ஒரு வர்க்கத்தின் தலைமை தாங்கும் அமைப்பு என்பதால், அது ஒன்றில் பாட்டாளி வர்க்க நலன் அல்லது தேசிய முதலாளித்துவ வர்க்க நலனை பிரதிபலித்தேயாக வேண்டும். இது புதிய சனநாயக கடமையை, அதன் அரசியல் உள்ளடக்கத்தின் மீது அரித்துவிடுகின்றது. இங்கு புற நிலையாக பாட்டாளி வர்க்க கட்சி உள்ள போது, இந்த சனநாயக கட்சிக்கிடையில் வேறுபாடு அரசியல் மார்க்க ரீதியாகவே அதிகரித்து விடும் அல்லது அது மறைந்து விடும். பாட்டாளி வர்க்கத்தின் கடமைக்கும், சனநாயக கட்சியின் கடமைக்குயிடையில் உள்ள புரட்சிகர இடைவெளி, அடிப்படையில் எதுவுமற்றதாக அல்லது உறவற்றதாக மாறிவிடுகின்றது. புதிய சனநாயக புரட்சி என்பது ஒன்றுக்கு மேற்பட்ட வர்க்கங்களின் ஐக்கியத்தை உள்ளடக்கிய காலகட்டம் என்பதால், அதை ஒரு கட்சி பிரதிநிதித்துவம் செய்ய முடியாது, ஒரு ஐக்கிய முன்னணி தான் பிரநிதித்துவம் செய்ய முடியும். இல்லாத வரை கட்சியை புரிந்து கொள்ளும் அரசியல் மற்றும் வர்க்க உள்ளடக்கம் சிதைக்கப்படும்.

இங்கு மற்றொரு பிரச்சனையாக, இலங்கையில் "புதிய ஜனநாயக கட்சி" ஒன்று முன்கூட்டியே இருந்து வருகின்றது. இதற்கு முன் 'தமிழீழ' என்று இணைத்துக் கொண்டதன் மூலம், நடைமுறை குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இதன் மூலம் அரசியல் குழப்பத்தையும் உருவாக்கிவிடுகின்றது. அவர்கள் புதிய ஜனநாயக கட்சியை ஒரு கம்யூனிஸ்ட் கட்சியாக கருதும் போக்குடன் செயல்படும் போது, "தமிழீழ புதிய சனநாயக கட்சி"ப் பிரகடனம் மேலும் கம்யூனிச அடிப்படை மீதான திரிபை ஏற்படுத்தி விடுகின்றது. புதிய ஜனநாயக காலகட்டம் பற்றிய அரசியல் வரையறையை, கட்சிக்குள் உள்ளடக்குவதன் மூலம், பாட்டாளி வர்க்கத்தின் கடமையை சனநாயக கடமைக்குள் உள்ளடக்குவதாகும். இது பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் கடமையை கைவிட்டுச் செல்வதாகும். ஏகாதிபத்தியத்துக்கு எதிரான தேசிய முதலாளித்துவத்தை தாண்டி, இக்கட்சிகளின் அரசியல் கோரிக்கை நகரமாட்டாது. ஏனெனின் இக் கட்சிகளின் பெயர்களின் உருவாக்கம், அதைத் தான் எல்லைப்படுத்துகின்றது. இங்கு பாட்டாளி வர்க்கத்தின் கைகள் கட்டிப் போடப்படுகின்றன. ஏனெனின் கட்சியின் நோக்கம் புதிய சனநாயக கடமையுடன் நின்று போகின்றது.

தேசியம் பற்றிய தேசபக்தன் அரசியல் வரையறை இதை மேலும் தெளிவாக்கின்றது. இதைப் பார்ப்போம். "... நவகொலனி நாட்டு தொழிலாளி வர்க்கமும், புரட்சிகர சக்திகளும் எதன் அடிப்படையில் தேசிய இனம் என வரையறுப்பது, தேசிய சுயநிர்ணய உரிமையை தேசிய அரசுக்கான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போராட்டத்தை எப்போது முன்னேடுப்பது, ஆதாரிப்பது, 'தேசியக் கோரிக்கை எல்லாம் முதலாளித்துவ கோரிக்கையே ஒழிய பாட்டாளி வர்க்க கோரிக்கை அல்ல' என பார்த்து நவகொலனிய தேசியப் பிரச்சனையை குறிப்பாக புரிந்து கொண்டு தெளிவான நிலைப்பாட்டை எடுக்காது அன்னியப்படுகின்றனர்.'' என்று தமிழீழ மக்கள் கட்சி திட்டம் மீதான விமர்சனத்தில், எனது தேசிய இனப் பிரச்சனை தொடர்பான நூலின், தலைப்பின் ஒரு பகுதியை விமர்சிக்கின்றனர். தேசிய இனப் பிரச்சனை தொடர்பான தேசியவாத விளக்கங்கள் புதிய ஜனநாயக புரட்சியின் அரசியல் உள்ளடக்கத்தை புரிந்து கொள்ள தவறியதைக் காட்டுகின்றது. ஏன் பொதுவாக மூன்றாம் உலக நாடுகளில் புதிய ஜனநாயகப் புரட்சி முன்வைக்கப்படுகின்றது என்பது தொடர்பாகவோ, ஏன் முதலாளித்துவ நாடுகளில் இவை வைக்கப்படுவதில்லை என்பது தொடர்பாகவோ எந்தவிதமான அரசியல் விளக்கமின்மையே, தேசியத்தை தனித்துவமாக விளக்கும் பண்பு எழுகின்றது. தேசியத்தை மூன்றாம் உலக பாட்டாளி புரிந்து கொள்ளும் வடிவத்துக்கும், முதலாளித்துவ நாட்டு பாட்டாளி புரிந்து கொள்ளும் வடிவத்துக்கும் வேறுபாடு இருக்க முடியுமா? இல்லை ஒருக்காலும் இல்லை. சர்வதேசியத்தை ஏற்றுக் கொள்ளும் பாட்டாளி வர்க்கம், தேசியத்தை எப்போதும் அதன் வர்க்க கண்ணோட்டத்தில் புரிந்து கொள்கின்றது. இங்கு வேறுபட்ட ஏற்றத் தாழ்வான சமூக பொருளாதார நிலைமைகளால், சர்வதேசிய கடமையை நிறைவு செய்யும் பாதை வேறுபடுகின்றது.

புதிய ஜனநாயக புரட்சி உள்ளடக்கத்தில் சர்வதேசிய கடமையை முன்னெடுக்கும் அதே நேரம், தனது தலைமையில் சனநாயக புரட்சியையும் நிறைவு செய்கின்றது. சர்வதேசிய வாதிகள் எப்போதும் ஜனநாயகக் கடமையை ஏற்றுக் கொள்வதுடன், அதைக் கோரவும் செய்கின்றனர். ஏகாதிபத்திய உலகமயமாதல் தேசங்களின் தேசிய சொத்துரிமைகளை அழித்து உலகமயமாதலை தீவிரமாக்கும் போது, தேசங்களுக்கான தேசிய முதலாளித்துவ போராட்டங்கள் இயல்பாக எழுகின்றன. அது தனது தேசிய முதலாளித்துவ கோரிக்கையை முன்வைக்கின்றன. இந்த தேசிய அழிப்பை பாட்டாளி வர்க்கம் ஏற்றுக் கொள்ள மறுக்கின்றது. ஏகாதிபத்தியம் தேசிய முதலாளித்துவத்தை அழித்து ஒழிக்கும் போது, அதில் ஜனநாயகம் மற்றும் தேசத்தின் பாதுகாப்பு குறித்து போராடுகின்றது. புதிய ஜனநாயகப் புரட்சி உள்ளடக்கத்தில் தேசிய முதலாளித்துவத்தின் தேசிய கோரிக்கையையும் இணைத்தே முன்னெடுக்கின்றது. அதை தனது சொந்த தலைமையில் முன்னெடுப்பதில் பாட்டாளி வர்க்கம் தயங்கியதில்லை. அதை மூன்றாம் உலக நாடுகளின் சர்வதேசிய பொது வழியாக மார்க்சியம் முன்வைக்கின்றது.

இதனால், 'தேசியம்' முதலாளித்துவ கோரிக்கை அற்றதாகி விடுமா? தேசியம் என்பது தேசங்களின் உருவாக்கத்தை குறித்து நிற்கின்றது. இந்த தேசங்களில் தேசிய முதலாளித்துவம் தனது சுரண்டலை அடைப்படையாக கொண்டே தேசங்களை நிர்ணயம் செய்கின்றது. ஆனால் பாட்டாளி வர்க்கம் இந்த தேசியத்துக்கு பதில் சர்வதேசியத்தை முன்வைக்கின்றது. இது தேசியத்தின் சுரண்டல் வடிவத்தை திட்டவட்டமாக எதிர்த்து நிற்கின்றது. தேசியத்தை யாரும் குறிப்பாக புரிந்து கொள்ள முடியுமா? அல்லது பொதுவாக புரிந்து கொள்ள முடியுமா? நவகாலனி தேசத்தை பாட்டாளி வர்க்கம் முதலாளித்துவ தேசியம் அல்லாத வகையில் எப்படி தேசியத்தைப் புரிந்து கொள்வது? தேசியத்தை பாட்டாளி தேசியமாக புரிந்து கொள்வதா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அப்படியாயின் ஏன் புதிய ஜனநாயக புரட்சி அவசியமாகின்றது! அடிப்படையான கேள்வி நவகாலனிய நாடுகளில் தேசிய முதலாளித்துவ கூறுகள், தேசிய முதலாளித்துவ புரட்சியை கோராதா? அதற்கும் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்துக்குமிடையில் உள்ள வேறுபாடு என்ன? புதிய ஜனநாயக புரட்சிகர அரசில் தேசிய முதலாளிகள் இருப்பார்களா இல்லையா? தேசிய முதலாளித்துவ உற்பத்தி, அதை ஒட்டிய பண்பாட்டு அம்சத்தை பாட்டாளி வர்க்கம் அங்கீகரிக்குமா இல்லையா? இதில் இருந்து குறிப்பாக தேசியத்தை புரிந்து கொள்ளாத தேசியம் எப்படி வேறுபடுகின்றது? கேள்வி தேசிய முதலாளித்துவம் தனது கோரிக்கையை முன்வைக்கின்ற போது, அதில் இருந்து திட்டவட்டமாக சர்வதேசியம் எப்படி வேறுபடுகின்றது. இது திட்டவட்டமாக வர்க்கக் கண்ணோட்டம் கொண்டவை. ஒரே வேறுபாடு தேசியம் முதலாளித்துவ கோரிக்கை என்பதை அங்கீகரிப்பது தான். ''குறிப்பாக'' இதை மறுப்பது, இல்லை என்பதும் உள்ளடக்கத்தில் முதலாளித்துவத்துக்கு சர்வதேசியத்தை அடகுவைப்பதாகும். தமிழீழ புதிய ஜனநாயக கட்சி என்பது, ஐக்கிய முன்னணிக்கு (முன்னணி முரண்பட்ட வர்க்கத்தை தேசியக் கோரிக்கையிலும், சர்வதேசிய கோரிக்கையிலும் ஏற்றுக் கொள்கின்றது.) பதில் கட்சியை (கட்சி முரண்பட்ட வர்க்க கோரிக்கையை மறுக்கின்றது) பிரகடனம் செய்யும் போது, புதிய ஜனநாயகப் புரட்சியை முதலாளித்துவ புரட்சியாக்கி, சர்வதேசிய கடமையை வர்க்கம் கடந்த தேசியத்தின் பின் கைவிடக் கோருகின்றது. ஏகாதிபத்திய சகாப்தத்தைப் புரிந்து கொள்வதும், இது உலகை உலகமயமாக்கி வரும் போக்கில் தேசங்கள் அழிக்கப்படும் போது, ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தில், தேசிய கடமையை பாட்டாளி வர்க்கம் நிறைவு செய்ய அதாவது ஜனநாயக கடமையையும் தனது தலைமையில் முன்னெடுப்பதில் தான், புதிய ஜனநாயகப் புரட்சி சர்வதேசிய வழியாக உள்ளது. இது தேசியத்தின் கடமையை நிறைவு செய்யும் போது, அதன் வர்க்க அடிப்படையை தெளிவாக வரையறுக்கின்றது. அதன் வர்க்க சக்திகளின் பிரதிநிதித்துவத்தை தெளிவாக புதிய ஜனநாயக புரட்சி வரையறுத்து அங்கீகரிக்கின்றது. இதுதான் அடுத்த கட்ட வர்க்கப் புரட்சியை, பாட்டாளி வர்க்கம் எடுத்துச் செல்ல அணிகளை அரசியல் மயமாக்கின்றது. புதிய ஜனநாயக கடமையை முடிவுக்கு கொண்டு வந்து (தேசியம் முதலாளித்துவ கோரிக்கையை உள்ளடக்கிய ஜனநாயகப் புரட்சிகர கடமை முடிவுக்கு வந்ததை என்பதை அங்கிகரித்து), சோசலிச புரட்சியை நடத்த, புதிய ஜனநாயக கட்டத்தின் வர்க்க பகுப்பாய்வும், அதன் அடிப்படையிலான அணிதிரட்டலும், அடிப்படையான அரசியலே புரட்சிகரமான அரசியல் வழியாகும்.

ஐக்கியம் பற்றிய கட்டுரையில் ''... சிறுபான்மை மத மக்கள், சைவ ஆதிக்க சக்திகளது, மத மூட நம்பிக்கை கருத்துக்களின் ஒடுக்கு முறைக்கும் முகம் கொடுக்கின்றனர். ஒடுக்கப்பட்ட சாதி மக்கள் வேளாள சாதிய சக்திகளின் சாதி ஒடுக்குமுறை கருத்துக்களுக்கும் முகம் கொடுக்கின்றனர்'' இலங்கை நிலைமையை மிக மோசமாக புரிந்து கொண்ட வடிவம் இது. இந்திய இனவாதிகள் மற்றும் சாதி சங்கங்கள் வடிவில் இலங்கை நிலைமையை விளக்குவது அபத்தமானது. சைவ ஆதிக்கம், மற்றைய மதங்கள் மீது ஒரு ஆதிக்க மதப் போக்காக காணப்படுகின்றதா? என்ன பருமையான ஆய்வு இதற்கு உண்டு. மிக மோசமான தேசிய விடுதலை இயக்கங்கள் கூட சைவ அடிப்படை வாதத்தைக் கொண்டு அணிதிரட்டியதுமில்லை, வன்முறையைக் கையாண்டதுமில்லை. இதில் ஒரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முற்போக்கான தன்மையை கொண்டிருந்ததுக்கு காரணம், சைவ மதம் மீதான ஆழமான மதப் பற்றின்மையேயாகும். அத்துடன் மத ஆதிக்க சக்திகள் ஒரு அரசியல் சக்தியாக தமிழ் சமூகத்தில் உருவாகிவிடவில்லை. தற்செயலான உதிரிச் சம்பவங்கள் அரசியல் ஆதிக்கமின்றி நடக்கின்ற போது அது பொதுமையாகிவிடாது. இதை பார்க்க தவறி சைவ ஆதிகத்தை முன்னிலைப்படுத்தி முதன்மை முரண்பாடுகளில் ஒன்றாக காட்டுவது, சிறுபான்மை மதப் பிரிவுகளை, அதன் பிற்போக்கு தன்மையுடன் சலுகை வழங்கி அணிதிரட்ட முயலும் காரியவாதமாகும். சமூகத்தில் ஆதிகத்தில் உள்ள சைவ பண்பாட்டை விமர்சிப்பதை இட்டு விமர்சனம் கேள்விக்கு உள்ளாக்கவில்லை.

அடுத்து சாதி ஒடுக்கு முறையை வேளாள சாதியமாக காட்டுவதும், அதன் ஒடுக்கு முறையாக காட்டுவதும், அரசியலில் சாதி சங்க நிலையாகும். இந்தியாவில் சாதிய ஒடுக்கு முறைக்கு எதிராக பார்ப்பானை முன்வைப்பது எப்படி அபத்தமாகவும், சாதி சங்க நிலையாக இருக்கின்றதோ, அதுவே இங்கும் பொருந்தும். இந்தியாவில் பாாப்பனை அல்ல, பார்ப்பானிய சிந்தனைக்கும் அதன் பண்பாட்டு கலாச்சாரத்துக்கும் எதிராகவே மார்க்சியம் சாதிய ஒடுக்கு முறையை இனம் காட்டி, அதை ஒழிக்க போராடுகின்றது. இந்த பார்ப்பானிய சிந்தனையில் இருந்து விடுபடும் எந்த சாதிப் பிரிவு நபரும், சாதிக்கு எதிராக போராட முடியும். அது போல் பார்ப்பானிய சிந்தனையை கொண்ட எந்த சாதிப் பிரிவும், சாதிய ஒடுக்க முறையை கையாள முடியும். இங்கு குறித்த சாதிக்கு மட்டும் அவை குறிப்பானவையல்ல. சாதியின் நலன்களை அதிகம் அனுபவிக்கும் படிநிலைச் சாதிப் பிரிவுகள், அதை பாதுகாக்க சாதிய வன்முறையில் ஈடுபடுவது அதிகமாக இருக்கும். நலன்களை அடிப்படையாக கொண்டு மட்டுமே சாதிய வன்முறையும், ஒடுக்குமுறையும், அடக்குமுறையும் காணப்படுகின்றது. நலன் சார்ந்து படி நிலை சாதிகள், படி நிலை வன்முறையை கையாள்வதை பொதுவாக காண மறுத்து, குறித்த சாதி மீது மட்டும் குறிப்பிடுவது மார்க்சிய வழியல்ல, சாதிய அரசியலாகும். அதாவது இந்தியாவில் இன்று படிநிலை சாதிய ஆதிக்க வடிவில், அதிகளவில் சாதிய வன்முறையில் ஈடுபடும் வன்னியர், வேளார், கள்வர் போன்ற ஆதிக்க சாதிகளை குற்றம் சாட்டுவதும், அவர்களை மட்டும் குறித்த அடையாளம் காட்டுவதும் மார்க்சியமல்ல. சாதிய ஒடுக்குமுறையில் படிநிலை சாதிப் பிரிவுகள் தமது சாதிய நலன்களில் இருந்து, மற்றைய பிரிவுகள் மீது வன்முறையை கையாளுகின்றது. இந்த அடிப்படை தான் சாதிக் கட்டமைவை பாதுகாக்கின்றது. இந்த சாதிய படி நிலையை பார்ப்பானிய சித்தாந்தம், இந்து மத வடிவம் ஊடாக கட்டமைத்துள்ளது. சாதி ஒழிப்பில் பார்ப்பானிய சித்தாந்தத்தை வேரறுக்க வேண்டும். இதைக் கையாளும் எல்லா சாதிப் பிரிவுகளையும் ஈவிரக்கமின்றி எதிர்த்து போராட வேண்டும். ஆதிக்க சாதிகளின் குறித்த நலன்கள் சார்ந்து அதிக நலனை பெறுகின்ற போது, கையாளும் வன்முறை படிமுறைத் தன்மை கொண்டவையே ஒழிய, ஒரு சாதிக்குரியவை மட்டுமல்ல. அதனால் குறித்த சாதியை எதிராக நிறுத்துவது தவறானது, மாறக சாதிய கோட்பாட்டுக்கு எதிராக நிறுத்தமுடியும். இலங்கையிலும் பார்ப்பனிய சித்தாந்தமே சாதிய ஒடுக்கு முறை வடிவில் எதிராக நிறுத்தப்பட வேண்டும். பார்ப்பான் இருக்கின்றான இல்லையா என்பதல்லா அந்தச் சிந்தனை இருக்கின்றதா இல்லையா என்பதே இங்கு அடிப்படையாகும். இந்தியாவில் பார்ப்பனியம் நேரடிச் சாதி வன்முறையில் ஈடுபவது அருகிப் போன நிலையில், படிமுறை ஆதிக்க சாதிகள் அதை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கையாளுகின்றன. அதனால் அவற்றை (வன்முறையில் ஈடுபடும் சாதிகளை) எதிராக பிரகடனம் செய்வது திட்டவட்டமாக சாதி அரசியலாகும். இதுதான் இலங்கை நிலமையும். மாறாக பார்ப்பனிய சிந்தனையையும் அது சார்ந்த இந்து மதத்தையும் எதிராக நிறுத்தப்பட வேண்டும். இங்கு படிமுறை சாதிய நலன்கள் சார்ந்து வன்முறையில் ஈடுபடும் சாதிய போக்கை குறிப்பாக்கி விமர்சித்து எதிர்த்துப் போராட வேண்டும். இதை பொதுவாக்குவது சாதிய அரசியலாகும். சாதியத்துக்கு எதிரான பொதுவான போக்கு பார்ப்பனிய சித்தாந்ததுக்கு எதிரான அரசியலாகும்.

''யாழ், சைவ, வேளாள ஆதிக்க கருத்தமைவு, முஸ்லீம் மக்களையும், மலையகத் தமிழ் மக்களையும் இணைக்கவும் சிறுபான்மையினர் ஐக்கியத்துக்கு தடையாகவும் விளங்கியது.'' இலங்கை நிலைமையை யதார்த்தத்துக்கு புறம்பாக புரிந்து திரித்துக் காட்டுவது நிகழ்கின்றது. மலையக, முஸ்லீம் மக்களின் ஐக்கியத்துக்கு தடையாக இருந்தது, விடுதலை இயக்கங்களின் அரசியல் தன்மையே ஒழிய, சாதிய மத வடிவங்கள் அல்ல. எந்த இயக்கமும் சாதி, மத அடிப்படையில் தங்கள் அணிகளை திரட்டியது கிடையாது. (அவை இன அடிப்படையிலேயே தங்களை அணிதிரட்டின.) விதிவிலக்கான தனிப்பட்ட சம்பவங்கள் பொதுவானவையாகிவிடாது. ஏன் சைவ வேளாள ஆதிக்க கருத்து தமிழீழப் போராட்டத்தில் மற்றைய சாதிப் பிரிவுகளை அணிதிரட்டவில்லையா? சைவ வேளாள ஆதிக்க கருத்து அதையும் அல்லவா தகர்த்திருக்க வேண்டும். ஆனால் போராட்டத்தில் வேளார் அல்லாத பிரிவு அல்லவா, அதிகமாக அணிதிரண்டுள்ளது. இங்கு ஏன் சிங்கள மக்களின் ஐக்கியமும் தகர்க்கப்பட்டது. இதை சாதிய மத விளக்கங்கள் விளக்கிவிடமாட்டாது. இது கரியவாத நோக்கில் விளக்குவதாகும். போராட்டத்தின் தவறுகளை அரசியல் ரீதியாக புரிந்து கொள்ளாத வரை, தவறுகளை இது போன்ற குறுகிய அரசியல் போக்கில் விளக்குவது நிகழ்கின்றது.

தமிழீழப் போராட்டத்தில் சாதிய மத அணிதிரட்டல் நடந்ததாகவோ, அதனால் தான் சிறுபான்மை மற்றும் பெருபான்மை மக்கள் பிரிவு மீது வன்முறை கையாளப்பட்டது என்பதை விளக்க, எந்த விதமான பருமையான ஆய்வும் இது வரை இவர்களிடம் கிடையாது. சொந்த மனவிருப்பங்கள், போராட்டத்தில் இருந்து விலகிச் சென்ற போக்கில், அரசியல் ரீதியாக ஆய்வுகளை கைவிட்ட தன்மை, குறுகிய குறுக்கு வழியில் விளக்குவது நிகழ்கின்றது. பள்ளிவாசல் தாக்குதல், விகாரைத் தாக்குதல் கூட மத அடிப்படை வாதத்தில் இருந்து நடத்தப்பட்டவையல்ல. புலிகளின் அரசியல் நிலையில் தாக்குதல் தன்மைகளை ஆராயின், இது தெள்ளத் தெளிவாக புரியும். சிறுபான்மை மற்றும் பெரும்பான்மை பிரிவு மக்கள் மீதான தாக்குதலும் சரி, சொந்த இனத்தின் மீதான வன்முறையையும் கூட, அதன் அரசியலில் நாம் தேட வேண்டுமே ஒழிய, குறுக்கு வழியில் அல்ல. சமூக இயக்கத்தில் இருந்து அன்னியமான, நடைமுறைக்கு எதிரான, சமூக மாற்றத்தை சிந்திக்காத புலியெதிர்ப்பு நபர்கள், குழுக்கள் புலியை அரசியலுக்கு வெளியில் நின்று விளக்குவது போல், விளக்கவது அரசியல் ரீதியாக அபத்தம் வாய்ந்தவை. இதை அவர்கள் மேலும் ''யாழ் சைவ வேளாள ஆதிக்கம் புதிய வடிவில் தன்னை மறு உருவாக்கம் செய்யப்பட்டது. இது தமிழீழ இயக்க தலைவர்களின் அறியாமை, தவறு அல்லது தமிழீழ குட்டி முதலாளிய அரசியலின் வெளிப்பாடு'' கடந்த கால தேசியப் போராட்ட சிதைவை, அதன் வன்முறைப் போக்கை, ஜனநாயக விரோதத்தை இப்படி விளக்குவது மார்க்சிய வழியல்ல. இதை சாதிய, இனத் தலைவர்கள் விளக்கிவிடும் பாதையாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரு சமுதாயத்தில் மதம், பண்பாடு, பொருளாதாரம் போன்ற பல்வேறு சமூக மேல்கட்டுமான கூறுகள் அதன் பொதுவான வெளிப்பாட்டை சமூக விளைவாக்கின்றது. இது எல்லா சமூகத்துக்கும் பொதுவானது. இங்கு போராட்டம் நிகழ்கின்ற போது அதிலும் பிரதிபலிக்கின்றது. ஆனால் ஒரு அரசியல் இயக்கம் இதை மட்டும் கொண்டு தனது தன்மையை வெளிப்படுத்துவதில்லை. வர்க்க அரசியல் போராட்ட தன்மையைக் கொண்டே சமூகத்தின் போக்கை, அதன் மீதான மாற்றத்தை, தனது பிரதிபலிப்பை வெளிப்படுத்துகின்றது. ஒரு இயக்கத்தின் போக்கை அதன் அரசியல் மீது, அதன் வர்க்க தன்மை மீது ஆராய வேண்டும். இங்கு மதச், சாதிய கூறுகள் செயல்படலாம், செயல்பாடமலும் போகலாம். ஆனால் சாதிய, மத கூறுகளை அடிப்படையாக கொண்டு சமூகப் போக்கை ஆய்வு செய்வது மார்க்சியமல்ல. மார்க்சியம் சமூக இயக்கத்தை அதன் வர்க்கத் தன்மையில் இருந்து, உற்பத்தி உறவுகளில் இருந்து, வர்க்க போராட்டங்களில் இருந்து ஆராயக் கோருகின்றது. அங்கு மதம், சாதியக் கூறுகள் இருக்கும், இருக்காமல் விடும் அல்லது தன்னை வெளிப்படுத்தாது. இன்று முஸ்லிம் மக்களை மதச் சிறுபான்மையாக விளக்கும் பல்வேறு விளக்கங்கள் கூட இதில் இருந்தே தோன்றுகின்றது. முஸ்லிம் மக்களை ஒரு சிறுபான்மை தேசிய இனம் என்பதை மறுத்து, மதச் சிறுபான்மை இனமாக காட்டுவதும், இந்து சைவ வேளாள விளக்க சாதிய மதச் கண்ணோட்டத்தில் இருந்தே வருகின்றது. இதனால் முஸ்லிம் மக்கள் மீதான தாக்குதலை மதத் தாக்குதலாக காட்டுவதன் ஊடாக, முஸ்லிம் மக்கள் மீதான வன்முறையை, சிறு தேசிய இனம் மீதான தாக்குதல் என்பதை மறுப்பது நிகழ்கின்றது. இது அரசியல் ரீதியாக முஸ்லிம் மக்கள் மீதான தாக்குதலை ஊக்குவிக்கின்றது. ஏனெனின் தாக்குதலின் தன்மையை தவறாக விளக்கும் போது, தாக்குதல் மறைமுகமாக ஊக்கம் பெறுகின்றது. இதுபோன்று தலைவர்களின் அறியாமை, தவறு என்பது அரசியலைக் கடந்து விளக்குவதாகும். அறியாமையும், தவறும் எல்லாப் போராட்டத்திலும் இருப்பவைதான்.

அடுத்து அரசியலை கைவிட்டுச் செல்லும் மார்க்கத்தைப் பார்ப்போம் "வல்லரசியம், நவகொலனிய கட்டத்தில் என்றும் இல்லாதவாறு உலகமயமாகி வருகின்றது" இங்கு வல்லரசியம் என்ற சொற்பிரயோகம் அரசியல் பிறழ்ச்சியின் விளைவாகும். ஏகாதிபத்தியம் என்ற சொல்லுக்குப் பதிலாக வல்லரசியம் என்ற சொல்லை முன்வைப்பதன் மூலம், ஏகாதிபத்திய அரசியல் உள்ளடக்கம் சந்தப்படுத்தப்படுகின்றது. வல்லரசு என்பது அனைத்து மேலாதிக்க அரசுகளையும் குறிக்கும். வல்லரசு என்பது வல்லமை கொண்ட அரசாக மட்டும் இருக்கும் போது, அது ஏகாதிபத்திய மூலதன மற்றும் நிதி ஆதிகத்தை மறுக்கின்றது. ஏகாதிபத்தியம் வல்லரசு என்ற வல்லமையில் உருவானவையல்ல. ஏகாதிபத்தியம் எல்லாவற்றிலும் ஏகபோகத்தைக் கொண்டு, வல்லமைக்கு பதில் அடக்கியாளும் புதிய மூலதனத்தின் ஆதிகத்தைக் குறித்து நிற்கின்றது. லெனின் ஏகாதிபத்தியத்தை வரையறை செய்த புதிய சூழல் நிலவ முன்பு, வல்லரசுகள் யதார்த்தத்தில் இருந்தன. ஆனால் புதிய சர்வதேச நிலமை ஏகாதிபத்திய வரையறையை வரையறுக்க லெனுக்கு வழிகாட்டியது. சொற்களை தமிழ்ப் படுத்துகின்றோம் என்ற பெயரில், அரசியல் ரீதியாக ஒரு சொல்லின் போராட்ட அரசியல் மார்க்கத்தை சிறுமைப்படுத்துவது கூட, நவீன மொழியில் ஊடான அரசியல் திரிபுவாதம் தான். மொழியில் சொற்களை மாற்றுவதன் மூலம், அச் சொற்களின் உள்ளடக்கத்தை யதார்த்தமான உலகில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாற்றிவிடுவதில்லை. ஆனால் புதிய சொற்களின் ஊடாக உள்ளடக்கம் திரிக்கப்பட்டு அதன் மீதான கடுமையை மந்தப்படுத்துகின்றனர். தாழ்ந்த சாதிகளை அரிஜன், தலித் ஆக்கியதும், சேரிகளை காலனியாக்கியதும், கற்பழிப்பை வல்லுறவு ஆக்கியதும், மார்க்சிய தலைவர்களுக்கு பதில் புத்திஜீவிகள் என்று பெயரை மறைப்பதும், கம்யூனிசக் கட்சியை சோசலிச மற்றும் புதிய ஜனநாயக கட்சியாக்குவதும், ஏகாதிபத்தியத்தை வல்லரசாக்குவதும், அரசியல் ரீதியில் வர்க்கப் போராட்டத்தை சிதைக்கும் திரிபு தான்.

உலகமயமாதல் நவகாலனித்துவ கட்டத்துக்குரியது என்பது அரசியல் ரீதியில் தவறானது. உலகமயமாதல் காலனியம், அரைக் காலனியம், நவகாலனியம், மறு காலனியம் என்று பல்வேறு ஆதிக்க வடிவங்கள் மீது கட்டமைக்கப்படுகின்றது. அத்துடன் உலகமயமாதல் நவகாலனிய கட்டத்தில் தொடங்கியது அல்ல. ஏகாதிபத்தியமாக முதலாளித்துவம் முதிர்ந்தது முதலே இது தீவிரமாகியது. இந்த வளர்ச்சியின் உச்ச நிலையை இன்று நாம் சந்திக்கின்றோமே ஒழிய, இதன் வளர்ச்சியின் திடீர் வேகம் ஏகாதிபத்திய உருவாக்கத்திலேயே தொடங்கிவிட்டது.

அடுத்து உலகமயமாதல் நவகாலனிய காலத்தில் ஏகாதிபத்திய மயமாதலை உருவாக்கின்றது என்பது முழுமையானவையல்ல. உலகமயமாதல் ஏகாதிபத்திய நாட்டை சார்ந்து விரிவாகவில்லை. தேசம் கடந்த தனிப்பட்ட பன்நாட்டு கம்பனிகள் சார்ந்தே விரிவாக்கப்படுகின்றன. இன்று பெரும் மூலதனமாக மாறியுள்ள தனிப்பட்ட தனியார் மூலதனங்கள் சார்ந்தே உலகமயமாதல் விரிவாகின்றது. இந்த விரிவாக்கத்தில் தனிப்பட்ட ஏகாதிபத்திய நாட்டுக்கும், தனிப்பட்ட நபர்களின் மூலதனத்துக்கும் இடையில் உள்ள முரண்பாட்டில், உலகமயமாதல் மூலதனத்தைச் சார்ந்து நிற்கின்றது. ஆனால் ஏகாதிபத்திய நாடுகள் இந்த மூலதனத்தை பிரதி செய்வதால் அந்த நாட்டு ஆதிக்கம் பொதுவான வடிவமாக காணப்படுகின்றது. ஆனால் இன்று மிகப் பெரும் மூலதனத்துக்கிடையில் நடக்கும் திருமணங்கள் (திருமணம் என்றே முதலாளித்துவ அறிஞர்கள் அழைக்கின்றனர்.) விவாகரத்தின்றி, உருவாகின்ற போது, இது ஏகாதிபத்திய நாடுகளுக்குள் புகுந்து விடுகின்றது. இதனால் ஏகாதிபத்திய நாட்டு நலனை விட மூலதனம், தனது நலனை முதன்மையாக கொள்கின்றது. இதன் போக்கில் தான் பிராந்தியங்கள் ஒன்று சேர்வதும், தமக்குள் திருமணத்தை செய்வதை கோருவதும் நிகழ்கின்றது. இது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பெரு மூலதனங்களை திரட்டி சில ஏகாதிபத்தியங்களை ஒன்றாக்கி ஒரு சுப்பர் ஏகாதிபத்தியமாவதை பொது அரசியல் மார்க்கமாக்கின்றனர். ஆனால் மூலதனம் தனது சொந்த குணத்தை அடிப்படையாக கொண்டு ஏகாதிபத்திய எல்லையை தாண்டி, மூலதனத்தை தனிப்பட்ட கம்பனிக்குமிடையில் குவிக்கின்றது. இது ஏகாதிபத்திய நாட்டுக்கும் தனிப்பட்ட பன்நாட்டு கம்பனிக்கிடையில் முரண்பாட்டை கொண்டு வருகின்றது. பன்நாட்டு கம்பனியின் மூலதனம் ஒரு துறையில் இருந்து மற்ற துறைக்குள் தாவுகின்ற வளர்ச்சி, கம்பனிக்கிடையிலான முரண்பாட்டை உருவாக்கின்றது. இங்கு இம் முரண்பாடுகள் ஏகாதிபத்திய கட்டமைவை சார்ந்தும், வெளியிலும் நிகழுகின்றது. ஆனால் உலகமயமாதல் ஏகாதிபத்திய அடிப்படை மீது தான் இன்னமும் தன்னை கட்டமைக்கின்றது. புதிய போக்கும், புதிய நிலைமையில் புதிய வழியில் வளர்ச்சியுற்று வருகின்றது. இதுவே உலகமயமாதலின் அடுத்த கட்ட பாய்ச்சலாகும். இது நிச்சயமாக தனிப்பட ஏகாதிபத்திய நாட்டை சார்ந்திருக்காது. இது சில ஏகாதிபத்தியத்தை ஒன்றிணைத்து அதைச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சார்ந்தும் நிற்கும். அதை கடந்து செல்லும் போது, கம்பனிகள் ஏகாதிபத்திய தன்மையை எடுத்துவிடும். இதுவும் ஒன்றை ஒன்று விழுங்கும் போது, பரந்து பட்ட மக்களை எதிரியாக எதிர் அணியில் நிறுத்தும். அதுவே இறுதியானதும், உச்ச சுரண்டலை விரிவாக்கும் மூலதன வளர்ச்சியின் எல்லையாகும். இந்த மூலதன வளர்ச்சி மறு உற்பத்திகளை விழுங்குவதை முடிவுக்கு கொண்டு வந்து விடுவதால், மக்களை ஒட்ட உறுஞ்சுவது மட்டுமே, ஒரே ஒரு நிகழ்ச்சிப் போக்காக மூலதனத்துக்கு முன்பாக இருக்கும்.

தமிழீழ புதிய ஜனநாயக கட்சி குறிப்பிடுவதைப் பார்ப்போம். "வல்லரசியத்தின் புதிய முகத்தை (இதை அவர்கள் 1970 களின் பிற்பகுதியில் என்று குறிப்பிடுகின்றனர்.) அதன் உட்சாரத்தில் புரிந்து கொள்வதில் தொழிலாளி வர்க்க அரசியல் இயக்கம் கூட கோட்பாட்டு முன்முயற்சி எடுக்க தவறியது. இதனால் இன்றும் கூட நவகொலனியமாக அல்லது புதுக் கொலனியமாக மாறிக் கொண்டிருப்பதாகவே சில தொழிலாளி வர்க்க இயக்கங்கள் பார்க்கின்றன." என்ற கூறுகின்ற கூற்றை பார்ப்போம். இங்கு முதலில் புதுக் காலனி என்ற கூறுவதும், மறு காலனி என்று கூறுவதுக்கும் இடையில் கூட கோட்பாட்டு வேறுபாடு நிறையவே உள்ளது. புதுக் காலனி என்பது முன்பு காலனியாக இருந்தை மறுக்கின்றது அல்லது மென்மைப்படுத்தி அதன் தொடர்ச்சியை சிதைக்கின்றது. மறுகாலனி முந்தியதன் தொடர்ச்சியை ஏற்றுக் கொள்கின்றது. அது மீண்டும் நாட்டை காலனியாக்க, துடிப்பதை தெளிவாக்கின்றது. 1970 களின் பின்னால் தான் நவீனமயமாக்கல், உலகமயமாதலை கோர முகத்தை வெளிக்காட்டியது எனின், அதற்கு முன்பு என்னவாக, எப்படி இருந்தது. 1970 களின் பின்பு உலகமயமாதல் நவகாலனியை உருவாக்கியது எனின், அதற்கு முன்பு அந்த நாடுகளில் இருக்கவில்லையா? ஏன் அதற்கு முன்பு நவகாலனிய நாடுகள் உலகில் இருக்கவில்லையா?

இங்கு அடிப்படையான விவாதம், உலகமயமாதல் ஏகாதிபத்திய தோற்றத்திலேயே அதன் அரசியல் உள்ளடக்கமாகியது. இரண்டு ஏகாதிபத்திய யுத்தங்கள் சரி, பின்னால் நீடித்த நெருக்கடிகள் சரி எதை காட்டுகின்றன. உலகை மூலதன வடிவில் உலகமயமாக்கும் எல்லையில் நடந்தவை தான். ஒவ்வொரு கால கட்ட வளர்ச்சியும் பாய்ச்சலை நிகழ்த்துகின்ற போது, பண்பு மாற்றமடைகின்றது. இந்த பண்பு மாற்றம் முந்தையதின் தொடர்ச்சி தான். இந்த பண்பு மாற்றம் எல்லா நாடுகளையும் ஒரே விதமாக அணுகுவதில்லை, கையாள்வதில்லை. அது அந்த நாடுகளின் குறிப்பான நிலைமையுடன் தொடர்புடையது. எனவே நிகழ்கின்ற மாற்றங்கள் உள்நாட்டு வர்க்கப் போராட்டத்தின் குறிப்பான நிலைமையுடன் தொடர்புடையது. ஒரு நாட்டின் பண்பியல் ரீதியான மாற்றம் சிலவேளைகளில் மெதுவாகவும், சில வேளைகளில் பாய்ச்சல் மூலமும் நிகழ்கின்றது.

முதலாளித்துவம் பிரான்சில் புரட்சியூடாக பாய்ச்சல் ஊடாக நிகழ, பல ஐரோப்பிய நாடுகளில் மெதுவாக படிப்படியாக நிறைவேறியது. இதுதான் உலகமயமாதல் போக்கில் வெளிப்படுத்தும் போக்காகும். அரைக்காலனி நவகாலனியாகவோ, மறு காலனியாகவோ மாறுவது என்பது எப்படி எந்த நிலைமைகள் ஊடாக எந்த பண்பு மாற்றத்தின் ஊடாக வந்தடைந்தது, என்பது சமூக பொருளாதார பண்பாட்டு நிலைமைகளுடன் தெள்ள தெளிவாக வரையறுக்கப்பட வேண்டியவை. ஒரு சமூகம் பற்றிய ஆய்வு சமூக பொருளாதார பண்பாட்டு மாற்றங்கள் மீது நடத்தப்பட்டு நிறுவப்பட வேண்டும். இதை மறுத்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குற்றச்சாட்டுகளை வைப்பதன் மூலம், விருப்பங்கள் சமூக வடிவங்களாகி விடாது. உலகம் முழுக்க நவகாலனி அரசுகளாக இருப்பதாக காட்டும் போக்கு, இந்த குற்றச்சாட்டின் பின் வெளிப்படுகின்றது. ஏகாதிபத்திய உலகமயமாதல் வளர்ச்சியில் ஏற்பட்ட மாறுதல், உலகளாவிய வர்க்கப் போராட்ட வீழ்ச்சியில் நடந்தது. சோவியத்தின் முதலாளித்துவ மீட்சியை தொடர்ந்து, 1970 களின் இறுதியில் சீனாவில் நடந்த முதலாளித்துவ மீட்சி சர்வதேச ரீதியாக வர்க்கப் போராட்ட சிதைவை ஏற்படுத்தியது. இது உலகமயமாதலை தீவிரமாக்கியது. ஆனால் இந்த தீவிர மயமாக்கல் ஒவ்வொரு நாடுகளின் குறிப்பான வர்க்கப் போராட்ட நிலைமைகளுடன் தொடர்புடையதாக இருப்பது, அதன் உள்ளார்ந்த விதியாக இருந்தது. பலமாக வளர்ச்சி பெற்ற பாட்டாளி வர்க்கம், வர்க்கப் போராட்டத்தை தொடர்ந்த நாடுகளில் உலகமயமாதல், வர்க்கப் போராட்டம் சிதைந்த நாடுகளை விட மெதுவாகவே நடைமுறைக்கு வந்தது. உலகமயமாதல் பண்பு மாற்றத்தை திகதி குறித்தோ, கால எல்லை குறித்தோ உலகளவில் பொதுவாக வரையறுத்து விடமுடியும். ஆனால் அதை தனிப்பட்ட நாடுகளுக்கு பொதுமைப்படுத்த முடியாது. மாறாக சமூக பொருளாதார பண்பாட்டு மாற்றத்தில் இருந்து தனிப்பட்ட நாடுகளுக்கு வரையறுக்க முடியும். இன்றும் நவகாலனி அல்லாத காலனிகளும், மறுகாலனிகளும், அரைக்காலனிகளும் உலகில் நிலவுகின்றன, உருவாகின்றன. அரைக் காலனிய பொருளாதார வடிவம் உலகமயமாதலின் நீதி மூலதனத்துக்கு முன், தனிப்பட்ட நாடுகள் முற்றாக நவகாலனிய பொருளாதார வடித்துக்குள் சோரம் போய்விடவில்லை. இதனால் மட்டுமே ஏகாதிபத்தியத்துக்கும் மூன்றாம் உலக நாடுகளுக்கும் இடையில் முரண்பாடுகள் தொடர்ச்சியாக நிலவுகின்றன. நவகாலனித்துவம் முழுமை பெற்று முதர்ச்சியடைகின்ற போது மறுகாலனியாக்க வடிவமே அங்கு நிகழ்ச்சி போக்காக இருக்கின்றது. இது இராணுவ ரீதியாக ஆள்வதை குறித்தல்ல, பொம்மை அரசு ஊடாக ஆள்வதைக் குறித்தும் நிற்கின்றது. அரைக்காலனி என்பது தேசிய விடுதலையைத் தொடர்ந்து உருவானதால் தேசிய பொருளாதாரத்தை தக்கவைக்கின்றது. அதே நேரம் ஏகாதிபத்திய பொருளாதாரத்தை பாதுகாத்து விரிவாக்க உதவி செய்கின்றது. இதில் ஏற்படும் பண்பியல் மாற்றம் (ஏகாதிபத்தியத்தை விரிவாக்கும்) நவகாலனியாக்கத்தை உருவாக்கின்றது. இது முதிர்வுறும் போது மறுகாலனியாக்கம் நிறைவுறுகின்றது. இந்த நவகாலனித்துவத்தை நோக்கிய சீரான மாற்றமின்றி மறுகாலனியாக்கம் நிகழமுடியும். இது உள் நாட்டு வர்க்கப் போராட்டம் தீவிரமாக உள்ள போது, நவகாலனியாக்கம் நிகழ்வது பின்தள்ளப்படும் நிலமையாலும், உலகளாவிய திடீர் திருப்பங்கள மற்றும் வர்க்கப் போராட்டத்தின் பின்னடைவுகள் வேகமான மறுகாலனியாக்கத்தை உருவாக்கும். அதாவது புதிய ஜனநாயகப் புரட்சி முதலாளித்துவ புரட்சியை குறுகிய காலத்தில் பூர்த்தி செய்து, சோசலிசத்தை நோக்கி எவ்வளவு வேகமாக நகர்கின்றதோ, அதுபோல் நவகாலனித்துவ மாற்றத்தை மிக குறுகிய காலத்தில் நிறைவு செய்து மறுகாலனியாக்கத்தை நிறைவு செய்யும்.

அடுத்து குறிப்பிடுவதைப் பார்ப்போம். 'தமிழீழ மக்கள் கட்சி' போல், ''ஜப்பானை நவகொலனிய அரசாக பார்க்கின்றனர்.'' என்று தமிழீழ புதிய சனநாயக கட்சி குறிப்பிடும் போது, யப்பானை நவகாலனிய அரசாக ஏற்றுக் கொள்ளும் அரசியல் வெளிப்படுகின்றது. இது ஏகாதிபத்திய வரையறையை யப்பானுக்கு பொருத்த மறுக்கின்றது. இது ஆசியாவில் கையாளும் ஏகாதிபத்திய விரிவாக்கத்தை குறிப்பாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மூடிமறைக்கின்றது. நான் யப்பான் பற்றிய விவாதம் ஒன்றை இதே இதழில் தமிழீழ மக்கள் கட்சி விவாதத்தில் செய்துள்ளேன். யப்பான் ஒரு ஏகாதிபத்திய அரசாக இருக்க, அதை நவகாலனிய அரசாக காட்டும் அரசியல் அடிப்படை வர்க்கப் போராட்ட திரிபில் எழுபவை தான். இது லெனின் வரையறுத்த ஏகாதிபத்திய வரையறையை அரசியல் உள்ளடக்கத்தில் மறுக்கின்றது. தமிழீழ மக்கள் கட்சி ஜப்பானை நவகாலனியாக பார்க்க, தேசபக்தன் அதை அவர்களுக்கு திருத்தம் செய்து வல்லரசிய நவகாலனியாக பார்ப்பதாக விளக்குவதுடன், இந்த விளக்கத்தை தாமும் ஒப்புக் கொள்வதாக குறிப்பிடுகின்றனர். யப்பான் எந்த ஏகாதிபத்தியத்தின் நவகாலனியாக இருக்கின்றது. உலக உற்பத்தியில் இரண்டாம் இடத்தை வகிக்கும் யப்பானின் நிலையை சற்றுப் பார்ப்போம்.

1995 இல் உலக சனத் தொகையில் யப்பான் 2,23 சதவிகிதத்தை கொண்டிருந்த போது, உலக வருமானத்தில் 17,68 சதவிகிதத்தை யாப்பான் உலகமயமாதல் மூலதனத்தின் ஊடாக திரட்டியது. 1998 இல் உலகின் உலகமயமாதலை தீவிரமாக்கிய 100 முன்னணி நிறுவனங்களில், 22 பன்நாட்டு நிறுவனங்கள் யப்பானுக்கு சொந்தமாக இருந்தது. இதன் மொத்த மூலதனத் திரட்சி 8,33,900 கோடி பிராங்காகும். ஐந்தாவது இடத்தில் உள்ள முதல் யப்பானிய நிறுவனத்தின் மூலதனம் 79,300 கோடி பிராங்காக இருக்க, முதல் 100 இல் இறுதியான யப்பான் நிறுவனத்தின் மூலதனம் 15,200 கோடி பிராங்காகும். இது போல் முதல் 200 பன்நாட்டு நிறுவனங்களில் 36 யப்பானுடையதாகும். இது போல் முதல் 40 உலக வங்கியில் 10 யப்பானுடையதாகும். முதல் பத்து வங்கியில் 6 யப்பானுக்கு சொந்தமானதாகும். முதல் 40 வங்கியில் யப்பானுடைய 10 வங்கியின் மூலதனம் 4,25,332 கோடி டொலராகும். 1990 இல் முதல் பத்து பணக்காரர்களில் யப்பானைச் சேர்ந்தவர்கள் ஐந்து பேர் இருந்தனர். 1999 இல் முதல் 200 பணக்காரக் கும்பலில் 19பேர் யப்பானியர் ஆவர். 2000 ஆண்டில் முதல் 400 பணக்கராரில் 27 பேர் யப்பானைச் சேர்ந்தவர்கள். இதில் முதல் பணக்காரனின் சொத்து 1940 கோடி டொலராக இருக்க இறுதியான முதல் 400 பணக்காரனின் சொத்து 160 கோடி டொலராக உள்ளது. இது யப்பானின் நிலையை தெளிவாக படம் பிடித்துக் காட்டுகின்றது. உலகமயமாதலில் யப்பான் எப்படி நவ காலனியாக இருந்த படி, மூலதனத்தை திரட்ட முடியும். லெனின் ஏகாதிபத்திய வரையறையை யப்பான் உள்ளடக்கின்றது. லெனினின் வரையறை இந்த நூலில் உள்ளது. பார்க்க. யப்பான் ஒரு ஏகாதிபத்தியமே ஒழிய வல்லரசோ, நவகாலனியோ அல்ல. உலகமயமாதலில் ஒரு பிரதான நாடு, உலக செல்வத்தில் இரண்டாவதாக சூறையாடும் நாடு, பற்றிய மூடிமறைப்பு ஏகாதிபத்தியத்தை திரித்து காட்டுவதாகும். சீன புரட்சியில் மாவோ சீனாவை ஏகாதிபத்திய நாடாகவே வரையறுத்தார். நவசீனப்புரட்சியின் வரலாற்று நூலில் பக்கம் 259 இல் ஜப்பானிய ஏகாதிபத்தியம் பற்றி தெளிவாகவே கூறப்படுகின்றது. மாவோ யப்பானை "சீன - ஜப்பானிய யுத்தம் இருபதாவது நூறாண்டின் முப்பதாவது ஆண்டின் ஆரம்பமாகும். பத்தாண்டுகளில், ஒரு அரைக்காலனி அரை நிலப்பிரபுத்துவ சீனாவிற்கும் ஓர் ஏகாதிபத்திய ஜப்பானுக்கும் இடையே நடைபெறும் ஒரு ஜீவ மரண யுத்தம் அன்றி வேறு எதுவும் அல்ல. இங்குதான் பிரச்சினை முழுவதின் அடிப்படை அடங்கியுள்ளது" என்றார். ஒரு ஏகாதிபத்தியம் தனது தன்மையில் இருந்து பின்நோக்கிச் செல்வதில்லை. ஏகாதிபத்தியம் ஒரு பொருளாதார முறையின் விளைவு என்பதால், அது பின் நோக்கி நகர்வதில்லை. மாற்றம் அதைத் தாண்டி செல்லுதல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அல்லது ஒரு வர்க்கப் புரட்சி என்ற இரு போக்குதான் நிகழ்ச்சி நிரலாக உள்ளது. தாண்டுவது என்பது, உலகமயமாதலில் நாடு கடந்த ஏகாதிபத்திய மயமாதலை பன்நாட்டு நிறுவனங்கள் வந்தடைவதாகும்.

சீனப் புரட்சியில் மாவோ வரையறுத்த யப்பானிய ஏகாதிபத்தியம், இன்று திடீரென வல்லரசு நவகாலனியாக மாறியது என்பது அரசியல் திரிபாகும். இதை தேசபக்தன் இதழ் கூறுகின்ற போது, ஏகாதிபத்தியத்துக்கு பதிலாக முன்வைக்கும் வல்லரசு பற்றிய கோட்பாடு, அரசியல் சிதைவையும் நிர்வாணப்படுத்துகின்றது.

மூன்று உலக கோட்பாட்டை தொட்டு அதில் "... மேலும் ஒருபடி சென்று ரசியாதான் மிகக் கொடூரமான யுத்த வெறி கொண்டது..." என்று கூறுவதன் மூலம் தேசபக்தன் இதை மறுக்கின்றது. சர்வதேச நிகழ்வுகளை என்? எதற்காக? என்ற கேள்வியின்றி மறுக்கின்ற போது, பொது வர்க்க அரசியலில் இருந்து விலகிச் சென்று விடுகின்றனர். 1960 களில் சீனா, சோவியத் விவாதம் சோவியத் யூனியனை சமூக ஏகாதிபத்தியமாக வரையறுத்த போது, அதன் அரசியல் உள்ளடக்கம் இதை தெளிவாகவே வரையறுத்தது. மாபெரும் விவாதத்தில் சீனா சார்பாக சீன கம்யூனிஸ்ட் கட்சி ஒன்பதாவது விமர்சனத்தை தொடர்ந்து ''குருசேவ் ஏன் விழுந்தார்?'' என்ற தலைப்பில் 21.11.1964 எழுதிய பகிரங்க கடிதத்தில் இருந்தும், பின்னால் 22.4.1970 இல் "லெனினியமா, சமூக ஏகாதிபத்தியமா?" என்ற விமர்சனத்தில் இருந்தும் பார்ப்போம். "... யுத்தவெறியைத் தூண்டத் தம்மால் இயன்றதனைத்தையும் செய்ய, தற்போதைய சர்வதேசியச் சூழ்நிலை 'புதியதொரு உலக யுத்தம் என்ற ஆபத்தைக் கர்ப்பத்தில் கொண்டிருக்கின்றது' என்று கூப்பாடு போட்டு, 'விரோதிகளை முந்திக் கொள்வது' என்று கூறி வெளிப்படையாகப் பயமுறுத்துகிறார்கள். தமது 'யுத்த தந்திர ஏவுகணைகள்' களால் 'எந்த இடத்திலுள்ள எந்த இலக்கையும் அழித்தொழிக்க முடியும்' என்று பகட்டுகிறார்கள். அவர்கள் இராணுவச் செலவை மேலும் வெறித்தனமாக அதிகரித்து, ஆக்கிரமிப்பு யுத்தங்களுக்கான அணிதிரட்டலையும் தயாரிப்புகளையும் தீவிரப்படுத்தி ஹிட்லர் மாதிரி மின்னல் வேகத் தாக்குதல் ஒன்றை தொடுக்கச் சதி செய்திருக்கிறார்கள்... அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் போல், ரசியத் திரிபுவாதச் சமூக - ஏகாதிபத்தியத்தின் ஆட்சியிலிருக்கும் விரல்விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலர் உலக யுத்தம் ஒன்றை ஆரம்பிக்கத் தயார் செய்து கொண்டிருக்கும் இன்னொரு தலையாய குற்றவாளியாக மாறியுள்ளனர்...

...ரசியத் திரிபுவாதம் ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்காவில் அதன் விஸ்தரிப்பு, சூறையாடல் ஆகியவற்றின் மூலம், இந்தப் பிரதேசங்களின் மக்களுக்கு எதிராகத் தன்னைத் தானே நிறுத்தி வைத்திருக்கிறது.... உலக ஏகாதிபத்திய அணிகளில் ரசியத் திரிபுவாதச் சமூக ஏகாதிபத்தியம் சேர்ந்திருப்பதால், ஏகாதிபத்திய நாடுகள் மத்தியிலுள்ள முரண்பாடுகள் மேலும் கூர்மையாயிருக்கின்றன. தத்தம் செல்வாக்குப் பிராந்தியங்களை விஸ்தரிக்கும் முயற்சியில் சமூக ஏகாதிபத்தியமும், ஏகாதிபத்தியமும் தீவிரமான போட்டியில் ஈடுபடுகின்றன." இதைத் தான் தேசபக்தன் மூன்று உலக கோட்பாட்டு மறுப்பின் பின், மறுக்கின்றனர். ஆனால் சர்வதேச விவாதம் முழுக்க இதை தெளிவுபட விரிவாக எடுத்துரைக்கின்றது.

ரசிய ஏகாதிபத்தியம் யுத்த வெறியுடன் புதிதாக அரங்கில் நுழைந்ததையும், புதிய உலக நெருக்கடியை வித்திட்டதையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மறுப்பது, உள்ளடக்கத்தில் சமூக ஏகாதிபத்தியமாக ரசியா மாறியதையும், அன்றைய சர்வதேச விவாதத்தையும் மறுப்பதில் போய்விடுகின்றது. பாட்டாளி வர்க்க அரசு சமூக ஏகாதிபத்தியமாக மாறுகின்ற போது என்ன நடக்கும். ஏகாதிபத்தியத்துடன், ஏகாதிபத்திய நலனை அடையும் போட்டியில் புதிதாக குதிக்கின்றது. உலகம் ஏகாதிபத்தியத்துக்கு இடையில் பங்கிடப்பட்ட நிலையில் இருக்கின்ற போது, புதிதாக ஏகாதிபத்திய கொள்கையுடன் போட்டியில் ஈடுபடுகின்ற போது, பங்கிடப்பட்ட சந்தையை கைப்பற்றும் யுத்தவெறியை பகிரங்கமாகவே கோருவது ஏகாதிபத்திய தன்மையாகும். சந்தைகள் ஒரு சமநிலையில் முரண்பாட்டுக்கிடையில் ஏகாதிபத்தியத்துக்கிடையில் பங்கிடப்பட்ட அமைதியை கெடுக்கும், புதிய நாடாக, ரசிய சமூக ஏகாதிபத்தியம் மாறியது. இது சந்தைக்காக ஏகாதிபத்திய யுத்த வெறியை தூண்டியது. அமெரிக்கா, பிடித்து வைத்திருந்த சந்தைகளை தற்பாதுகாக்கும் தற்காப்பில் ஈடுபட, சமூக ஏகாதிபத்தியமும் அதை கைப்பற்றும் போட்டியில் ஈடுபட்டது. இந்த சர்வதேச சந்தை போட்டியில் ரசியா ஈடுபட்ட நிகழ்வு ஆக்கிரமிப்பு வழியில் தான் சர்வதேச போக்கு வழிகாட்டியது. இந்த போட்டியில் மற்றைய ஏகாதிபத்தியங்கள் தற்காப்பு நிலை எடுத்தன.

இதை மறுப்பது, அரசியல் ரீதியாக ரசியா ஒரு ஏகாதிபத்திய நாடு இல்லை என்பதாகிவிடும். இல்லையாகிவிட்டால், கோட்பாட்டில் சர்வதேச புரட்சிகர நிலைமையை கைவிட்டுச் செல்வதாகும். சர்வதேச நிலைமைகளையும், சர்வதேச பாட்டாளி வர்க்க விவாதத்தையும் ஒரு சேர புரிந்து கொண்டு ஆராயத் தவறுகின்ற போது, பாட்டாளி வர்க்க ஆய்வையும், அதன் புரட்சிகர நிலையையும் கைவிட்டுச் செல்வது நிகழ்கின்றது. இதை விட்டு விட்டு சர்வதேச ரீதியாக, திரிபுவாதிகள் தமது திரிபுவாத நிலைக்கு இசைவாக, இதை திரித்து புரட்டி முன்வைத்த வாதங்களை கூட்டியள்ளி, அதில் இருந்து சர்வதேச விவாதங்களை, மார்க்சிய உள்ளடக்கங்களையும் மறுப்பது அரசியல் ஆய்வாகாது. எல்லா திரிபுவாதிகளும், மார்க்சிய தலைவர்களின் மேற்கோள்களை திரித்து புரட்டித்தான், தமது எல்லாவிதமான துரோகத்தையும் செய்தனர். இதைக் காணத் தவறி, அவற்றைக் கொண்டே மார்க்சிய சர்வதேச விவாதத்தையும், அதன் அரசியல் உள்ளடக்கத்தையும் மறுப்பது, புரட்சிகரமான அரசியலும் அல்ல, ஆய்வுமல்ல.

இனி மூன்று உலக கோட்பாடு தொடர்பாக பார்ப்போம். ''மாவோவின் பெயரில் வந்தது. 'புதிய ஜனநாயக சீனக்குடியரசு' தனது வெளியுறவுக் கொள்கையாக கடைப்பிடித்த ஒரு கொள்கையை உலகப் புரட்சி இயக்கத்தின் கோட்பாடாக 'மாஓ'வின் மறைவின் பின் மாவோவின் கோட்பாடாக சீன முதலாளித்தவ பாதையாளர்களால் முன்வைக்கப்ட்டது'' என்று தேசபக்தன் குறிப்பிடுகின்றனர். முதலில் மார்க்சிய ஆய்வும், நிராகரிப்பும் மூன்று உலக கோட்பாட்டு உள்ளடக்கம் மீது இருக்க வேண்டும். யாரால் எப்போது எங்கு வைக்கப்பட்டது என்பதும், யார் இதை பயன்படுத்தினர் என்பதும், யார் எழுதினர் என்பதும், மார்க்சிய ரீதியில் இரண்டாம் பட்சமானவையாகும். மூன்று உலக கோட்பாட்டின் அரசியல் உள்ளடக்கம் கோட்பாட்டு ரீதியாக மார்க்சிய வழி சார்ந்ததா? அல்லது இல்லையா? என்பதே முதன்மையான விமர்சன ஆய்வு வழியாகும். சீன முதலாளித்துவ திரிபுவாதிகள் பயன்படுத்தியது என்பது இரண்டாம் பட்சமானது. எல்லாத் திரிபுவாதிகளும் மாரக்சிய தலைவர்களின் மேற்கோள்களின் பின்புதான் தமது திரிபுவாதத்தை, திரித்துப் பயன்படுத்தினர். கோட்பாட்டு அடிப்படையில் ஒரு கோட்பாடு மார்ச்சிய அடிப்படை உள்ளடக்கத்துக்கு புறம்பாக இருக்கின்றது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எனின், அதை தெளிவாக கோட்பாட்டில் நிறுவ வேண்டும். இதைவிட்டு சீனா அப்படி செய்தது, இப்படி இருந்தது என்பது அரசியல் விவாதம் அல்ல. கோட்பாட்டில் சரி என்று "இரு முக்கிய முடிவுகள்" என்ற நூலில் "தமிழ் மாநில அமைப்புக் கமிட்டி இந்திய பொதுவுடமைக் கட்சி (மாபுக்சிஸ்ட் லெனிஸ்ட்)" 1981 இல் நிறுவியதை கோட்பாட்டு ரீதியாக இதுவரை மறுத்து நிறுவியதில்லை. இதை மறுக்கும் கோட்பாட்டு விவாதம் இன்றி, அணிகளை பிளப்பதும் அரசியல் ரீதியாக அணிதிரட்டுவதும், பிற்போக்கு தன்மையானதாகும். 1959யில் பீங்கிங்கில் அச்சான நவ சீனப் புரட்சியின் வரலாறு நூலில் 1940 களின் நிலமையை மாவோவின் தலைமையிலான சீனகட்சி சொந்தப் புரட்சியைக் கையாளும் போது "சர்வதேச ரீதியாக மூன்று வகைப்பட்ட சக்திகள் இருந்தன: ஜப்பான், அமெரிக்காவும் பிரிட்டனும், சோவியத்யூனியன், கட்சி இத்தகைய சக்திகளுக்கிடையே கண்டிப்பான வேறுபாட்டினை செய்தது." இது சோவியத்யூனியன் அமெரிக்கா பிரிட்டனுடன் இரண்டாம் உலகயுத்தத்தில் பாசிசத்துக்கு எதிரான ஐக்கிய முன்னணி உருவாக முன்பே, மாவோ கடைபிடித்து வரையறுத்த சர்வதேச மூன்று வகைப்படுத்தப்பட்ட புரட்சிகர பார்வையாகும். மூன்று உலக கோட்பாட்டு விவாதம் இன்றி அணிகளை பிளப்பது அரசியல் ரீதியாக தவறானவை.

15 அம்ச விடையங்களை உள்ளடக்கி 'தமிழீழ புதிய சனநாயக கட்சி'யின் பிரகடனம் மற்றும் ஐக்கியத்துக்கான அறிக்கை மீதான, மேலதிகமான சில கருத்தைப் பார்ப்போம்.

தேசபக்தன் முதல் பக்கம் இரண்டாம் பந்தியில் "புலிகள் இயக்கம் மட்டுமே தேசிய விடுதலை யுத்தத்தை தொடர்ந்து' என்ற கருத்து வரையறை முற்றாக கோட்பாட்டு தவறைக் கொண்டது. இது பாட்டாளி வர்க்க தேசிய விடுதலைப் போராட்டத்துக்கும், புலிகளின் விடுதலைப் போராட்டத்துக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை மறுக்கின்றது. ஒரு தேசிய விடுதலைப் போராட்டம் குறைந்த பட்சம் ஏகாதிபத்திய எதிர்ப்பு, தரகு முதலாளித்துவ எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு அடிப்படையானது. இதை ஏற்றுக் கொள்ளாத புலிகளின் போராட்டத்தை தேசிய விடுதலைப் போராட்டம் என்று வரையறுப்பது தவறானது.

அதே பந்தியில் மற்றைய குழுக்கள் தொடர்பாக "சிறிலங்கா அரசின் 'தேசிய சனநாயக' நீரோட்டத்தில் ... அல்லது சமாதான இயக்கங்களில் மனிதவுரிமை அமைப்புகளில் கரைந்து விட்டனர்" என்பது கோட்பாட்டு தவறை விதைத்துச் செல்லுகின்றது. அந்த இயக்கங்கள் அரசு மற்றும் ஏகாதிபத்திய கைக்கூலி அமைப்பாக, துரோக அமைப்பாக இருப்பதை மறுக்கின்றது. மாறாக சமாதான வாதியாகவும், அரசின் ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து விட்டதாக பிரமையை விதைக்கின்றது. இது சிறிலங்கா அரசு பற்றி சனநாயக பிரமையை, சமாதான இயக்கம் பற்றிய நம்பிக்கையை விட்டுச் செல்லுகின்றது.

இரண்டாம் பக்கத்தில் முதல் பந்தியில் "புலிகளின் தலைமையிலான போராட்ட.." வழிபற்றி கூறப்படுவது முற்றாக தவறானது. தீர்க்கமான தேசிய விடுதலைப் போராட்டத்தை நடத்துவதாக கூறுவதன் மூலம், தேசிய கடமையை புலிகளிடம் விட்டுச் செல்வதற்கு வழிகாட்டுகின்றது. அத்துடன் முதலாளித்துவ வர்க்கத்தை பிரதிநிதித்துவம் செய்வதாக கூறுவது, அதைவிட தவறாகும். தேசிய முதலாளி வர்க்கத்தை எந்த விதத்திலும் பிரகடனம் செய்யவில்லை. அப்படிச் செய்யின் அதன் எதிரிகளை தெளிவாகவே பிரகடனம் செய்யும் அல்லவா!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதே பந்தியில் புரட்சிகர தேசிய போராட்ட வழி உருவாகமைக்கு தேசிய சர்வதேச சூழ்நிலை முக்கிய பங்காற்றியது என்பது தவறானது. இது மிகச் சிறுபங்கு மட்டுமேயாகும். மாறாக சொந்த அரசியல் வழிதான், அதாவது எந்த வர்க்கம் தலைமை தாங்குவது என்பது முதல் யார் நட்பு சக்தி என்பதும், யார் எதிரி என்பது வரை பிரகடனம் செய்து வர்க்கப் போராட்டத்தை முன்னெடுக்காமை தான் முக்கியமான காரணமாகும். இன்று சர்வதேச மற்றும் தேசிய சூழலை விட, சொந்த வர்க்க மற்றும் எதிரி பற்றிய தெளிவும், அணிதிரட்டலும் தீர்க்கமானது.

அதே பக்கத்தில் இராண்டம் பந்தியில் யே.வி.பியின் தேசிய சோசலிசம் என்பது எதையும் விளக்கிவிடவில்லை. ஒரு நாட்டில் சோசலிசம் கட்டமைப்பது தவறானவையாகி விடாது அல்லவா. யே.வி.பி சோசலிசத்தை முன்வைத்ததா? உச்சரிப்பு வாதங்களை தாண்டி அதன் அரசியல் உள்ளடக்கம் சோசலிசமாக இருப்பதில்லை இருந்ததில்லை.

இலக்கம் 2இல் "தரகு, முதலாளிய அதிகார வர்க்க முதலாளித்துவம்.." என்ற விளக்கம் என்ன? தரகு முதலாளித்துவம் சரியானது. அதிகார வர்க்க முதலாளித்துவம் என்பது என்ன? அதன் வர்க்க பிரதிநிதித்துவம் எது? அதாவது முதலாளித்துவத்தின் எந்தப் பிரிவை பிரதிநிதித்துவம் செய்கின்றனர்.

இலக்கம் 3 இல் அதிகார வர்க்க முதலாளிகள் என்று குறிப்பிட்டு அதை ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நாடுகளில் உள்ள தமிழர்கள் என்று குறிப்பிடுவது ஆச்சரியமாக உள்ளது. மேற்கில் புலம் பெயர்ந்த தமிழர்களிடையே உள்ள இறக்குமதி வர்த்தகம் சார்ந்த முதலாளிகள் பற்றிய பிரமையே விதைக்கப்படுகின்றது. அந் நாடுகளில் எந்த விதமான சமூக தகுதியும் அற்ற இந்த பிரிவு, தமிழர்களிடையே ஒரு அதிகாரம் கொண்ட வர்க்கமாக இருப்பதில்லை. புலம் பெயர் சூழலில் சொகுசாக பிழைத்துக் கொள்ள, இலங்கையில் இருந்து பெறும் பொருட்களை அடிப்படையாக கொண்டே உயிர் வாழ முனைகின்றது. இது குறித்த இந்த தலைமுறைக்குட்பட்ட ஒரு எல்லையை மட்டும் கொண்ட பிரிவாகும். இது தமிழீழத்தில் சரி, இலங்கையில் சரி இதுவரை எந்த விதமான மூலதனத்தையும் இடவில்லை. அது போல் ஆதிக்கம் செலுத்தும் வர்க்கமாகவும் இல்லை. அப்படியிருக்க எப்படி அதை எதிரியாக காட்டுவது நிகழ்கின்றது.

அதே பந்தியில் புலிகளுக்கு முதலாளிகள், பணக்கார விவசாயிகள், நடுத்தர மேல்மட்டம் முழுமையான ஆதரவை வழங்குகின்றது எனின், எதை அடிப்படையாக கொண்டு இதை விளக்குகின்றீர்கள்? புலிகளின் வர்க்க அணிதிரட்டலில் எதிரிகளை பிரகடனம் செய்யாத எல்லையில், இதை கற்பிப்பதில் அர்த்தமில்லை. பிரகடனம் செய்யாத நிலையிலும், குறைந்த பட்சம் நடைமுறை பொருளாதார வடிவத்தில் கூட இதை நிறுவமுடியாது. தரகு மற்றும் நிலப்பிரபுத்துவ வர்க்கம் பால் எப்படி இருக்கின்றது என்பதும், அதில் இருந்து இதை எப்படி வேறு பிரித்து வந்தடைகின்றீர்கள் என்பதும் ஆச்சரியமாக உள்ளது. இந்தப் பிரிவு ஏகாதிபத்திய எதிர்ப்பில் ஊசலாடுகின்றனர் என்பது, ஏதோ அதை எதிர்த்து நின்ற வழியில் என்ற கற்பனையை பிரதிபலிக்கின்றது. எதிர்த்தே போராடாத, சொந்த அணிக்குள் கூட பேசாத விடயத்தில் எப்படி, ஊசாலாட்டம் இருக்கும். இஸ்ரேல் பாணி கனவுகளில் பிரமை கொண்ட இயக்கம், ஏகாதிபத்திய தயவில் தமிழீழம் அமைக்க உறுதி கொண்ட இயக்கம், ஊசலாடுவதில்லை. அது தெளிவாகவே இருக்கின்றது.

5 இல் பெண்கள், சிறுபான்மை மத மக்கள்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒடுக்கப்பட்ட சாதி மக்களுடன் கூட்டிணைந்து போராடுவது என்பது, இருக்கும் அரசியல் எல்லையில் பிற்போக்கில் அணிதிரள்வதாகும். புதிய ஜனநாயக புரட்சிக் கடமையை கைவிட்டு அணிதிரளுவதை குறிக்கும். உதாரணமாக சிறுபான்மை மத மக்களுடன் எப்படி புதியஜனநாயக புரட்சியை நடத்த முடியும். இலங்கையில் சிறுபான்மை மத மக்கள் என்று எவர்களை கருதுகின்றிர்கள். கிறிஸ்தவ மக்களையா? மத அடிப்படையில் அணிதிரள்வது பிற்போக்கானது. தனிப்பட்ட மனிதனின் மத வழிபாட்டுச் சுதந்திரம் வேறானது. மத மக்கள் என்பது அடிப்படையில், பிற்போக்கில் அணிதிரள்வதாகும். புதியஜனநாயக புரட்சியில் மத மக்களுடன் கூட்டமைக்காது. இது புதிய ஜனநாயக கடமைக்கு எதிரானது.

6 இல் இலங்கை அரசுக்கு எதிராக போராடும் புலிகள் உட்பட அனைத்து கட்சிகளுடனும், எல்லா வர்க்க போராட்ட சக்தியுடனும் இணைந்து என்று கூறப்படுகின்றது.. சிறிலங்க அரசுக்கு எதிராக இன அடிப்படையில் போராட முனையும், அதாவது எதாவது ஒரு ஏகாதிபத்தியம் சார்ந்து அல்லது அது போன்ற எதாவது ஒன்றுடன் நாம் இணையமுடியுமா? புதிய ஜனநாயக புரட்சியை முன்னெடுக்க, தேசிய புரட்சியின் பிரதான எதிரியான ஏகாதிபத்தியத்தை, தரகு முதலாளித்துவத்தை, நிலப்பிரபுத்துவத்தை எதிர்க்காத எந்த சக்தியுடனும், இணையமுடியாது. இங்கு எல்லா கட்சியும் என்பதும், எல்லா வர்க்கமும் என்பதும், கோட்பாடற்ற இணைவை, சிறிலங்காவுக்கு எதிராக முன்நிறுத்துகின்றது. சிறிலங்கா அரசுக்கு எதிரான மற்றொரு ஏகாதிபத்தியம் கூட, இனவிடுதலை போராட்டத்தில் ஈடுபட முனையும் போது, எப்படி தேசிய சக்திகள் கூட்டுக்குப் போகமுடியும்.

7 இல் தமிழ் குறுந்தேசியவாதமும் என்பது, தமிழ் இனக் குறுந் தேசியவாதம் என்பதே சரியாகும். இனக் குறுந் தேசியவாதம் தமிழ்த் தேசியத்தை முன்னெடுக்காது. இது உங்கள் முந்திய மதிப்பீட்டுக்கு அதாவது புலிகள் தேசிய சக்தி என்றதுக்கு முரணானது.

10 இல் மற்றைய இனங்களுடன் கூட்டிணைந்து போராடுவது என்பது, இனங்களின் இணைப்பை மறுக்கின்றது. இந்த அடிப்படையில் சுயநிர்ணயம் பற்றிய கோட்பாடு கைவிடப்படுகின்றது. சிங்கள பாட்டாளி வர்க்கம் பிரிவினையை ஏற்றுக் கொள்ளும் போது, தமிழீழ பாட்டாளி வர்க்கம் ஐக்கியத்தை கோரி பிரச்சாரம் செய்வது எந்த இடத்திலும் முன்வைக்கப்படவில்லை. இந்த நிலைமை ஏற்படும் ஒரு நிலையில், புதிய ஜனநாயக புரட்சியை சேர்ந்து நடத்துவது பற்றி பேசவில்லை. மாறாக சர்வதேச நாடுகளுடன் எப்படி உறவு உள்ளதோ, அதே பாணியில் கூட்டிணைவு வைக்கப்படுகின்றது. இது சுயநிர்ணயத்தின் அரசியல் உள்ளடக்கத்தை வெட்டித் திருத்துவதாகும். இலங்கை இன்னமும் ஒரே நாடாக இருக்கின்ற போது, இனங்கள் பிளவுபட்டுள்ள நிலையில் இதை கையாளும் பாட்டாளி வர்க்கம், சுயநிர்ணயத்தில் உள்ளடகத்தை சரியாக பிரயோகிக்க வேண்டும். திட்டவட்டமாக ஐக்கியம் பற்றியும், பிரிவினை பற்றிய நிலைப்பாட்டை பேச மறுக்கின்றது. ஏதோ இது பற்றி விவாதம் இல்லாத மாதிரி பூசி மெழுக முயலுகின்றது. இவை விவாதத்துக்கு வரமாட்டாத கற்பனை புனைவுகள் அல்ல. இதை பற்றிய மௌனம் அடிப்படையில் சந்தர்ப்பவாதமாக இருப்பது, பரிணமிப்பது தெளிவானது. முன்பு அகதிகள் குரலில் புலிகளை எதிர்ப்பதும் இல்லை, ஆதரிப்பதும் இல்லை என்ற நிலைப்பாடு, சந்தர்ப்பவாதத்துடன் கூடிய காரிய வாதமாகும். இதுவே ஐக்கியத்துக்கும், பிரிவினைக்கும் நிகழ்கின்றது. மாறாக கூட்டிணைவு முன்நிறுத்தப்படுகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

12 இல் 'சட்ட விரோத மற்றும் தடை செய்யப்பட்ட இயக்கங்களுடன்' உறவு கொள்ளக் கூடாது என்பது சர்வதேசியத்தை மறுப்பதாகும். மூன்றாம் உலகில் உருவாகும் எல்லா மார்க்சிய லெனினிய அமைப்புகளும், தேசிய விடுதலை அமைப்புகளும் சட்ட விரோதமாகவே இருக்கின்றது. அது அரை மற்றும் பகிரங்கமான அமைப்புகளாகவும், வர்க்கப் போராட்டம் கூர்மையடைகின்ற போது முற்றாக சட்ட விரோத அமைப்பாகவும் இருப்பது இயல்பு. அதனுடன் தொடர்பு கொள்வது சர்வதேசியத்தின் கடமையாகும். இதை மறுக்க முடியாது. குறிப்பான நிலைமையை பொதுவாக்கும் பண்பு, சர்வதேசியத்தில் இருந்து விலகிச் செல்லத் தூண்டுவதாகும். வாழும் நாட்டில் புரட்சிகர தன்மைக்கு ஆதரவு வழங்க மறுப்பது சர்வதேசியத்துக்கு எதிரானதாகும். குறிப்பான நாட்டில், குறிப்பான நிலைமையை கவனத்தில் கொண்டு பரிசீலிப்பது இதில் இருந்து முற்றிலும் வேறுபட்டதாகும். ஆனால் குறிப்பானதை அடிப்படையாக கொண்டு மறுப்பது சர்வதேசியத்தையும், போராட்டம் வர்க்கப் போராட்ட கூர்மையில் தவிர்க்க முடியமால் சட்ட விரோதமாக மாறும் தன்மையை, மறுக்கும் அரசியல் வடிவத்தை கோட்பாட்டில் விதைப்பதாகும். சட்ட விரோதமானதும், தடை செய்யப்பட்டதும் புரட்சிகரமான அரசியல் வழிப்பட்டது அல்ல என்ற நிலைக்கு, சரிவதாகும். அத்துடன் இதை தன்னார்வக் குழுக்களுடன்



பொருத்திக் காட்டி மறுப்பதும், இதை பொதுமையாக எதிரி வர்க்க நிலைக்கு இட்டுக் கட்டுவதாகும். சட்ட விரோத, மற்றும் தடை செய்யப்பட்ட இயக்கம் புரட்சிகரமாக இருப்பதில்லையா என்ற கேள்வி, இங்கு எழுப்பப்படுகின்றது.

✂✂✂✂✂

சிங்கள இனவாத அரசு கட்டவிழ்த்துவிட்ட இனவாத யுத்தம் என்றுமில்லாத வகையில் புதிய நெருக்கடியை தோற்றுவித்துள்ளது. நிலைமை நிமிடத்துக்கு நிமிடம் தீவிரமான மாற்றத்தை கோரி நிற்கின்றது. தமிழ்பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையும், புலிகளின் தமிழீழ தாயகமும் ஒரு தீர்க்கமான நெருக்கடிக்குள் நகர்ந்துள்ளது. இக்கட்டுரை எழுதிக் கொண்டிருந்த அந்த நிமிடத்துக்கும், அடுத்த நிமிடத்துக்கும், இது வெளிவரும் போது நிலைமை மேலும் மாற்றத்தை சந்தித்துவிடும் என்ற நிலையிலும், யுத்தத்தின் தீவிரத்தையும் இலங்கை நிலைமையையும் ஆராய்வது அரசியல் ரீதியாக தீர்க்கமானதாக உள்ளது. அரசு, புலிகளின் தமது பக்கச் செய்திகளையே தமது நலனுடன் வெளியிட்ட நிலையில், இதைத் தாண்டி மக்கள் நிலைமையை புரிந்து கொள்ள முடியாத நிலையில், இக்கட்டுரை முக்கியமானது. இலங்கை நெருக்கடியை ஒட்டிய சர்வதேச நகர்வுகளை முழுமையான தகவல்களை அரசு யுத்த நிலைமையை தணிக்கை மூலமும், புலிகள் தனது சொந்த புகழ் ஊடாக பாதகமானதை மறைப்பதால், தமிழ் மீடியா புலிசார்ந்து தவறான விளக்கங்கள் ஊடாக வெளிநாட்டு நகர்வை திரித்துக் காட்டுவதாலும், தீவிரமான யுத்த கெடுபிடியின் விளைவுகளை பற்றிய முடிவுகளை வந்தடைவது சிக்கலாகியுள்ளது.

இந்த நிலையில் அண்மைய நிலைமையை இக்கட்டுரை ஆராய்கின்றது. இராணுவ ரீதியான ஆயுத இழப்பு, கைப்பற்றல் போன்ற அரசியலிலும், இராணுவ நடவடிக்கையில் கிடைக்கும் தோல்வி வெற்றியை மட்டும் அடிப்படையாக கொண்டு மதிப்பிடும் இலங்கை யுத்த அரசியல் வரலாற்றில், அண்மைய புலிகளின் முன்னேற்றம் பாரிய அதிர்வை ஏற்படுத்தியுள்ளது. புலிகளுடன் உடன்படாத பிரிவுகளையும், நடுநிலைப் பிரிவுகளையும் ஆனையிறவு வெற்றி அலையாக அள்ளிச் சென்றுள்ள நிலையில்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசியல் ரீதியான ஆய்வுகள், கருத்துகள் மேலும் தனிமைப்பட்டுள்ளது அல்லது அவற்றை அலட்சியப்படுத்துவதன் ஊடாக வரப்போகின்ற புதிய நெருக்கடிக்கான தயாரிப்பை இழந்து நிற்க்கின்றது.



தமிழ்மக்கள் வாழும் சொந்த நிலப்பரப்பில் அன்னிய இராணுவங்கள் அனைத்தும் நிபந்தனையின்றி அகற்றப்பட வேண்டும் என்பதில் அக்கறை கொண்டுள்ள மார்க்சியவாதிகள், அதை புலிகள் செய்தாலும் வரவேற்பதில் எந்த விதமான தயக்கமும் காட்டியது கிடையாது. சிங்கள இனவெறி இராணுவமாகட்டும், அன்னிய இராணுவமாகட்டும், அவை அக்கற்றப்பட வேண்டும் என்பது மார்க்சியவாதிகளின் உறுதியான நிலைப்பாடாகும். ஆனால் எங்கள் முரண்பாடு அன்னிய இராணுவத்தை அகற்றும் மண்ணில், தேசத்தின் தேசிய பொருளாதாரத்தை உருவாக்கவும், பாதுகாக்கவும், ஏகாதிபத்தியத்துக்கு எதிரான தேசிய யுத்தத்தை பிரகடனம் செய்யவேண்டும் என்பது எமது உறுதியான நிலை.

**சுயநிர்ணயத்துக்கு எதிரான பன்னாட்டு ஆக்கிரமிப்பை எதிர்த்து போராடுவோம்**

எமது பண்பாட்டை, கலாச்சாரத்தை வன்முறையற்ற ஜனநாயக வடிவமாக்கி, சீரழிந்த ஏகாதிபத்திய பண்பாடு ஊடுருவுவதை தடுத்து, அதற்கு எதிராக போராடுவதும் தேசிய நிபந்தனையாகும். இது மட்டுமே தேசத்தின் அடிப்படையான உள்ளடக்கமாகும். இதை புலிகள் செய்யாத எல்லா நிலையிலும், அவர்கள் அகற்ற முனையும் இனவாத சிங்கள தேசிய இராணுவத்துக்கு பதில், ஏகாதிபத்தியத்திடம் தேசியத்தை அடகுவைப்பதாகும். இது பொருளாதாரம், பண்பாடு, கலாச்சார ரீதியாக ஏகாதிபத்தியத்தை சார்ந்து நிற்பதன் மூலம், புலிகளின் தேசிய இராணுவம் என்பது ஏகாதிபத்தியத்தின் கைக்கூலி இராணுவமாக அல்லது ஏகாதிபத்திய இராணுவத்தை சிங்கள இராணுவத்தக்கு பதில் நிறுத்துவதில் முடியும்.

புலிகள் வன்னியில் முன்னேறியதும், ஆனையிறவு முகாம் பிடித்ததும், யாழ் குடாநாட்டை நோக்கி முன்னேறிச் செல்வதும், இராணுவ ரீதியான வெற்றியா எனின் இன்னமும் இல்லை என்ற உண்மை பலர் காணத் தவறிவிடுகின்றனர். யாழ்குடா நாட்டை விட்டு 1995 இல் புலிகள் மிக குறுகிய காலத்தில் தற்காப்பு யுத்தம் செய்தபடி பின் வாங்கியபோது என்ன நிலையிருந்ததோ, அதுவே இன்று தலைகீழாக நடக்கின்றது. அண்மையில் சிங்கள இனவெறி இராணுவப் பின்வாங்கியது, அன்றைய புலிகளின் பின்வாங்கலை ஒத்த தன்மை கொண்டவை. அன்று இராணுவம் முன்னேறி பிடித்தவை எப்படி வெற்றியாக இருக்கவில்லையோ, அதுபோல் புலிகள் இன்று முன்னேறி பிடித்தவையும் வெற்றியாக இருக்கவில்லை. யுத்தத்தில் தீர்க்கமான யுத்தமின்றி, சொந்த பலம் பலவீனத்தினூடாக அன்றும் இன்றும் பின்வாங்கியது மட்டுமே நிகழ்ந்தது. ஆனால் புலிகள் போராட்ட அமைப்பாக இருப்பதாலும், இராணுவம் கூலிப்பட்டாளமாக இருப்பதால், இதன் போக்கில் மாறுபட்ட தன்மைகள் காணப்பட்ட போதும், நடப்பது தற்காப்புடன் கூடிய சிறுசண்டை கொண்ட பின்வாங்கல் என்பதை புரிந்து கொள்வது அவசியமாகும். இதனால் யுத்தத்தின் போக்கில் வெற்றி இன்னமும் தீர்க்கமாகிவிடவில்லை.

யுத்தத்தின் போக்கில் தீர்க்கமான நிலைமை இனித் தான் ஏற்படப் போகின்றது. வெற்றியா,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தோல்வியா அல்லது இழுபறியா என்ற முடிவை நோக்கி நகர்வதற்குரிய கால எல்லை ஒன்று ஏற்பட்டுள்ளது. யுத்தத்தின் போக்கில் நான்கு முக்கியமான முடிவுகளில் ஒன்று உடனடியாக நிகழ உள்ளது.

1. யுத்தம் இனித் தான் தொடங்கவும், தீவிரமடையவும் போகின்றது. இது வெற்றி தோல்வி, இழுபட்ட யுத்தம் என்ற நிலைக்குள் நகரவுள்ளது. அல்லது,
2. தொடர்ச்சியாக பின்வாங்கிய படைகள், அதன் தொடர்ச்சியில் முற்றாக புலிகளிடம் உயிர்ப் பாதுகாப்பு என்ற நிபந்தனையுடன் சரணடைவது. அல்லது,
3. அரசு படைகளை முற்றாக புலிகளின் பாதுகாப்புடன் விலக்கிக் கொள்வது. அல்லது
4. அன்னிய பன்நாட்டு படைப் பிரிவு ஒன்று அமைதியின் பின்னால், மக்களின் நலனின் பின்னால், தீர்வுத் திட்டத்தின் பின்னால், படைகளை விலக்கிக் கொள்வதின் பின்னால் தலையீடுவது. இந்த நிலைமைக்கு முன் அன்னிய மனித உரிமை அமைப்புகள், உதவி அமைப்புகள், மருத்துவ அமைப்புகள் நிபந்தனையின்றி மக்களின் நலன்களை கூறியபடி களமிறங்கி (இந்த வகையில் களமிறங்கி இருந்தவை புலம்பத் தொடங்கிவிட்டன) அன்னிய இராணுவ வருகைக்குரிய நிலைமையை தோற்றுவிப்பர். அதன் பின்னணியில் புலிகளின் ஆயுதம் களையப்படும்



இந்த நான்கில் எதாவது ஒன்று அல்லது அதன் மேல் இரண்டாவது (அன்னியத் தலையீடு) நிகழவுள்ளது. இதில் அன்னிய பன்நாட்டு படையிறக்கம் நிகழ இருப்பதை தீர்க்கமாக காணத் தவறியிருப்பதும், அதை மக்கள் முன் வைத்து விழிப்படையச் செய்யாது இருப்பதும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு ஆபத்தானதாகும். இந்தியத் தலையீடு பற்றிய கருத்துகள் மீது கவனத்தை குவித்த அபிரயாயங்களை தெரிவிப்பவர்கள், பன்நாட்டு படைப்பிரிவு ஒன்று இந்தியா தலைமையில் அல்லது இந்தியா உள்ளிட்ட மற்றொரு படைத் தலைமையில் தலையிடும் சத்தியம் நெருங்கிய நிலையில் உள்ளது என்பதை காணத் தவறிவிட்டனர். இனவாத சிங்கள அரசுப் படை, யாழ்குடா நாட்டில் தோற்கின்ற அல்லது வெளியேறுகின்ற நிலையில் அன்னியப்படைத் தலையீடு உடனடியாக நிகழ உள்ளது. சரணடைவு மட்டுமே அன்னியப்படை இறக்கத்துக்கு நியாயப்படுத்த முடியாத இக்கட்டான நிலைமையை தோற்றுவிக்கும்.

இலங்கையினதும், தமிழ் மக்களினதும் தேசியத்தை அழிக்கும் வகையில் அமெரிக்கா, இந்தியா, நோர்வே, பிரிட்டன் போன்ற பல நாடுகள் தொடர்ச்சியாக கூடி ஆராய்வதுடன், நிலைமையை அவதானத்துக்குள்ளாக்கிய வண்ணம் உள்ளது. அரசு படையை பலப்படுத்தி அதனூடாக புலிகளை பின்னடைய வைப்பது அல்லது தலையீடு என்ற நிலைக்கு சாதகமான போக்குகளை ஏகாதிபத்திய அரசுகள் புதிய உலக மயமாதல் கண்ணோட்டத்தில் கூட்டாகவும், பிராந்திய அரசுகளின் துணையுடனும் முடுக்கிவிட்டுள்ளது. இந்த வகையில் ஐ.நா, சர்வதேச மனிதவுரிமை அமைப்பு, செஞ்சிலுவைச் சங்கம் போன்றன தமது பங்கை கவனமாக இதற்கு ஆதரவாக உருவாக்கி, நிலைமையை சர்வதேசமயமாக்கி மக்களின் மனிதவுரிமையை முதன்மைப்படுத்தியுள்ளனர்.

நிலைமை மோசமாகக் காட்டி, படை வெளியேற உதவியாக, அன்னிய தலையீட்டின் தேவையை கோரி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கருத்துகளை திட்டமிட்டு உருவாக்கின்றது. உத்தியோகபூர்வமற்ற வகையில் இந்திய தலையீட்டை நோக்கி விடப்பட்ட பல்வேறு கோரிக்கைகள், இந்திய அரசு இது தொடர்பாக விட்ட அறிக்கைகள், புலிகளை அரசியல் ரீதியாக திகைக்க வைத்து. எதிர்பாராத இந்த நிலைமையில் புலிகளை அரசியல் ரீதியாக திகைக்க வைத்தன் மூலம் மௌனம் சாதிக்க வைத்து. இந்திய தலையீட்டு கோரிக்கைக்கு இந்திய அரசு உடனடியாக கூடி முடிவு எடுத்து விட்ட அறிக்கைக்கு, போராடும் புலிகள் உடனடியாக பதிலளிக்க முடியாத அரசியல் சூனியம் நிலவியது. புலிகளின் பதில் அண்ணளவாக ஒருவாரம் கழித்து வெளியான போது, ராஜதந்திர ரீதியாக அந்த அறிக்கை முழுமையாக புலிக்கு சாதகமாக மாறிவிடவில்லை. இராணுவ வீரர்கள் யுத்தத்தை விட்டு பின்வாங்கிச் சென்றாலும், அவர்களின் உயிருக்கு புலிகள் அச்சுறுத்தல் விடும் பயங்கரவாதிகள் என்ற அடிப்படையில், மனிதாபிமான உதவி பற்றி பேசிக் கொண்டிருந்த போது, புலிகள் மௌனம் சாதித்ததன் மூலம் அதை உறுதி செய்வதாக இருந்தது. தலையீட்டுக்கு எதிரான பிரிவுகள் இந்திய அரசை நிர்ப்பந்திக்க முடியாத அளவுக்கு, புலிகளின் பதில் அரசியல் ரீதியாக காலம் தாழ்த்தி வெளிவந்ததன் மூலம், அரசியல் தவறை செய்தனர்.

அடுத்த அரசியல் தவறை அந்த பதிலில் விட்டுச் சென்றனர். தமிழ் மக்களின் போராட்டம் இலங்கையின் உள்நாட்டு பிரச்சனை என்பதையும், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையில் தலையிட யாருக்கும் உரிமையில்லை என்பதையும் தேசிய கண்ணோட்டத்தில் நின்று உரத்து பிரகடனம் செய்யத் தவறினர். தேசத்தின் தேசியப் போராட்டத்தில் எந்த அன்னியப் படை தலையிட்டாலும், அதை எதிர்த்து போராடுவோம் என்று சூல்லுரைக்க தவறினர். எந்த அன்னிய படையும் எமது சுயநிர்ணய உரிமையையும் பெற்றுத் தரமுடியாது என்பதையும், அதில் தலையிட உரிமையில்லை என்பதையும், எமது சொந்த தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க உறுதி கொண்டுடிருப்பதை பிரகடனம் செய்யவில்லை. புலிகளின் தமிழீழ தாகம் அடிப்படையில் இனவிடுதலையை அடிப்படையாக கொண்டது என்பதால், தேசியத்தின் அடிப்படை உள்ளடக்கமான ஏகாதிபத்திய எதிர்ப்பை பிரகடனம் செய்யவில்லை. இனவிடுதலையை முன்வைக்கும் போது, அன்னிய தலையீடு பற்றி தயக்கத்துடன் கூடிய அணுகுமுறை, தமிழ் மக்களின் சுயநிர்ணயக் கோரிக்கைக்கு ஆபத்து விளைவிக்கவுள்ளது.

இலங்கையில் இராணுவ ரீதியாக பன்நாட்டுப் படையொன்று இறங்க தயாராகி வரும் நிலையில், புலிகள் மௌனத்துடன் கூடிய இராணுவ முன்னெடுப்புகள் அவர்களை அரசியல் ரீதியாக தனிமைப்படுத்தி விடவுள்ளது. யாழ்குடா நாட்டை புலிகளிடம் இருந்து இலங்கை அரசு ஆக்கிரமித்த போது, மக்களையிட்டு கவலைப்படாத சர்வதேச ஏகாதிபத்தியங்கள், அரசின் ஆக்கிரமிப்புக்கு நெருக்கடி ஏற்படுகின்றபோது, முதலைக் கண்ணீர் வடித்தபடி களம் இறங்க தயாராவதை அரசியல் ரீதியாக மட்டுமே புரிந்து கொள்ள முடியும். இதை புலிகளின் சூனியமான அரசியலால் புரிந்து கொள்ள முடியாத இனவாத அடிப்படையை கொண்டு காணப்படுகின்றனர். உலகளவில் ஏகாதிபத்தியங்கள் நடுநிலை வகிப்பதில்லை. மாறாக தனது கொள்ளையை தொடர சாதகமான நிலைமையை கவனத்தில் கொண்டு, போராட்ட அமைப்புகளை அடக்குகின்றன. ஒரு நாட்டின் தேசியத்தை உலகமயமாதல் அனுமதிக்காது என்பது தெள்ளத் தெளிவானது. இந்த வகையில் தமிழ்தேசியம் உருவாவதை உலகமயமாதல் ஒருக்காலும் அனுமதிக்காது. இனவிடுதலையை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடிப்படையாக கொண்டு பொருளாதாரத்தில் ஏகாதிபத்திய கைக்கூலியாக தரகுத்தனத்தை ஏற்றுக் கொள்ளும் குழுக்களின் இருப்பு குறித்து, உலகமயமாதல் மொத்த நாட்டை தனது நலனுக்கு சாதகமாக மேலும் விரைவுபடுத்த மட்டும் பயன்படுத்தும். இந்த வகையில் இலங்கை உலகமயமாதல் நிபந்தனைக்கு முற்றாக சரணடைந்துள்ளது. எல்லாவிதமான தேசிய முதலாளித்துவ வாதமும் முடிவுக்கு வந்துள்ள நிலையில், அதை மோசடி செய்ய இனவாதத்தை கட்டமைக்கின்றது. இந்த தீவிர இனவாதம் இலங்கையில் அமைதியாக சுரண்ட ஏகாதிபத்தியத்துக்கு தடையாக அமைவதால் (மூலதனத்துக்கும், அதை விரிவாக்கவும் பாதுகாப்பற்ற யுத்த சூழல்), யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்துகின்றது. இலங்கையில் தலையீடு ஒன்றை நடத்த, அமெரிக்கா உள்ளிட்ட பன்நாட்டுப் படையூடாக நிகழ்வதற்கான வாய்ப்பு அதிகரித்துள்ளது. இந்த தலையீடு தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை கேள்விக்கிடமின்றி நசுக்கும். புலிகளின் இனதேசியத்துக்கு எதிராக சலுகைகளை வழங்கும். இதனால் புதிய நெருக்கடிகளை புலிகள் முதன்முதலாக ஆழமாக எதிர்கொள்வர். புலிகளின் இராணுவவாத அரசியல் ஆயுதம், பணம் மூலம் கட்டமைக்கப்பட்டு, உலகத்தின் பல்வேறு இடங்களில் இருந்து ஆயுதம், பணத்தை கொண்டு வரும் அனைத்து முயற்சியையும் அமெரிக்கா கட்டுப்படுத்தும். இதை புலிகள் மீறுவது என்பது சாத்தியமில்லை. புலிகள் சர்வதேசரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களைச் சார்ந்து இதை செய்வதில்லை என்ற ஒரே காரணம், புலிகளை தனிமைப்படுத்த போதுமானது.

இந்த நிலையில் சர்வதேச பன்நாட்டு தலையீடு புலிகள் முன் சில அடிப்படையான முடிவுகளை நோக்கி நகர்த்தும்.

1. அமெரிக்கா தலைமையிலான சர்வதேச ஆக்கிரமிப்பாளன் வைக்கும் முடிவுக்கு புலிகள் கட்டுப்பட்டு போராட்டத்தை கைவிடுதல். அல்லது ஒருபகுதி இதை ஏற்றுக் கொண்டு துரோகியாகுதல்.
2. ஒருபகுதி அல்லது முழு அமைப்பும் எதிர்த்து போராடுதல் மூலம் முற்றாக அழிதல். அதாவது சர்வதேச மற்றும் உள்நாட்டு ஒடுக்கப்பட்ட மக்களின் ஆதாரவற்ற நிலைமையால் தனிமைப்பட்டு போராடி அழிதல்.
3. புலிகள் தேசியத்தில் (ஏகாதிபத்திய எதிர்ப்பில்) இடது தன்மையை எடுத்து, போராட்டத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள் மற்றும் சர்வதேச ஆதரவுடன் போராட்டத்தில் நீடித்தல். இந்த நிலைமை உருவாக புலிகளின் வலது பிரிவுக்கு எதிரான இடது பிரிவுகள் நடத்தும் ஒரு போராட்டத்தின் ஊடாகவே நிகழும்.

இந்த நிலைமை தலையீடு நிகழும் பட்சத்தில் ஏற்படும். தலையீடு நோக்கிய அச்சுறுத்தல், தயாரிப்பு கட்டத்தில் பல்வேறு நாடுகள் சுறுசுறுப்பாக இயங்குகின்றன. சர்வதேச அங்கீகாரத்தை பெறும் முயற்சிக்கு மனித உரிமை அமைப்புகள், மருத்துவ உதவி அமைப்புகள், உதவி அமைப்புகளின் அறிக்கைகள் என்றுமில்லாத வகையில் ஓங்கி ஒலிக்கின்றன. வேண்டுகோள்கள் தொடர்ச்சியாக விடப்படுகின்றன. ஐக்கியநாட்டுச் சபை அதிக அக்கறையெடுத்து வருகின்றது. அமெரிக்கா, இந்தியா, பிரான்ஸ், நோர்வே, இங்கிலாந்து போன்ற நாடுகள் உள்ளிட்ட சர்வதேச ஆக்கிரமிப்பாளர்கள் அடிக்கடி கூடி சதித் திட்டங்கள் தீட்டுகின்றனர். இந்த ஆக்கிரமிப்பு சதியை முறியடிக்க புலிகள், மக்களுக்கு போராடும் தேசிய சுயநிர்ணய ஜனநாயகத்தை அங்கீகரிப்பதும், முஸ்லிம் மக்களை மீளக் குடியேற்றுவதும், சுயநிர்ணயத்தை உயர்த்துவதும் (திம்புக் கோரிக்கையின் அடிப்படையில்), ஏகாதிபத்திய எதிர்ப்பை பிரகடனம் செய்வதன் ஊடாக, ஒடுக்கப்பட்ட மக்களின் நலன் சார்ந்து, போராட்டத்தை அரசியல் மயப்படுத்த வேண்டும். இனவெறி அரசுக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சார்பாக களம் இறங்கும் ஏகாதிபத்தியத்தை எதிர்த்த போராட்டத்தை, தியாகத்தை, இனயுத்தம் என்ற நிலையில் இருந்து தேசிய யுத்தமாக மாற்ற வேண்டும். இதுமட்டுமே தான் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பை முறியடித்து சுயநிர்ணய உரிமையை தமிழ் மக்களுக்கு பெற்றுத் தரும்.

பி.இரயாகரன்.
14.5.2000

இக் கட்டுரை எழுதிய பின்பு, மிக தீவிரமான யுத்த நிலைமை பகிரங்கமான காரணமின்றி சூனியமான அமைதியாகியது. புலிகள் யாழ்குடா நாட்டை கைப்பற்ற பிரகடனம் செய்து, மக்களை யுத்த பிரதேசத்தில் இருந்து வெளியேற ஒன்றுக்கு மேற்பட்ட வேண்டுகோள்களை விட்டதுடன், இராணுவத்தை சரணடையக் கோரி, ஒன்றுக்கு மேற்பட்ட கால அவகாசத்தையும் கொடுத்தனர். இது யுத்தத்தின் போக்கை தீர்க்கமாக்கும் குறித்த தன்மையை வெளிப்படுத்தியது. சர்வதேச ரீதியாக புலிகளின் அரசியல் பினாமிகள் இவற்றைக் கொண்டு சொந்தப் பிழைப்பை நடத்த, யாழ்குடாநாட்டைக் கைப்பற்றுவது பற்றி பலவிதமான பந்தாக்களைச் செய்தனர்.

ஆனால் புலிகளின் சொந்த யுத்த முடிவுகள் அவர்களின் முடிவுகளில் தங்காமல், சர்வதேச நிலைமைகளில் சார்ந்திருக்கும் புதிய சர்வதேச நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இலங்கையில் சர்வதேச தலையீடு என்றுமில்லாத அளவுக்கு மிக தீவிரமாகியுள்ளது. இலங்கையில் எந்த நெருக்கடி ஏற்படினும் சர்வதேச தலையீடு நிகழும் வாய்ப்புக்குரிய சகல தயாரிப்பும் செய்யப்படுகின்றது. ஏகாதிபத்தியங்கள் தொடர்ச்சியாக இலங்கையில் விரிவாக தலையீடுவதுடன், சகல விதமான ராஜதந்திர முயற்சிகளிலும் ஈடுபடுகின்றது. இராணுவ ரீதியாகவும், நிதி ரீதியாகவும் விரிவாக உதவுவதுடன், இராணுவ ஆலோசனைகளையும் வழங்குகின்றது. இலங்கையில் ஏகாதிபத்திய பன்நாட்டு படை தலையிட்டு புதிய சர்வதேச நெருக்கடியை எதிர் கொள்வதா அல்லது இலங்கை இராணுவம் ஊடாக நிலைமையை சமாளிப்பதா என்பதில், ஏகாதிபத்தியங்கள் தமது கவனத்தைக் குவித்து இலங்கையில் முகாமிட்டுள்ளனர். அந்த முயற்சியில் தமது காலை இறக்கியுள்ளனர்.

இந்த நிலையில் புலிகள் செய்த மண் மீட்பு யுத்தப் பிரகடனம் திடீரென காரணமின்றி கைவிடப்பட்டது. இதற்கான காரணம் எதுவும் முன்வைக்கப்படவில்லை. இங்கு நிகழ்ந்தது என்ன? இரண்டு தெளிவான காரணங்கல் ஏதாவது ஒன்று காரணமாக இருந்துள்ளது.

1.சர்வதேச ஏகாதிபத்தியங்கள் திட்டவட்டமாக நேரடியாகவே புலிகளுக்கு எச்சரிக்கை செய்து, யுத்தத்தை நிறுத்தியிருக்க வேண்டும். அதாவது புலிகளை கட்டுப்படுத்தக் கூடிய வகையில் புலிகளின் அரசியல், இராணுவ வழிகள் மீது செல்வாக்கு வகிப்பவர்களாக இருக்கின்றனர்.

2.சர்வதேச பன்நாட்டு படைகளின் தலையீட்டின் அபாயத்தை புரிந்து, அதை தடுக்க யுத்தத்தை நிறுத்தியிருக்க வேண்டும்.

இந்த இரு போக்கிலும் புலிகளின் மௌனம், எதிரியை மக்களுக்கு இனங் காட்ட மறுப்பதும் தேசிய சுயநிர்ணய உரிமைக்கு வேட்டு வைப்பதாகும். சர்வதேச நிர்ப்பந்தங்களை எதிர் கொள்ள, இராணுவ ரீதியான கொரில்லா வழிமுறையை புலிகள் கைக்கொள்ளும் தன்மை வெளிப்படுகின்றது. சர்வதேச ராஜதந்திர முயற்சிகள், தலையீட்டை இலகுபடுத்தும் வகையில் சிங்கள இனவாத அரசிடம் கோருகின்ற தீர்வுத் திட்டங்கள் இனவாத நாற்றத்தால் நாறிவரும் நிலையில், அதை அரசியல் ரீதியாக அம்பலப்படுத்தும் போக்கில் ஏகாதிபத்திய தலையீட்டு அபாயத்தை அம்பலம் செய்வது அவசியமாகும். ஏகாதிபத்தியங்கள், உலகை ஆளத் துடிக்கும் ஒரு வெறி கொண்ட சுரண்டல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாய்களாகும். இது சகல செய்தி ஊடகங்கள் ஊடாகவும், தனது இராணுவ அரசியல் பலத்தினூடாகவும் நாய்வாலை நிமிர்த்தியதாக நம்பவைத்துவிடக் கூடிய சகுனிகள் என்பதை புரிந்து கொண்டு, சுயநிர்ணயத்தை உயர்த்தி அதை அடிப்படையாக கொண்டு, சுயநிர்ணயத்தை குழிதோண்டிப் புதைக்க முனையும் அனைத்தையும் அம்பலப்படுத்தி அரசியல் மயமாக்க வேண்டும்.

ஆனால் புலிகளின் நீண்ட மௌனங்கள், எதிரியை இனம் காட்ட மறுப்பதும், நிலைமை நேரடியாக வரும் போது கொரில்லா வடிவமான தாக்குதல் வழியை கொள்ளத் தயாராக இருப்பதும் அல்லது அரசியல் ரீதியாக சரணடைய தயாராவதும் என்ற பாதையை கைக் கொள்கின்றனர். சரணடைவு அற்ற கொரில்லா தாக்குதல் பணி நடவடிக்கைகளை, ஏகாதிபத்தியம் பயங்கரவாத நடவடிக்கையாக உலகமயமாக்கி, தனது ஆக்கிரமிப்புக்கு நியாயத்தை பெற்றுக் கொடுக்கும் புதிய நிலைமையும் காணப்படுகின்றது.

யாழ்குடா நாட்டை கைப்பற்ற புலிகள் நடத்தும் எந்த தாக்குதலும், சர்வதேச தலையீட்டை உருவாக்கிவிடும் என்றளவுக்கு நிலைமை காணப்படுகின்றது. மாறாக குடாநாட்டை பற்றி ஏகாதிபத்தியம் முடிவு எடுக்க நேரம் கொடுக்காமல் கைப்பற்றவும், கைதான இராணுவத்தை விடுவிக்கின்ற ஒரு நிலைமையில் மட்டுமே, பன்நாட்டு தலையீட்டை நியாயப்படுத்த முடியாத நெருக்கடியை ஏகாதிபத்தியத்துக்கு ஏற்படுத்தும். கொரில்லா பாணியிலான திடீர் தாக்குதல் ஒன்றின் மூலம் கைப்பற்றும் வழியில் தான் புலிகள் திட்டமிடுவர் என்பது ஊகிக்க கூடியவை தான் இதை எதிரியும் எதிர் கொண்டு காத்திருப்பான் என்பதுடன், அதை எப்படி தலையீட்டுக்கான பாதையாக மாற்றுவது என்பதையும் ஏகாதிபத்தியம் திட்டமிடும். இது யுத்தத்தை நீடித்த வகையில் இழுபட வைப்பதும் அல்லது மக்கள் படுகொலையை நடத்துவதும், அதன் மூலம் தலையீட்டுக்கு மனிதாபிமான முகம் வழங்குவது ஒரு வழியாகும். அல்லது புலிகள் கைப்பற்றிய இராணுவத்தை கொன்று விட்டதாகவும் அல்லது மீட்க போவதாக பிரகடனம் செய்த படியும், திடீர் தாக்குதலில் கைப்பற்றப்படும் போது புலிகளுக்கு எதிராக இயங்கிய ஆயிரக்கணக்கான அரசு கைக்கூலிகளின் பாதுகாப்பு பற்றி கூறிய படி, தலையீட்டுக்கான வாய்ப்பு விரிவாக பயன்படுத்தப்படும்.

இந்த நிலைமை ஒருபுறமிருக்க, யாழ் குடாநாட்டில் இராணுவம் தன்னை மீள ஒழுங்கமைத்துள்ளது. கூலிப் மாரடிக்கும் பட்டாளமாக இருந்த போதும், எதற்காக சண்டை செய்கின்றோம் என்று தெரியாத நிலையில் இருந்து, புதிதாக தமது உயிர் பாதுகாப்புக்காக தற்காப்பு சண்டை அல்லது முன்னேறிய சண்டை என்ற நிலைக்குள் இராணுவம் யுத்தத்தை நடத்துவதில் ஒருங்கமைத்துள்ளது. இந்த புதிய நிலைமை ஏற்பட புலிகளின் சொந்த தவறுகள் தான் காரணமாகும். யுத்த முனையில் கைதிகள் பற்றிய புலிகளின் மக்கள் விரோத அரசியல் கண்ணோட்டம், கைதிகளை பிடிக்கப்படுவதை தவிர்த்து கொன்றுவிடுவதை ஒரு யுத்த வழியாக கொண்டிருந்தனர். முல்லைத்தீவு இராணுவ முகாம் அழிப்பில் எந்த ஒரு இராணுவமும் கைது செய்யப்படவில்லை என்ற புலிகளின் நிலைமை, இராணுவத்தில் உயிருக்கான தற்காப்பு பீதியை தீவிரமாக்கின்றது. இங்கு புலிகள் ஒரு இராணுவத்தையும் கைது செய்யவில்லை என்கின்ற போது, கடைசி இராணுவ வீரன் வரை போரிட்டு மடிந்தானா? அவன் வீரானாக போராடினானா? புலிகள் கூட சயனைட்டை பாவிப்பதன் மூலம் தற்கொலைக்கு பாதை காட்டும் போது, கூலி இராணுவம் எப்படி கடைசி இராணுவம் வரை போராடியிருக்கும்? இது போன்ற புலிகளால் கைப்பற்றப்பட்ட பல யுத்த முனைகள் இதை தெளிவாக பிரதிபலித்தது. இந்த இடத்தில் புலிகள் விட்ட சரணடைவுக் கோரிக்கைக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரு இராணுவ வீரன் கூட காது கொடுக்கவில்லை. ஏன்? இவை முன்பு கைதிகளை கையாண்ட அரசியல் வழியினால் ஏற்பட்டது. சிங்கள இராணுவம் போராட விரும்பாத ஒரு மனநிலையிருந்தும், அவர்கள் சரணடைய தயாராக இல்லை. உலக வரலாற்றில் யுத்தம் செய்ய விரும்பாத இராணுவம், தோல்வி பெறும் இராணுவம், பெரும் தொகையாக சரணடைவது வரலாறாகும். ஆனால் இது இலங்கையில் விதிவிலக்காகும். இது புலிகளின் தவறான அரசியல் மார்க்கத்தினால் ஏற்பட்டது. இதை ஒத்த இன்னொரு உதாரணமாக புலிகள் எதிரியாக காட்டி அழித்தொழிப்பை செய்த சொந்த மக்கள் பிரிவை சேர்ந்த நபர்கள், உலக வரலாற்றில் எந்த போராட்டமும் செய்ததில்லை. ஆனால் அதே போல் அதிக எதிரியைக் கொண்ட இயக்கமாகவும் புலிகளே உலக வரலாற்றில் காணப்படுகின்றனர். அதிகமான எதிரிகளை பிரகடனம் செய்து அழிக்கும் போது, நேர்விகிதத்தில் எதிரிகள் அதிகரிக்கின்றனர் என்பது புலிகளின் வரலாறு காட்டுகின்றது. கைதிகளை பிடிக்க மறுத்து கொன்றுவிடும் போது, தற்பாதுகாப்புக்காக போராடும் தன்மை வளர்ச்சி பெறுகின்றது. அதாவது ஒரு போராட்டம் வெற்றி பெறுவதற்கான சூழலை கடுமையாக்குகின்றது. இதனால் அர்த்தமற்ற சொந்த தியாகங்கள் ஊடாக மனித உயிர்கள் வீணாடிக்கப்படுகின்றது. போராட்டம் அதிக நண்பர்களை தேட வேண்டுமே ஒழிய எதிரிகளை அல்ல. ஒரு சமுதாயத்தில் சமுதாய விரோத தன்மை கொண்ட எதிரிகள் மிக சிறதாளவாகவே இருக்கும். ஆனால் புலிகளின் போராட்டம் அதிக எதிரிகளை உருவாக்கியுள்ளது. அத்துடன் சரணடையும் கூலிப் பட்டாளத்தை கைதிக்குரிய நடைமுறையைக் கையாளாமை, போராட்டத்தை மிக கடினமாக்கி தியாகத்துடன் கூடிய மனித இழப்பை அதிகம் கோருகின்றது. நிலைமை தெளிவாக, இராணுவ சரணடைவை உருவாக்காது என்பதை தெளிவாக்கின்றது. சுற்றி வளைக்கப்பட்ட குடாநாட்டு இராணுவம் தற்காப்புக்காக கடைசி இராணுவம் இருக்கும் வரை போராடியேயாக வேண்டும் என்ற நிர்ப்பந்தம் வாழ்வுக்கான விதியாகியுள்ளது. இது போராட்டத்தை பாரிய இழப்பின் ஊடாக சந்திக்க வேண்டிய நிலைமையை தீர்க்கமாக்கியுள்ளது. இது சர்வதேச தலையீட்டுக்கான பாதையை செப்பனிடுகின்றது.

தமிழ் மக்களின் நீண்ட தியாகத்துடன் கூடிய தேசிய விடுதலைப் போராட்டம், உலகமயமாதல் ஒழுங்கில் நடக்கும் தலையீட்டின் ஊடாக, தேசிய சமூக பொருளாதார பண்பாடுகள் சிதைக்கப்படும் அளவுக்கு புதிய நிலைமைகள் காணப்படுகின்றது. புலிகள் தேசிய விடுதலைக்கு பதில் இனவிடுதலையை வைப்பதால், இதன் அபாயம் மேலும் அதிகமாகியுள்ளது. தேசிய விடுதலை சமூக பொருளாதார பண்பாட்டுக் கூறுகளை அழிக்கும் அனைத்து போக்குக்கும் எதிராக போராட வேண்டும். உலகமயமாதல் தேசிய எல்லை கடந்து வளர்ச்சி பெறுகின்ற போது, அது தமிழ் தேசியத்தையும் விட்டு விடுவதில்லை. இது சிங்கள இனவாத அரசின் ஆதரவுடன் அதை அழிப்பதில் பின்நிற்கவில்லை. இதை புலிகள் அங்கீகரித்து ஏற்றுக் கொண்டு போராடாத வரை, புலிகளின் தேசியம் இனத் தேசியமாகவே இருப்பது மறுக்க முடியாத அரசியல்



உள்ளடக்கமாகும். சிங்கள இனவெறி அரசு சிங்கள இன தேசியத்தின் பின், ஏகாதிபத்தியத்தின் கைக்கூலி இராணுவமாக மாறிவரும் போக்கில் இருந்து, தமிழ் மக்களின் தேசியம் வேறுபட வேண்டுமாயின், எதை இனவெறி அரசு செய்கின்றதோ அவை அனைத்தையும் எதிர்த்து புலிகள் போராட வேண்டும். இல்லாத வரை இத் தேசியம் ஏகாதிபத்திய நுகத்தடிக்குள் வீழ்வது தவிர்க்க முடியாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சென்ற இதழில் தமிழீழ மக்கள் கட்சியின் பத்திரிகை மூன்றையும் ஆதாரமாக கொண்ட ஒரு விமர்சனத்தை பார்த்தோம். தமிழீழம் நாலாவது இதழ் தற்போது கிடைத்துள்ளதுடன், அவர்களின் கட்சித் திட்டமும் அதில் அமைப்புக்கு பதில், புலிகளே இவர்களின் வர்க்க அரசியலை பிரதிநிதித்துவப் படுத்துவதால், அவர்களே மீண்டும் உருவாக்கும் அவசியம் தான் என்ன?

# வேதாளம் மீண்டும் மீண்டும்குட்டிபூர்சுவா கனவுகளுடன்...

வெளியாகியுள்ளது.

தமிழ் மண்ணில் ஜனநாயகம் நெருக்கடிக்குள்ளாகி மாற்றுக் கருத்துத்தளம் மற்றும் மாற்று அமைப்புகள் அழித்தொழிக்கப்பட்ட நிலையில், தமிழீழ மக்கள் கட்சியின் புதிய பிரகடனம் வெளியில் இருந்து வந்த போதிலும், மற்றுக் கருத்து தளத்தில் முக்கியத்துவம் வாய்ந்தது என்பது மறுக்க முடியாது. பலரின் எதிர் பார்ப்புகள், நம்பிக்கைகளை துாண்டக் கூடிய நிகழ்வாக இது இருக்கின்றது என்பதும் மறுக்க உண்மை.

ஆனால் இதுவே புதிய நம்பிக்கையீனத்தை உருவாக்கவும், அவசரகோலமாக பூர்சுவா மனப்பான்மையில் முன்வைக்கப்பட்ட திட்டம், கடந்த இயக்க வரலாற்றில் வெளிவந்த திட்டங்களை விட மிக மோசமான அரசியலைக் கொண்ட, புதிய அதே இயக்கங்களை உருவாக்க சபதம் பூண்டுள்ளதை கோடிட்டுக் காட்டுகின்றது.

கடந்த போராட்ட இயக்கங்கள் ஏன் தவறு இழைத்தன என்ற எந்த ஆய்வையும் முன்வைக்காது, இயக்கங்கள் பற்றிய மதிப்பீடு முன்வைக்காது, இலங்கையின் தமிழ், சிங்கள வர்க்கங்கள் பற்றிய மதிப்பீடு இன்றி, எதிரியை பொதுவாக சிங்கள அரசாக காட்டி முன்வைத்த திட்டம், மீண்டும் வரலாற்றை பின்நோக்கித் தள்ளும் முயற்சிதான். இந்த இடத்தில் இப்படி ஒரு

இனி இதை திட்டத்தில் ஆராய வேண்டியளவுக்கு கடந்த கால இயக்க திட்டங்கள் ஆய்வுக்குள்ளாகவில்லை என்பதால், ஒரு திட்டத்தை பூரணமாக ஆராய்வது அவசியமாகின்றது. இதன் மூலம் தான் இவர்களின் அரசியல் கோரிக்கைகள் எந்த வர்க்கத்துக்காக என்பதும், அதன் எல்லையும் தெளிவாகும். அத்துடன் மக்களுக்கான அரசியல் திட்டம் எதுவென்பதையும் கோடிட்டுக் காட்டும். அவர்களின் திட்டத்தைப் பார்ப்போம்.

"ஈழத் தமிழரது சமூக உருவாக்கத்தைப் பொறுத்தவரை, கொழும்பை மையமாகக் கொண்ட தரகு முதலாளிவர்க்கமும், உயர் அதிகார வர்க்க மேட்டுக்குடி பிரிவினரும் தவிர்ந்த ஏனைணய வர்க்கங்கள், சமூக சக்திகள் அனைத்தும் ஈழத்தமிழரது முழுமையான தேசிய விடுதலையை வேண்டி நிற்க்கின்றன."[1] என திட்டம் மதிப்பிடுகின்றது. கொழும்பை மையமாகக் கொள்ளாத தரகு முதலாளித்துவ பிரிவுகளை, தேசியத்தின் நட்ப்புச் சக்கியாக மதிப்பிடும் போக்கு தேசியத்தை ஏகாதிபத்தியத்திடம் அடிமைப்படுத்தும் நோக்கம் கொண்டது. இலங்கை சமூக அமைப்பு என்ன என்ற கேள்வியில் நிலப்பிரபுத்துவத்துடன் சமரசம் காணும் அரசியல் தரகு முதலாளித்துவத்துடன் நட்பான நிலப்பிரபுத்துவத்தின் அரசியல், குறைந்த பட்சம் தேசிய முதலாளித்துவத்துக்கே எதிரானது. தேசிய முதலாளித்துவத்தின் எதிரியாக இருப்பது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தரகு முதலாளித்துவமும், நிலப்பிரபுத்துவமமும் என்ற அரிவரிப் பாடத்தை மறுக்கும், தமிழீழ மக்கள் கட்சி தேசியத்தை ஏகாதிபத்தியத்தின் கால்களில் வைத்துவிட சபதம் ஏற்கின்றனர். இதில் எப்படி பாட்டாளி வர்க்க புரட்சிக்கு வழி அமைக்க முடியும். தேசிய முதலாளித்துவத்தின் எதிரிகளையே அடையாளம் காட்டி போராட முடியாதவர்கள் இம்மியளவுக்கு கூட பாட்டாளி வர்க்க கோரிக்கையை ஒருக்காலும் கோரவோ, பூர்த்தி செய்யவோ முடியாது. வரலாற்று ரீதியாக தேசியம் தேசிய முதலாளித்துவத்தின் பொருளாதார நலன்களை உள்ளடக்கியதே. இந்த அரிவரிப்பாடம் தெரியாத கட்சி பாட்டாளி வர்க்கமும் இதை வேண்டி நிற்க்கின்றது என வேறு பிரகடனம் செய்கின்றனர். பாட்டாளி வர்க்கம் கோருவது சுயநிர்ணயத்தையே ஒழிய முதலாளித்துவ சுரண்டல் தேசங்களை அல்ல. தேசங்களின் ஜனநாயகக் கோரிக்கைகளை அங்கீகரிக்கும் பாட்டாளி வர்க்கம் தனது தலைமையில் அதை பூர்த்தி செய்யவும், அடுத்து தனது வர்க்க நலனில் ஊன்றி நிற்க்கவும் கோருகின்றது.

இதை எல்லாம் புறக்கணித்த தமிழீழ மக்கள் கட்சி தேசிய முதலாளித்துவ கோரிக்கையையும், பாட்டாளியின் கோரிக்கையையும் புறக்கணித்து கொழும்பு அல்லாத தரகு முதலாளிதத்துவத்திடமும, நிலப்பிரபுத்துவத்திடமும் தேசியத்தை தாரைவர்க்க மீண்டும் இயக்கங்கள் போல் அறை கூவுகின்றனர். அத்துடன் கொழும்பு தரகுமுதலாளித்துவப் பிரிவை குறைந்த பட்சம் எதிரியாகக் கூட பிரகடனம் செய்யவில்லை.

"..எமது தேசிய விடுதலையானது சாராம்சத்தில் ஒரு ஜனநாயகப் புரட்சியாகவே இருக்கும்."[1] என்கின்றனர். வரலாற்று இயங்கியலின் வர்க்கப் போராட்டத்தை மறுத்த இக் கோரிக்கை எப்படி சாத்தியமாகும். சோவியத் புரட்சிக்கு பிந்திய ஏகாதிபத்திய சகாப்த்தத்தில் ஒரு முதாலாளித்துவ (ஜனநாயகப்) புரட்சி எப்படி வெல்லமுடியும்?, உயிர் வாழமுடியும்? என்பது அல்லவா கேள்வி. ஜனநாயகப் புரட்சியின் கடமைகளை ஏகாதிபத்தியம் சார்ந்து தரகு முதலாளித்துவமும், நிலப்பிரபுத்துவமும் அழித்து ஒழிக்கும் சகாப்தத்தில் நாம் உள்ள போது, ஜனநாயகப் புரட்சியின் சக்திகள் எப்படி எதிர்த்து நிற்க முடியும். ஜனநாயக புரட்சியின் வர்க்க சக்திகள் தனது சொந்த வர்க்க நலன் சார்ந்த ஊசலாட்டத்துடன் தரகு முதலாளித்துவத்திடம் சரணடைவது மட்டுமே நிகழ்கின்றது. இந்த இடத்தில் பாட்டாளி வாக்க நலன்கள் மட்டுமே ஜனநாயக புரட்சின் கடமையை ஏற்றுக் கொள்வதால், தனது தலைமையில் ஊசாலாடும் பிரிவுகளை வென்று எடுத்து ஜனநாயக கடமைகளையும் பூர்த்தி செய்கின்றது.

ஆகவே ஜனநாயக புரட்சியை விரும்பும் பிரிவுக்கு முன்னால் இருப்பது இரண்டு பாதை மட்டுமே. ஒன்று புரட்சியை கைவிட்டு தரகு முதலாளித்துவத்திடம் சரணடைவது அல்லது புரட்சியின் கடமையை நிறைவு செய்ய பாட்டாளி வர்க்கத்தின் பக்கம் அணிதிரள்வதாகும். இதன் மூலம் ஜனநாயக கடமையையும் பூர்த்தி செய்வதாகும். இந்த இடத்தில் புலிகளிடம் கைது செயயபபடட நிலையில் அவர்களிடமே நடத்திய ஒரு விவாதத்தில் இருந்து ஆராய்வது நன்று. இடது சாரிகள் இந்தியா உள்ளிட்ட அனைத்து எதிரிகளின் எதிரியாக இருப்பதால், ஏன் புலிகள் கூட்டு அமைக்க முடியாது எனக் கேட்டார். அப்போது அவர்கள் நாம் உலக வராலாறு அனைத்தும் படித்ததாயும், வலது இடது கூட்டில் இடதுகளே எப்போதும் வென்றதாக கூறி, தமக்கு அவை அவசியம் இல்லை எனக் கூறினர்.

இந்தக் கூற்றின் பின் உலகில் வலது இடது ஐக்கிய முன்னணியில் எப்போதும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வலதுகள் வென்றதையும், விதிவிலக்காக ஒரு சிலவற்றில் மட்டுமே ( நீண்ட போக்கில் இவை தற்காலிகமாக) இடதுகள் வென்றதையும், இன்று வரலாற்றில் இடதுகள் எங்கும் தோற்கடிக்கப்பட்டதையும் காண்கின்றோம். ஐக்கியப்பட்ட போராட்டத்தில் இடதுக்குள்ளேயே வலதும், வலதுக்குள்ளேயே இடதும் காணப்படுவதும், வர்க்கப் போராட்டம் தொடர்வதால் வெற்றி தோல்வி நிரந்தரமாகி விடுவதில்லை.

இங்கு பிரச்சனை வலது இடது என்பதில் தேசியத்தை பாதுகாப்பது எது என்பதே ஒழிய, யார் வெற்றி தோல்வியைச் சந்திக்கின்றனர் என்பது அல்ல. இடது அல்லாத தேசியம் வலது சார்ந்து ஏகாதிபத்தியத்திடம் சரணடைவாகவே இருக்கும். அதாவது நாட்டு எல்லைப் பிரிப்பை தேசியமாக காண்பதும், அதை உலகின் ஏதாவது ஏகாதிபத்திய நலன் சார்ந்து இருத்தலுமே தேசியம் எனப் புரிந்து கொள்ளும் வலது அரசியலின் ஆதிக்கமே, இடதை அழிக்கின்றது. வலதில் உள்ள இடது வெளிப்படில், இடதை அழிப்பதற்கு பதில் ஐக்கியத்தை முன்வைக்கும். வலதில் உள்ள வலது தரகு முதலளித்துவத்தையும், வலதில் உள்ள இடது தேசிய முதலாளித்துவத்தையும், எப்போதும் பிரதிபலிக்கும்.

இங்கு தமிழீழ மக்கள் கட்சி வலதில் உள்ள வலதாக உள்ளதால் தான் எதிரியையும், நண்பனையும் அடையாளம் காட்டாது, பொதுவில் ஜனநாயக கோரிக்கையையும், அதேபோல் சோசலிசம் பற்றியும் கூறுகின்றனர். சோசலிசம் என்பது பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் கோருவதாகும். அந்த கோரிக்கையை தமிழீழ மக்கள் கட்சி கோராத நிலையில், போலித்தனத்தில் மக்களை ஏமாற்ற சோசலிச வார்த்தை அவசியமாகின்றது. எதிரியை அடையாளம் காட்டாததும், வர்க்க அரசியலை தெளிவாக்காத ஜனநாயக கடமை, உண்மையில் எல்லைப் பிரிப்புக்கு அப்பால் எதையும் கோராத பிற்போக்கு தேசியமாகும்.

அடுத்த வரிகளை ஆராய்வோம். "..பலநாடுகள் போராடடிப் பெற்ற அரசியல் சுதந்திரம்"[1] ஆனது எதார்த்தத்தில் எவ்வித அர்த்தமும் அற்றதாகியுள்ளது"[1] என்று இன்றைய நவகாலனித்துவ சூழலை ஒட்டிச் சொல்லுகின்றனர். போராடிப் பெறாத சுதந்திர நாடுகளும், போராடிப் பெற்ற சுத்திரமான நாடுகளும் அல்லவா உருவானது. இங்கு "அரசியல் சுதந்திரம்"[1] என்பது எந்த வர்க்கத்தின் சுதந்திரம். பாட்டாளி வர்க்கத்தினதோ, தேசிய முதலாளித்துவத்தினதோ "அரசியல் சுதந்திரத்தை"[1] எந்த அரசுகளும் போராடியோ, அமைதியாகவோ பெற்றது கிடையாது. விதிவிலக்காக கிடைத்தவை அனைத்தும், பாட்டாளி வர்க்க தலைமையில் திட்டவட்டமாக ஒரு உள்நாட்டு யுத்தத்தின் ஊடாக, எதிரியை அடக்கி அதன் மேல் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவி பெற்றவையாகும். மற்றவை எல்லாம் காலனிய ஏகாதிபத்தியங்களிடம் பேரம் பேசியும், மற்றைய ஏகாதிபத்திய தயவில் ஒரு ஏகாதிபத்தியத்தை சாந்தும் பெற்றதன் ஊடாக, உள்ளடகத்தில் ஏகாதிபத்தியத்தின் நலன்களை பாதுகாக்க பெறப்பட்ட பொம்மை ஆட்சிகளே. இந்த அரசுகள் நிலப்பிரபுத்துவ, தரகு முதலாளித்துவ நலன்களைப் பாதுகாக்கப் பெற்ற 'அரசியல் சுதந்திரம்' தரகு அரசுகளே. மக்களின் நலன் சார்ந்து எந்த "அரசியல் சுதந்திரத்தை"[1], வர்க்கப் போராட்டத்தை பாட்டாளி வர்க்க தலைமையில் வென்று எடுக்காத, எந்த நாடும், உண்மையான சுதந்திரத்தை பெற்றுவிடவில்லை. ஆகவே "அரசியல் சுதந்திரம்"[1] என்பது, அரசியல் மோசடியுடன் தாம் போராடப் போகும் தேசிய எதிர்ப்பு (தேசியமுதலாளித்துவ, பாட்டாளி வர்க்க எதிர்ப்பு) அரசியலை நியாயப்படுத்த வைக்கும் எடுகோள்கள் தான். "1948 இல் பிரித்தானிய ஆக்கிரமிப்பாளர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலங்கையை விட்டு வெளியேறிய போது...."[1] என்கிற வார்த்தையில் மோசடி மேலும் தெளிவாக்குவதைப் பார்ப்போம். பிரித்தானியர் ஆக்கிரமிப்பாளர்கள் மட்டுமா! இல்லையே, அவர்கள் காலனித்துவவாதிகள் அல்லவா. இதற்க்கு பின் ஏகாதிபத்திய நலன்கள் இருந்தல்லவா! ஆக்கிரமிப்பாளன் என்பது எதோ ஒரு நோக்கத்தில் வந்து, அதே வேகத்தில் மீண்டது போன்ற விளக்கங்களும் இதற்குள் முன் வைக்கப்படுகின்றது. மாறாக இவர்கள் பல பத்து வருடங்கள் ஆண்டு எம் மண்ணின் வளங்களை கொள்ளையடித்ததுடன், காலனித்துவ கூறுகளையும் பண்பாடு கலாச்சார தளத்திலும் வளர்த்தெடுத்தனர். எந்தப் போராட்டத்தின் ஊடாகவும் காலனித்துவத்தை கைவிட்டுச் செல்லாது, தாம் உருவாக்கிய காலனித்துவ விசுவாசிகளிடம் ஆட்சியை ஒப்படைத்து வெளியேறிய போது, என்றும் தமது காலனித்துவ நலன்களை இழந்தது கிடையாது. ஆக்கிரமிப்பாளன் என்பதன் ஊடாக பிரித்தானிய நலன்கள் தொடர்ச்சியாக பாதுகாத்த வரலாற்றை மறுக்கும் மோசடி அபத்தமானது. இதன் தொடாச்சியில் கறுப்பு ஆட்சியை ஒட்டி கூறுவதைப் பாப்போம். "பல இன, மொழி, மத, கலாச்சார வேறுபாடுகளைக் கொண்ட மக்கள் பிரிவினரை சமத்துவமாக ஒன்றிணைத்து அவர்களை 'இலங்கையர்' என்ற ஒரே தேசமாக கட்டமைக்கும் அரசியல் கடமை இத்தலைமைக்கு இருந்தது."[1] என்கின்றனர் தமிழீழ மக்கள் கட்சியினர். தாம் அதில் இருந்து இருப்பின் அதை செய்திருப்போம் என்பதையே சொல்வதன் ஊடாக, தமது அரசியல் வழியை நியாயப்படுத்துகின்றனர்.

வெள்ளைக்காரன் கொடுத்த ஆட்சியை பெற்றவர்கள் பாட்டாளி வர்க்கம் அல்லது தேசிய முதலாளித்துவ பிரிவுகள் என்று நினைப்பது அல்லது பெற்றவர்கள் தேசியத் தன்மை கொண்ட தரகு நிலப்பிரபுத்துவ பிரிவுகள் இப்படி ஒன்றுபடுத்தியிருக்க முடியும் என அப்பாவிகள் தான் விளக்கமுடியும். ஆனால் தமிழீழ மக்கள் கட்சி கூறுகின்றது என்றால் அதாவது இனச் சகிப்புத் தன்மையை சுயநிர்ணயம் அல்லாத வழியிலும் தீர்த்து இருக்க முடியும் என கூறுபவர்கள், எப்படி இன்று நடக்கும் யுத்தத்தை புலிகளை விட மேலும் சிறப்பாக செய்யமுடியும். புலிகள் கூட 1948இல் பெற்ற சுதந்திரத்தை, இவர்களை விட சரியாக இல்லாவிட்டாலும் நன்றாக அம்பலப்படுத்துகின்றனர். பிரித்தானியாவின் பிரித்தாளும் தந்திரத்தில் ஆரம்பம் முதலே, அவர்களால் வளர்க்கப்பட்ட தேசியத் தலைவர்களை உள்வாங்கிய படியாலேயே, பிரித்தானியா அவர்கள் கையில் ஆட்சி அதிகாரத்தை அமைதியாக ஒப்படைத்தனர். சந்திரிக்கா ஆட்சியில் வந்தால் தேசிய இனப் பிரச்சனையை தீர்ப்பார் என்று கூறி பெரும் பகுதி சோரம் போனது போல், தமிழீழ மக்கள் கட்சி 1948லேயே சோரம் போக கோட்பாட்டு விளக்கம் கொடுக்கின்றனர். அத்துடன் இவர்கள் "....சிங்கள மக்களை மட்டும் சிங்கள தேசமாக கட்டமைத்தது..."[1] என்கின்றனர். இந்த வாதம் தேசங்கள் பற்றிய உண்மையை மறுப்பதாகும். சிங்கள தேசம் ஒன்றைக் கட்டி அமைத்திருப்பின் அதுவே ஏகாதிபத்திய எதிர்ப்பை கொண்டிருக்கும். உண்மையில் சிங்கள தேசம் கட்டியமைக்கப்பட்டுள்ளதா? இல்லையே மாறாக சிங்கள இனவாதமே கட்டமைக்கப்பட்டுள்ளது. சிங்கள தேசம் ஒன்றை கட்டியமைக்க வேண்டும் எனின், அது குறைந்த பட்சம் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து பாட்டாளி வர்க்கத்தை நட்பாக கொண்டு இருக்க வேண்டும். இது இருப்பின் தமிழ் தேசமும் இருக்கவேண்டும். இரண்டில் ஒன்று இன்றி ஒரு தேசமும் இருக்கவும் முடியாது கட்டமைக்கவும் முடியாது. ஒன்று இருப்பின் மற்றது அதன் நிபந்தனையாகும். இருப்பது சிங்கள இனவாதமும், இதற்கு எதிரான போராட்டம் தமிழ் இனவாதமா அல்லது தமிழ் தேசியமா என்பதே அடிப்படைக் கேள்வியாகும். புலிகளின் தமிழ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இனவாதம் எப்படி உள்ளதோ, அதற்கு சற்று குறையாத இனவாதம் தான் "சிங்கள தேசம்"[1] என்ற வரையறையை வைக்க முடிகின்றது. அதாவது எல்லைப் பிரிப்புகள், ஆட்சியின் இனத்தன்மைகளை கொண்டு ஆட்சி வடிவத்தை, தேசமாக பார்க்கும் போக்கு தமிழ் இனவாதமாகும். தமிழீழம் பத்திரிகை 14 இல் "தேசம் மீட்கப்படுகிறது"[3] என்ற ஆணையிரவு தாக்கதலை ஓட்டிய கட்டுரை 'தேசத்தின்' உள்ளடகத்தை வெறும் எல்லைப் பிரிப்பாகவே வெளிப்படுத்துகின்றது. தமிழீழம் பத்திரிகை நாலில், ஆட்சியில் இருந்து மண்டேலா விட்டு ஒதுங்கியதை, ஜனநாயகப்பண்பாக காட்டுவது இதன் அரசியல் வழியில்தான். ஜனநாயகம் என்பது எந்த வர்க்கத்துக்கு, எப்படி போராடி, தனது போராட்டத்தை தொடர்வது என்பது மட்டுமே அடிப்படையாகும். இல்லாத எடுகோளை ஜனநாயகமாக காட்டுவதும், சிங்கள தேசம் என்ற வரையறைகளும், மக்களுக்கான அரசியல் வழியில் இருந்து எழுபவை அல்ல. அடுத்து திட்டத்தில் பார்ப்போம்."...'தமிழீழ ஜனநாயக் குடியரசை' நிறுவுவதே எமது குறைந்தபட்சத் திட்டம் என எமது கட்சி பிரகடனம் செய்கிறது."[1] என்கின்றர். ஒரு கட்சி தனது உயர்ந்த பட்சத் திட்டத்தையல்லவா முன்வைக்க வேண்டும். குறைந்த பட்ச திட்டத்தில் அணிதிரளும் மக்கள், ஆட்சி அமைத்தவுடன் அதைத் தாண்ட ஒருக்காலும் அனுமதிக்க மாட்டார்கள். உடனடியாகவே உள்நாட்டு யுத்தமல்லவா தமிழீழ ஜனநாயக் குடியரசில் ஏற்படும். எப்போதும் கட்சி திட்டம் என்பது உயர்ந்த பட்ச திட்டமாக, அதன் அனைத்துப் பகுதியும் பகிரங்கமாக அணிகளுக்குள்ளும், நிலைமையை பொறுத்து மக்களுக்குள்ளும் இருக்க வேண்டும். இங்கு நிலமை என்பது விதிவிலக்கானது. இந்த விதிவிலக்கு தற்காலிகமானது. திட்டம் எப்போதும் பகிரங்கமாக மக்கள் முன் வைத்து, அதன் அடிப்படையில் அணிதிரட்டியிருக்கவேண்டும். சொந்த அணிக்கே குறைந்த பட்சம் தான் என்றால், அக்கட்சியின் ஜனநாயக மத்தியத்துவம் மறுக்கப்பட்ட சதிக்குழு ஒன்று, திட்டத்துக்குள் உயர்ந்த பட்ச திட்டத்துடன் திட்டமிடுகின்றதா? கட்சி திட்டம் தனது உயர்ந்த பட்ச திட்டத்தால் திட்டவட்டமாக ஜனநாயக மத்தியத்துவத்தை கொண்டிருக்க வேண்டும். இல்லாது மறுக்கப்பட்ட கட்சி, ஜனநாயகத்தை திட்டத்திலேயே குழி தோண்டி புதைத்தபடிதான் தன்னை அடையாளம் காட்டுகின்றது. இதில் தமிழீழ மக்கள் கட்சி தனது குறைந்த பட்ச திட்டத்தை அணிகளுக்கு வைப்பதால், உயர்ந்த பட்சத் திட்டம் மூலம் திட்ட அணிகளுககே ஆரம்ப முதல் ஜனநாயக மத்தியத்துவத்தை மறுத்த, ஜனநாயக விரோத அமைப்பாகும்.

தொடர்ந்து தமிழீழ மக்கள் கட்சி "தேசிய விடுதலையானது தேசிய அடக்கு முறைக்கு முடிவு கட்டுகிறது. விரிவான ஜனநாயகத்தை மக்கள் திரளுக்குப் பெற்றுத் தருகிறது...." என்கின்றனர். தேசிய விடுதலை என்றால் என்ன? தேசிய விடுதலை பெற்ற நாடுகளில் விரிவான ஜனநாயகத்தை மக்கள் திரள் பெற்றதா? தேசிய அடக்குமுறையை கைவிட்டதா? என்ற அடிப்படைக் கேள்விகள் மீது நாம் ஆராய்வோம்.

தேசிய அடக்குமுறையை சிங்கள இன அடக்குமுறையாக பார்ப்பதும், தேச விடுதலையை எல்லை பிரிப்பாக பார்ப்பதும், ஜனநாயகத்தை தமிழ் ஆட்சியூடாக பார்ப்பதில் இருந்து 'தமிழீழ மக்கள் கட்சி' தன்னை அடையாளம் காட்டி நிற்கும் போது, இத் தேசியம் ஏகாதிபத்திய தரகு தேசியத்தை நோக்கி காலெடுத்து வைக்கின்றனர். தேசம் என்பது தேசத்தின் சொந்த பொருளாதார, பண்பாட்டு, கலாச்சாரம் மீது கட்டமைப்பதாகும். இதை, மறுத்த, பார்க்க மறுத்த எந்த வாதங்களும், போராட்டங்களும் தேசியமாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருப்பதில்லை. இது தேசத்தை உருவாக்குவதில்லை. இந்த அரிவரிப் பாடத்தை கைவிட்ட யாரும் தேசியவாதியாக கூட இருப்பதில்லை. மாறாக ஏகாதிபத்திய கைக்கூலிகளாக இருக்கின்றனர். தமிழீழம் பிரிகின்ற ஒரு நிலையில், தமிழர் ஆளுகின்ற ஒரு ஆட்சியில் தேசியம் இருக்க முடியுமா? இருக்க முடியும் எனின் எப்படி? இல்லை எனின் எப்படி? என்ற அடிப்படையான கேள்வி முக்கியத்துவம் வாய்ந்தது. தமிழர் ஆள்கின்ற பிரிந்த தமிழீழம் எப்படி தேச பொருளாதாரத்தை கட்டமைக்கும்? உலகில் உலகமயமாதல் அனைத்தையும் விழுங்கி செரித்து ஏப்பமிட்டு பிரமாண்டமான சக்தியாக வளர்ச்சி பெற்று வரும் உலக வரலாற்றில், தேசம் எப்படி சுயேட்சையாக இருக்கும். ஏகாதிபத்திய உதவி, தயவில் வாழும் ஒரு நாட்டில், கட்டமைக்கப்படும் எந்த பொருளாதார வடிவமும், தேசியத் தன்மை கொண்டவையல்ல. ஏகாதிபத்திய உதவி, ஏகாதிபத்திய மூலதனம் தேசத்தின் மீது கொள்ளையடித்துச் செல்லும் ஒரே நோக்கில் தேசத்தை சூறையாடவே செய்கின்றது. சூறையாடுவதை ஏற்றுக் கொள்ளும், எல்லைப்பிரிப்பை அடிப்படையாக கொண்ட தமிழர் ஆட்சி உள்ளகத்தில் தேசமாக, தேசியமாக இருப்பதில்லை. அது தரகு முதலாளித்துவமாக, ஏகாதிபத்திய கைக்கூலி தேசிய எதிர்ப்பு அரசியலாக இருக்கின்றது. இது சொந்த நாட்டு தேசியத்தை எதிர்த்து நசுக்குகின்றது. இது பொருளாதார துறையிலும், அதை முன்வைத்து போராடும் தேசிய முதலாளித்துவ, பாட்டாளி வர்க்க சக்திகளை ஒட்ட நசுக்கி ஒடுக்குகின்றது.

இங்கு 'விரிவான ஜனநாயகம்' என்பது ஏகாதிபத்திய கைக்கூலிக்கே ஒழிய, சொந்த தேசிய மற்றும் பாட்டாளி வர்க்கத்துக்கு அல்ல என்பது தெட்டத்தெளிவானது. அத்துடன் ஜனநாயகம் என்பது உள்ளக்கத்தில் மறுப்பை அடிப்படையாக கொண்டது. மறுக்கப்படும் ஒரு பிரிவு உள்ளவரை தான் ஜனநாயகம் இருப்பது யதார்த்த இயங்கியலாகும். 'விரிவான ஜனநாயகம்' யாருக்கு மறுப்பது என்பது, அரசியல் ரீதியாக பாட்டாளி மற்றும் தேசிய முதலாளித்துவ பிரிவுக்கேயாகும். அனைவருக்கும் ஜனநாயகம் என்றதன் அரசியல் உள்ளடக்கம் இது தான்.

சிங்கள இனவாதத்தில் இருந்து விடுதலை என்பது, 'தேசிய அடக்குமுறைக்கு முடிவு'[1] கட்டுவதில்லை. மாறாக தேசிய ஒடுக்குமுறை நேரடியாக ஏகாதிபத்தியம் சார்ந்து நிலவுவதே எஞ்சும். இங்கு 'விரிவான ஜனநாயகத்தை மக்கள் திரளுக்குப் பெற்றுத் தருகிறது' என்பது உண்மையில் தரகு முதலாளித்துவத்துக்கு மட்டுமே சாத்தியமானது. கிடைக்கும் விடுதலை சுரண்டலை ஒழிப்பதில்லை. ஏகாதிபத்திய தரகுதனத்தை அடிப்படையாக கொண்டே தேசம் நிர்மாணிக்கப்படுகின்றது. கொழும்பை மையமாக கொண்ட தரகு முதலாளிகளை மட்டும் எதிரியாக பிரகடனம் செய்யும் போதே, கொழும்பு அல்லாத பிரிவுகளின் தரகு தனத்தை அடிப்படையாக கொண்டே தேசம் கட்டமைக்கப்படும் என்பதையே தெளிவாக்கின்றனர்.

கட்சி பற்றிய விளக்கத்தை பார்ப்போம். ".. 'புரட்சிகரக் கட்சி' என்பது, வரலாற்றில் மிகவும் முன்னேறிய கோட்பாடாகிய மார்க்சியத்தால் வழிநடத்தப்படுகின்றது, அடக்கப்படுகின்ற மற்றும் விளிம்புநிலை மக்களது நலன்களை முதன்மையாகக் கொண்டதும், அடக்கப்படும் - விளிம்புநிலை - ஜனநாயக மக்கட் பிரிவினால் தலைமை தாங்கப்படுவதுமான கட்சி என்றே அர்த்தம்."[1] என்ற விளக்கம் மார்க்சியத்தினை திரித்து, தமது தரகுதனத்தக்கு இசைவாக விளக்குவதாகும்.

கட்சி என்பது மார்க்சியத்தால் வழிநடத்தப்படுவதில்லை. பாட்டாளி வர்க்கத்தால் வழிநடத்தப்படுகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாட்டாளி வர்க்கம் தலைமை, தொழிலாளர் வர்க்கத்தின் அரசியல் அதிகாரத்தை நிறுவவும், வர்க்கப் போராட்டத்தை தொடர்ந்து நடத்தும் நடைமுறைப் போராட்டத்தில் உருவாகின்றது. இந்த பாட்டாளி வர்க்கத்துக்கு, மார்க்சியம் நடைமுறை ரீதியாக வழிகாட்டும் ஒரு கோட்பாடாகுமே ஒழிய, வழிநடத்தும் வழிகாட்டியல்ல. வழிகாட்டி பாட்டாளி வர்க்கத் தலைமையேயாகும். இங்கு மார்க்சியம் முன்னேறிய கோட்பாடாகி விடவில்லை. மாறாக மார்க்சியம் சமூக விஞ்ஞானமாக சமுதாயத்தை முரணின்றி விளக்குகின்றது. அதாவது பலமுன்னேறிய கோட்பாடுகளில் மார்க்சியம் ஒன்று அல்ல. மாறாக மார்க்சியம் சமூக இயக்கத்தை முரணின்றி விளக்கும் ஒரு இயற்கை இயங்கியலாக, பாட்டாளி வர்க்கத்துக்கு நடைமுறை ரீதியாக வழிகாட்டும் தத்துவமாகும். இங்கு பாட்டாளி வர்க்கத் தலைமை மார்க்சியத்தை திரித்து விளக்குவது போல் 'அடக்கப்படுகின்ற மற்றும் விளிம்புநிலை மக்களது நலன்களை முதன்மையாகக் கொண்டதும், அடக்கப்படும் - விளிம்புநிலை - ஜனநாயக மக்கட் பிரிவினால் தலைமை தாங்கப்படுவதுமான' அல்ல. அடக்கப்பட்ட, விளிம்பு நிலை மற்றும் ஜனநாயகப் பிரிவுகள் வர்க்கத் தன்மை கொண்டவர்கள். மார்க்சியம் வர்க்கம் கடந்து தனது கோட்பாட்டை உருவாக்கியதில்லை. பாட்டாளி வர்க்கம் வர்க்கம் கடந்து தன்னை உருவாக்கியதில்லை. மார்க்சியத்தினதும், பாட்டாளி வர்க்கத்தினதும் அடிப்படை அரசியல் உள்ளடக்கம் வர்க்கமாகும். சமுதாய ரீதியாக வர்க்க முரண்பாட்டில் சிக்கி திணறும் பல்வேறு வர்க்கப்பிரிவுகளின், தலைமையாக பாட்டாளி வர்க்கமோ அதன் கட்சியோ இருப்பதில்லை. பாட்டாளி வர்க்கத்தின் கட்சி எப்போதும் தொழிலாளர் வர்க்கத்தின் கட்சி மட்டுமே. இதைத் தான் மார்க்ஸ் தனது பெயரில் நிறுவிய மார்க்சியத்தின் சாராம்சமாக முன்வைத்தார். வர்க்கம் கடந்த கோட்பாட்டு விளக்கமோ, அணிதிரட்டலோ, தலைமையோ அடிப்படையில் இன்று ஏகாதிபத்திய தொங்கு சதைகள் தான். பல்வேறு ஒடுக்கப்பட்ட, அடக்கப்பட்ட மக்கள் பிரிவின் மீது மார்க்சியம் ஜனநாயக உள்ளடக்கத்தில் முன்னெடுத்துப் போராடுவதுடன், நடைபெறும் போராட்டங்களை ஆதரித்து நிற்கின்றது. அதற்காக அந்த பிரிவுகளில் உள்ள பல்வேறு வர்க்கங்களின் கதம்பமாக தனது கட்சியை சீரழித்துவிடுவதில்லை.

அடக்கப்பட்ட மற்றும் விளிம்பு நிலையில் இன்று கணிசமான தமிழ் தரகு முதலாளிகள், நிலப்பிரபுகள், மதப் பிரிவுகள் என்ற எண்ணற்ற வர்க்கப் பிரிவுகள் இனவாதத்தை முகம் கொள்வதால், கட்சியில் அவர்களின் தலைமையையும் ஏற்றுக் கொள்ள, மார்க்சியத்தை திரித்து விளக்குவதன் நோக்கம், அவர்களுக்கான தரகு அரசியல் தான்.

சமுதாயத்தில் வேறுபட்ட வர்க்கங்கள், வேறுபட்ட சமுதாய குறிக்கோளுடன் போராடுகின்ற போது, சில நோக்கத்தை வந்தடைய ஐக்கிய முன்னணி சாத்தியமானதே. இந்த ஐக்கிய முன்னணி கூட பல வடிவங்களில் ஏற்படக் கூடியவை. ஆனால் இது ஒரு பாட்டாளி வர்க்க கட்சியினுள் சாத்தியமில்லை. கட்சி என்பது எப்போதும் ஒரு வர்க்கத்தின் கட்சி மட்டும் தான். பல வர்க்கத்தின் கட்சி என்பது உலகில் என்றும் உருவானதில்லை, உருவாகப் போவதில்லை. அடக்கப்பட்ட, விளிம்பு நிலை மற்றும் முற்போக்குகள் ஒன்றிணைந்து மார்க்சியத்தை ஏற்றுக் கொண்டால், அதன் வர்க்கத் தன்மை என்ன? நிச்சயமாக பாட்டாளி வர்க்கத்தின் கட்சியாக இருக்கமாட்டாது. பாட்டாளி அல்லாத சுரண்டும் வர்க்க கட்சியாகவே இருக்கும். உலகில் சுரண்டலுக்கு எதிராக போராடும் ஒரேயொரு வர்க்க கட்சி பாட்டாளி வர்க்கம் மட்டுமேயாகும். இதற்குள் விளிம்பு,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடக்கப்பட்ட மற்றும் முற்போக்கு எல்லாம் இணைந்தால், அது சுரண்டலை ஏற்றுக் கொள்ளும் ஒரு முதலாளித்துவ கட்சியாகும்.

அடுத்து ஆணாதிக்கம் தன்னைப் பாதுகாக்க, போராட்ட கடமையை பெண்களிடம் கைவிட்டுச் செல்லும் பிதற்றலைப் பார்ப்போம். "... ஆணாதிக்க முறைமையின் குறிப்பான போராட்டங்களை பெண்களே தலைமை தாங்கி நடாத்த வேண்டும்."[1] என்கின்றனர். பெண்களை அடிமைப்படுத்தியது ஆண்களா?, ஆணாதிக்கமா? இந்தியாவின் சாதிக் கொடுமையையும், மத அடக்குமுறையையும் ஒழிக்க யாரை எதிர்த்துப் போராட வேண்டும் பார்ப்பானனையா? அல்லது பார்ப்பனியத் தத்துவத்தையா? ஒரு சமூக போக்கினை மாற்ற தனி மனிதர்கள், ஒரு பிரிவு மக்களை மாற்றி அமைப்பதன் மூலம் அல்லது ஒரு தனி மனிதன், ஒரு பிரிவு மக்கள் கூட்டம் போராடுவதன் மூலம் மாற்றிவிட முடியும் என்ற கோட்பாடு முன்வைக்கப்படுகின்றது. அதாவது மனிதர்களை மாற்றுவது என்ற அரசியல், கருத்துமுதல் வாதமாகும். தனிமனிதர்கள் மாறுவதால் சமூகம் மாறிவிடுவதில்லை. இது போல் தனி மனிதன் போராடுவதால் சமூகம் மாறிவிடுவதில்லை. தனி மனிதர்கள் சமூக இயக்கத்தில் பங்களிப்பு வழங்குபவர்களாகவே இருக்கின்றனர். சமூக இயக்கம் தான் சமூகத்தை மாற்றுகின்றது. இங்கு தனிமனிதர்கள் பங்களிக்கின்றனர்.

சமூக இயக்கமும் அதன் பிரதிபலிப்பும் பொருளாதார அடிக்கட்டுமானம் மீது உருவாகின்றது. ஆணாதிக்கத்தை எடுப்பின் அது தனிச் சொத்துரிமை அமைப்பின் ஒட்டுண்ணியாகும். இதை பெண்கள் வர்க்கம் கடந்து போராடுவதன் மூலம் ஒழித்து விடமுடியாது. அதுபோல் பெண்கள் தனித்து, வர்க்கத் தன்மை கொண்டும் ஒழித்துவிட முடியாது. சமுதாயம் என்பது பெண்களை மட்டும் கொண்டவையல்ல. அது போல் ஆணாதிக்கம் பொருளாதார அமைப்புக்கு வெளியில் சுயேற்ட்சையானது அல்ல. ஆணாதிக்கம் ஆண்கள் மற்றும் சமூக பொருளாதார விளைவுகளில் இருந்து தனித்துவமானவையோ, சுயேட்சையானவையோ அல்ல. சுயேட்சையற்ற ஆணாதிக்க இயக்கம் எதனுடன் பின்னிப் பிணைந்துள்ளதோ, அவற்றுடன் இணைத்தே, ஆணாதிக்கத்தை வேர் அறுக்க முடியும். அடிமைப்படுத்திய வடிவங்களில் இருந்து தனித்துவமாக, அதற்கு புறம்பாக கோரும் மாற்றங்கள், உண்மையில் ஆணாதிக்கத்துக்கு நிகரான வகையில், பெண் ஆணாதிக்க தன்மையை அடைவதாகும். ஆணாதிக்கத்துக்கு எதிரான குறிப்பான போராட்டத்தை பெண்கள் மட்டுமல்ல ஆண்களும் முன்னெடுக்க முடியும். இதை பெண்களுக்கு குத்தகைக்கு வழங்குவது என்பது, வழங்குபவர்களும், வழங்க விளக்குபவர்களும், கோருபவர்களும் தமது ஆணாதிக்க வடிவத்தை பாதுகாத்துக் கொள்ளவே செய்கின்றனர். பெண்கள் மட்டுமல்ல ஆண்களும் ஆணாதிக்கத்தை எதிர்த்து போராட முடியும். அது போல் ஆண்கள் மட்டும் ஆணாதிக்கத்தை வெளிப்படுத்துவதில்லை பெண்களும் வெளிப்படுத்துகின்றனர். எனவே போராட்டம் ஆணாதிக்கத்தை எதிர்த்து, பால் வேறுபாடு கடந்து போராட வேண்டும். பெண்கள் தனித்துவமாக தமக்கு மீதான ஒடுக்குமுறையை விவாதிப்பது, போராடுவது எல்லாம், பாட்டாளி வர்க்கத் தலைமையில் (இங்கு பாட்டாளி வர்க்க தலைமை என்பது, ஆண் பெண் வேற்றுமையைக் கடந்தது) போராட்டத்தை விரிவாக்கி, பரந்த தளத்துக்கு எடுத்துச் சென்று வெகுசன நடைமுறை அரசியல் வழகாட்டலுக்காகவே ஒழிய, ஆணில் இருந்தும் சமூக பொருளாதார விளைவுகளில் இருந்தும் விலகியிருக்கவல்ல.

சிங்கள மக்கள் பற்றி தமிழ் இனவாதிகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கூறுவதைப் பார்ப்போம் "சிங்கள உழைக்கும் மற்றும் விளிம்புநிலை மக்களில் பெரும்பான்மையினர் பௌத்த சிங்களப் பேரினவாத சித்தாந்தத்திற்கு பலியாகி இருக்கின்றனர்."[1] யார் கூறுகின்றனர் "தமிழீழம்" என்ற பெயரில் பத்திரிகையில் "தமிழீழ மக்கள் கட்சி"யின் பெயரில் கூறுகின்றனர். ஏன் சிங்கள மக்களை மட்டும் கூறுவதன் உள் நோக்கம் என்ன? சொந்த இனவாததை பூச்சு இடத்தான். தமிழ் மக்கள் கூட தமிழ் இனவாதத்தின் சித்தாந்தத்துக்கு பலியாகவில்லையா? சிங்கள இனவாத அரசு தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டுள்ள இன அழிப்பில், தமிழ் மக்கள் அதை எதிர்த்து போராடும் போது மற்றைய இனம் மீது ஜனநாயக பூர்வமான அணுகுமுறையை கையாண்டது இல்லை. சிங்கள இனவாத இராணுவம் எதை செய்ததோ, அதையே தமிழ் இனவாத போராட்டக் குழுக்கள் செய்தன. சிங்கள இனவாத நடத்தைகளை ஆதரித்த சிங்கள மக்கள் போல், தமிழ் மக்களும் தமிழ் இனவாதத்தை ஆதரித்தனர், ஆதரிக்கின்றனர். குறிப்பாக தமிழ் இனவாதம் நடத்திய அத்து மீறல்கள் தான், சிங்கள மக்களை சிங்கள இனவாதத்துக்குள் தள்ளிச் சென்ற பொறுப்பை ஏற்றுக் கொள்ளவேண்டும். இதை மூடி மறைக்க சிங்கள மக்களை குற்றம் சாட்டுவது கேவலமானது. இது அப்பாவி சிங்கள மக்களுக்கு செய்த அட்டூளியங்களை நியாயப்படுத்துவதாகும். சிங்கள மக்களை நட்பு சக்தியாக அணுகி, அவர்களின் ஆதாரவைப் பெற்று யார் போராடினர்! மாறாக, எதிரியாக காட்டி போராடி சிதைந்த வராலாற்றை மூடிமறைத்தபடி, அவர்கள் இனவாதத்துக்கு பலியாகிப் போனார்கள் என்பது அரைவேட்டுத்தனமாகும்.

"முழு உலகையும் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்ட வர முனையும் ஏகாதிபத்திய மற்றும் நவகொலனித்துவ சக்திகளுக்கும் தென்னாசியாவின் பிராந்திய வல்லரசான இந்திய அரசுக்கும் இடையில் நடைபெறும் பலப் பரீட்சை எமது அரசியலில் கலப்பதே புவிசார் அரசியல் சாராம்சமாகும். இவ் ஆதிக்க சக்திகளுக்கு இடையே குறிப்பான முரண்பாடுகள் நிலவினாலும், இப்பிராந்தியத்தில் புதிய தமிழீழ அரசு ஒன்று அமைந்துவிடக் கூடாது என்பதில் இத் தரப்புகளுக்கு பொதுநலன் இருப்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்."[1] முரண்பாடு எப்படி ஐக்கியமான முடிவை எடுக்கின்றது. அதென்ன குறிப்பான முரண்பாடு? ஏகாதிபத்தியமல்லாத நாடுகளுக்கும், ஏகாதிபத்தியத்துக்கும் இடையில் உலகமயமாதல் நிறுவும் போக்கில் முரண்பாடு இருப்பதில்லை. முரண்பாடு ஏகாதிபத்தியத்துக்கு இடையில் உலகை யார் அதிகம் சுரண்டுவதில் தங்கியுள்ளது. உலகமயமாதல் உருவாக்கத்தில் தடைகள் அனைத்தையும் கடப்பதில் உலகளாவிய ரீதியில் பொதுக் கருத்துண்டு. இலங்கை இரண்டு அரசாக உருவாகுவது, உலகமயமாதல் கட்டமைப்பில் அவசியமற்றது. உலகமே ஒரே அரசாகின்ற போது, தனிநாடுகள் அதற்குள் இடைஞ்சலான முள்ளுகள் தான். இதில் இந்தியா உள்ளிட்ட ஏகாதிபத்தியத்துக்கு பொதுக் கருத்துண்டு. இந்தியாவுக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் உலகமயமாதல் உருவாக்கத்தில் முரண்பாடு இருப்பதில்லை. எலும்புகள் அதிகம் கிடைக்கும் என்ற நப்பாசையில் குலைத்துப் பார்ப்பதற்கு அப்பால், நாயாக வாலாட்டுவதில் விசுவாசமாக இருப்பதிலும், இந்திய அரசு சாதனை புரிகின்றது.

அடுத்த அரசியல் விபசாரத்தைப் பார்ப்போம். "இன்று, அமெரிக்க ஐரோப்பிய ஏகாதிபத்திய முகாம்கள் மற்றும் ஜப்பானிய நவகொலனித்துவ முகாம்கள் உலகில் நிலவுகின்றன."[1] என்று ஏகாதிபத்திய அமைப்பையே திரித்து புரட்டுகின்றனர். ஏகாதிபத்தியம் பற்றிய மார்க்சிய வரையறை என்ன எனப் பார்ப்போம். "..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏகாதிபத்தியமானது 1.ஏகபோக முதலாளித்துவமாகும். 2.புல்லுருவித்தனமான, அல்லது அழுகத் தொடங்கிவிட்ட முதலாளித்துவமாகும். 3.அத்திமக்கால முதலாளித்துவமாகும்.... அதன் சாரப் பொருள்... 1.கார்ட்டல்கள், சிண்டிக்கேட்டுகள், டிரஸ்டுகள் - முதலாளிகளது இந்த ஏகபோகக் கூட்டுகள் தோற்றுவிக்கப்படும் அளவுக்கு பொருளுற்பத்தியின் ஒன்றுகுவிப்பு வளர்ந்துவிடுகிறது. 2.பெரிய வங்கிகளின் ஏகபோகநிலை.... 3.மூலப்பொருட்களுக்கான ஆதாரங்களை முதலாளித்துவ டிரஸ்டுகளும் நிதி ஆதிக்கக் கும்பலும் கைப்பற்றிக் கொண்டுவிடுகின்றன... 4.சர்வதேசக் கார்ட்டல்கள் உலகைத் தம்மிடையே கூறுபோட்டுப் பாகப் பிரிவினை செய்து கொள்வது ஆரம்பமாகிவிட்டது.... 5.உலகின் பிரதேசம் (காலனிகள்) பங்கிட்டுக் கொள்ளப்படுதல் நிறைவுற்றுவிட்டது.... ஏகாதிபத்தியத்தை இனம் கண்டு கொள்வதற்குரிய அடையாளமாய் இருப்பது தொழில்த்துறை மூலதனத்தின் ஆதிக்கம் அல்ல, நிதி மூலதனத்தின் ஆதிக்கமே ஆகும்."[2] என்றார் லெனின். இரண்டாம் அகில சந்தர்ப்பவாதிகள் முதலாம் உலக யுத்தத்தை ஆதரித்து ஏகாதிபத்தியத்தை திரித்துக் காட்டிய போது, ஏகாதிபத்தியத்தை வரையறுத்த லெனின் கோட்பாட்டில் ஏகாதிபத்திய கைக்கூலித்தனத்தை அம்பலம் செய்தார்.

தமிழீழ மக்கள் கட்சிக்காரர்கள் அமெரிக்காவையும், ஐரோப்பாவையும் ஏகாதிபத்திய முகாமாக காட்டியவர்கள், யப்பானை நவகாலனி முகாமாக காட்டுவது ஏன்? இதையே தமிழீழ புதிய ஜனநாயக கட்சியும் மீளக் கூறுவது ஏன்? நவகாலனியின் அரசியல் உள்ளடக்கம் என்ன? அமெரிக்கா, ஐரோப்பா நவகாலனிகளை வைத்திருக்கவில்லையா? யப்பான் ஏகாதிபத்தியமில்லையா. ஏன்? ஏகாதிபத்தியத்தை அலங்கோலப்படுத்திக் காட்டுவதன் மூலம் ஏகாதிபத்திய வரையறை மற்றும் எதிர்ப்பு போராட்டத்தை திசை திருப்பி சிதைப்பதாகும். இதில் தாம் தேசிய விடுதலைக்கு போராட முனைவதாக பிதற்றுகின்ற போதே, ஏகாதிபத்திய வரையறை பற்றி திசை விலகல் தேசியத்தின் உள்ளடக்கத்தை ஏகாதிபத்தியமயமாக்குவதாகும். ஏகாதிபத்திய உலகமயமாதலை பின்நவீனத்துவமாக காட்டி அதன் ஆதரவாளராக முற்போக்குகள் பிரகடனம் செய்த போது, ஏகாதிபத்தியத்தை மூடிமறைத்து சாயம் பூசுவது அவசியமாக இருந்தது. யப்பானை நவகாலனித்துவ அரசாக காட்டும் போது, யப்பான் எந்த நாடுகளின் நவகாலனியாக இருக்கின்றது. உலகில் இரண்டாவது மிகப் பெரிய வருமானத்தை சுரண்டிக் கொள்ளும் யப்பான், உலகின் தேசங் கடந்த உலகில் பல முன்னணி மூலதனத்தை கொண்டிருப்பதுடன், பாரிய நிதி வங்கிகளையும் கொண்டுள்ளது. (பார்க்க இதே சமரில் உள்ள கட்டுரை ஒன்றில்) இதன் பலத்தின் உலகில் பெருமளவு பன்நாட்டு மூலதனத்தையும், நிதிப் பலத்தையும் கொண்டு உலகை கைப்பற்றுவதில் அமெரிக்கா, ஐரோப்பாவுடன் போட்டி போடுகின்றது. இரண்டாம் உலக யுத்தம் முதல் உலகை பங்கிட, பலமுறை இந்த நூற்றாண்டில் யுத்தத்தில் ஈடுபட்டது. இந்த யப்பான் ஒரு ஏகாதிபத்தியமாக இருக்கின்றது. இது போன்று அவுஸ்திரேலியா போன்ற நாடுகளும் இந்த நிலையில் தான் காணப்படுகின்றது. இது போல் ருசியாவும் இருக்கின்றது. ஏகாதிபத்தியம் தான் நவகாலனிகளை, காலனிகளை, மறுகாலனிகளை, அரை காலனிகளை உருவாக்கின்றன.

இதை மறுத்த தமிழ் மக்கள் கட்சிக் காரர்கள் தமது சொந்த ஏகாதிபத்தியமயமாதலுக்காக "ஏகாதிபத்திய மற்றும் நவகொலனித்துவ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போட்டா போட்டிகளில் இருந்து எமது தேசிய நலன்களை பாதுகாக்கும் வகையில், அவற்றிற்கிடையேயான முரண்பாடுகளை எமது கட்சி பயன்படுத்தும். எமது தேசிய நலன்களுக்கு குந்தகம் ஏற்படாத வகையில், பிராந்திய, அரசியல், பொருளாதாரக் கூட்டமைப்புகளில் எமது தேசம் பங்குபற்றும்."[1] இப்படிச் சொன்னபடி இந்தியாவை பயன்படுத்தியவர்கள், அதன் கைக்கூலியானர்கள். இந்தியாவின் செல்லப்பிள்ளையாகி, இறுதியில் இலங்கையின் கூலிப்பட்டாளமாகிய அரசியல் வரலாற்றை, காலில் போட்டு மிதித்தபடி தான் இவர்கள் ஏகாதிபத்திய முரண்பாடுகளை பயன்படுத்தப் போகின்றார்களாம். மிகப் பெரிய நாடுகளை பயன்படுத்த முடியாத வகையில் உலகமயமாதல் உலகையே தனக்குள் பங்கிட்டபடி, பயன்பாட்டை ஏகாதிபத்தியமாக்கியுள்ளது. ஏகாதிபத்திய முரண்பாடுகள் உலகை யார் சுரண்டுவது என்பதே ஒழிய, தேசங்களின் முதலாளித்துவ அமைப்பை பாதுகாப்பதில் அல்ல. உலகை ஆள்வதில் ஒருமித்த உள்ளடக்கம், தேசியத்தின் நலனை நசுக்குவதில் முரண்பாட்டைக் காட்டுவதில்லை. இன்று உலகமயமாதலில் தேசங் கடந்த பன்நாட்டு நிறுவனங்கள், தேசம் சார்ந்த ஏகாதிபத்தியத்தின் நலன்களையும் மறுத்து வளர்ச்சி பெறுவதால், தேசியத்தை அழிப்பதில் ஈவிரக்கம் காட்டுவதில்லை. உலகமயமாதல் வீச்சு பெறும் வகையில் உலகின் அனைத்து அரசுகளும், அனைத்து வளங்களும் ஒரே வேகத்தில் ஈவிரக்கமின்றி ஒடுக்கியே வளர்ச்சி பெறுகின்றன. கியூபா, வடகொரியா போன்ற நாடுகளும் கூட, என்ன தான் முனகினாலும், உலகமயமாதல் எல்லைக்கு தாளம் போட்டே செல்லுகின்றன. இங்கு பயன்படுத்தல் விபச்சாரத்தக்கு தயாராவதை பிரகடனம் செய்வதாகும். இங்கு பயன்படுத்துவதல்ல, ஏகாதிபத்தியத்தை எதிர்த்து போராடும் ஒரே ஒரு மார்க்கம் மட்டுமே தேசியத்தை பாதுகாக்கும். இது மட்டும் தான் தேசியத்தின் சர்வவியல்பமான ஒரேயொரு உள்ளடக்கமாகும். இந்த உள்ளடக்கத்தை மறுத்த தேசியம் ஏகாதிபத்திய உலகமயமாதலின் ஒரு பாகம் மட்டுமேயாகும். தேசம் என்றால் என்ன என்ற வரையறையையே, விளக்கமுடியாதவர்கள் தான், தேசத்தின், தேசியத்தின் போராட்ட வீரர்களாக இருப்பது, இன்றைய இலங்கை அரசியல் நிலமையாகும். இதை அனுசரித்தே தேசிய விளக்கங்கள் முன்வைக்கப்படுகின்றன.

இதுபோன்று "பிராந்திய, அரசியல், பொருளாதாரக் கூட்டமைப்புகளில் எமது தேசம் பங்குபற்றும்"[1] என்கின்றனர். பிராந்தியம் அனைத்தும், உலகமயமாதலின் ஆதிக்க வடிவத்தின் வீச்சை விரிபடுத்துவதாக இருக்கின்ற போது, அதற்குள் எப்படி கூட்டமைப்புகள் உருவாக முடியும். உலகமயமாதல் பின்நோக்கி ஒருக்காலும் செல்ல முடியாத பொருளாதாரக் கட்டமைப்பைக் கொண்டவை. இதற்கு எதிராக ஒரு உலகளாவிய புரட்சியை பாட்டாளி வர்க்கம் நடத்துவதன் மூலமே, அதன் மீது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிறுவுவதன் மூலமே உலகமயமாதலை முறியடித்து மக்கள் ஆட்சியை நிறுவமுடியும். இதை மறுத்த கூட்டுக்கு ஏகாதிபத்தியத்துடன் செல்வது வெட்கக்கேடான அரசியல் விபச்சாரமாகும். உலகளாவிய கூட்டு என்பது பாட்டாளி வர்க்க அரசுகள், குழுக்கள், மற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்பை முன்னெடுக்கும், தேசிய முதலாளித்துவ பிரிவுகளுடன் மட்டுமே இருக்கமுடியும். ஒரு புரட்சியை வென்ற நாடு ஏகாதிபத்தியத்துக்கும், காலனிய நாடுகளுக்குமிடையே வேறுபட்ட உறவை கையாளும். ஆனால் இது இன்று உலகமயமாதலில் உலகம் ஒன்றாகின்ற போது, காலனிய அரசுவடிங்வகளின் குறைந்த பட்ச சுயேட்சையும் மறைந்து விடும் போது, உறவு ஏகாதிபத்தியத்துக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எதிரான நிலையில் தான் இருக்கும். உறவு என்பது மக்களைச் சார்ந்ததாகவே இது உலகளாவியலானதாக இருக்கும். இருக்கின்ற ஏகாதிபத்தியம் அல்லாத அரசுகள் பாசிசமாகவும், தேசிய இருப்பை அழித்துவரும் போக்கில், இவ்வரசுகள் ஏகாதிபத்தியத்தின் வெறும் மாநில, மாகாண வடிவங்களாக அதிகாரம் இழந்து, அடக்குமுறையை செய்யும் இராணுவப் பொம்மைகள் ஆகிவருகின்றன. இவர்களுடன் கூட்டுக் போக அழைப்பது ஏன்? இதற்குப் பின் உள்ள வர்க்க நலன்கள் மட்டுமே தான்.

இனி சொந்த நாட்டில் நட்பு எதிரி பற்றி வரையறுப்பதைப் பார்ப்போம். ''இக்குடியரசின் ஆட்சிக் குழுவமாக அடக்கப்பட்ட, சுரண்டப்பட்ட, விளிம்புநிலை மக்களும், ஜனநாயகப் பிரிவினரும் அமைவர்."[1] கேடுகெட்ட வகையில் மக்கள் தியாகத்தை விபச்சாரம் செய்வதாகும். இன்று தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் ஏதோ ஒரு வகையில், இதற்கு உட்பட்ட ஒரு பிரிவின் தலைமையாகவல்லவா இருக்கின்றார்கள். அப்படியாயின் இந்த புலிகளுடன், மற்றவர்களையும் இணைத்தால் எல்லாம் சரியாகி விடுமல்லவா! அதனால் தான் நீங்கள் களமிறங்கி புறப்பட்டுள்ளீர்களோ! ஒரு சமுதாயத்தில் ஏன் அடக்கப்பட்ட பிரிவுகள் வாழ்கின்றனர்? எப்படி உருவானார்கள் என்ற கேள்வியின்றி, அவர்களை அப்படியே ஆட்சியில் இணைப்பதாக பிரகடனம் செய்யும் அரசியல் உள்ளடக்கம், உண்மையில் இருக்கின்ற அமைப்புக்கு, சேதம் ஏற்படாத அரசியல் பாதையாகும். உதாரணமாக பார்ப்பனியத்தால் எதோ ஒரு விதத்தில் ஒடுக்கப்படும் வெள்ளான் வெள்ளானனாக இருப்பதால் ஆட்சியில் இணைக்கப்படுவான். ஆணாதிக்கத்தில் ஏகாதிபத்திய பெண்ணியத்தை கோரும் பெண் ஆட்சியல் இணைக்கப்படுவாள். பாட்டாளி வர்க்கம் சுரண்டும் வர்க்கத்தை நசுக்கி சர்வாதிகாரத்தை நிறுவுவதால், பாட்டாளியால் அடக்கப்பட்ட அவனையும் ஆட்சியில் இணைப்பார்கள். இவர்கள் சமுதாய ரீதியாக ஏதோ ஒருவிதத்தில் அடக்கப்பட்ட, சுரண்டப்பட்ட, விளிம்பு நிலைமக்களும், ஜனநாயகப் பிரிவினருமவர் அல்லவா! இதை வரையறுக்க முடியாத கோட்பாட்டு விளக்கம் கொண்டவை. சமுதாயத்தின் வேறுபட்ட அடக்குமுறைகள் இயற்கையானவையல்ல. மாறாக செயற்கையானவை. இது தனிச் சொத்துரிமை விளைவுகளாகும். சாதி கடந்த, இனம் கடந்த, மொழி கடந்த, மதம் கடந்த, பால் கடந்த நிறம் கடந்த சமூக ஒன்றிணைவு அனைத்தையும் விட முற்போக்கானது. இதைவிட மனித பிளவுகளை கடந்து செல்ல மாற்று வழி கிடையாது. இது மட்டுமே மனிதனை மனிதன் பேதம் காட்டுவதில்லை. இதையே பாட்டாளி வர்க்கம் முன்வைக்கின்றது. இங்கு வர்க்க வேறுபாட்டை வைப்பதன் மூலம், சுரண்டலை ஒழித்து அதிலும் பேதத்தை அகற்றுகின்றது. இதன் தலைமை மட்டும் தான், சமூக அவலங்களை இதன் போக்கில் ஒழித்துக் கட்டுகின்றது. இதை மறுத்த அனைத்து அணிதிரட்டல்களும், ஆட்சிகளின் பின்பும் இந்த வேறுபாடு உள்ளடக்கத்தில் கோரப்படுவதுடன், அதை மேலும் ஜனநாயகத்தின் பேரில் பிளவை விரிவாக்கி சுதந்திரமாக்கப்படுகின்றது. தமிழீழ மக்கள் கட்சிக்காரர்கள் மனித பேதம் கடந்து அணிதிரள்வதை மறுத்து, விளிம்பு மற்றும் அடக்கப்பட்ட ஜனநாயகத்தின் பின்பு பிளவை கட்டிக்காக்கின்றனர். இப்படி அடங்கி நசிந்து இருந்தவர்கள் இருந்த படி அணிதிரட்டி ஆட்சியில் ஏற்றுவதன் அரசியல் உள்ளடக்கம் இவை தான்.

இதன் தொடர்ச்சியில் இந்த அரசியல் உள்ளடக்கத்தை பாதுகாக்க ''இக்குடியரசை அமைக்கப் போராடிய தமிழ்த் தேசத்தின் சகல வர்க்கங்களும் தமது நலன்களை அடைந்து கொள்வது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசியல் யாப்பு ரீதியிலும் நடைமுறை ரீதியிலும் உத்தாவாதப்படுத்தப்படும்''[1] எப்படி? போராடும் சகல வர்க்கத்தின் நலன்களும் எப்படி உத்தரவாதம் செய்ய முடியும் பாட்டாளி வர்க்கம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் ஊடாக மற்றைய வர்க்க சுரண்டல் நலன்களை ஒடுக்க போராடுகின்ற போது, எப்படி இதன் நலனை அரசியல் யாப்பு உத்தரவாதம் செய்யும். உண்மையில் யாப்பு உத்தரவாதம் என்பது, பாட்டாளி வர்க்கத்தை சுரண்டவும், ஏகாதிபத்திய அமைப்பு அமைதியாக விழுங்கி ஏப்பவிடுவதை அமைதி வழியில் உத்தரவாதம் செய்வதே அரசியல் யாப்பின் உள்ளடக்கமாகும். அனைத்து வர்க்க நலன்களும் ஒன்றுக்கு ஒன்று முரண்பாடானவை மட்டும் இன்றி, சுரண்டியபடி இறுதியில் சுரண்டும் வர்க்கப் பிரிவை விட்டபடிதான் வர்க்கங்கள் இருக்கின்றன. அனைத்து வர்க்கங்களின் நலன்கள் உள்ளடக்கத்தில் சுரண்டும், சுரண்டப்படும் நலன்கள் தான். அதாவது இருக்கின்ற சுரண்டல் அமைப்பை அவர்களின் நலன்களுடன் உத்தரவாதம் செய்வதையே, தேசியத்தின் பின் தெளிவாக பிரகடனம் செய்கின்றனர்.

அடுத்து "தமிழீழ ஜனநாயக குடியரசின் அரசியல் யாப்பானது, ஜனநாயகம், சமூகநீதி, மனிதஉரிமைகள் என்பவற்றை அடிநாதமாகக் கொண்டிருக்கும்.''[1] இந்த அடிநாதம் எந்த வர்க்கம் சார்ந்து பிரகடனம் செய்யப்படுகின்றது. சகல வர்க்கத்தின் நலன்களையும், சமூகப் பிரிவினதும் நலனை உத்தரவாதம் செய்யும் ஜனநாயகம், சமூக நீதி, மனித உரிமை என்ன? அது எப்படி எல்லா வர்க்கத்தையும் திருத்திப் செய்யும். உண்மையில் சுரண்டும் இயல்பான நடைமுறை மட்டுமே, இவர்களின் ஜனநாயகம், சமூகநீதி, மனிதஉரிமைகளின் எல்லையாகின்றன. இவர்களின் ஜனநாயகம் பற்றி, உதாரணமாக மண்டேலாவின் துரோகத்துடன் கூடிய ஆட்சி மாற்றத்தை (ராஜினாமாவை) ஜனநாயகமாக காட்டியவர்கள் இவர்கள். ஜனநாயகம் பற்றி ஏகாதிபத்திய விளக்கத்தை கொண்டிருப்பவர்கள், அதே ஜனநாயகத்தையே எமக்கு பூச்சூட்டி அடிமையாக வைத்திருப்பர். இதில் எந்த சந்தேகமும் கிடையாது.

மேலும் "இனம், சாதி, பாலினம், பாலுறவுத் தேர்வு, வயது, மற்றும் பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால் அனைவரும் சமத்துவமாக நடாத்தப்படுவதும், இதுவரை காலமும் அடக்கப்பட்டு வந்துள்ள சமூகப் பிரிவுகள் தம்மைப் பலப்படுத்தும் விதத்தில் 'நேர்மறையான பாகுபாட்டை' ஏற்படுத்துவதும் அரசியல் யாப்பின் மூலமும் நடைமுறை ரீதியிலும் உறுதிப்படுத்தப்படும்.''[1] எப்படி?, எந்த வர்க்கப் போராட்டத்தின் ஊடாக இதை ஏற்படுத்த முடியும்? இங்கு சமத்துவமாக நடத்தப்படுவர்கள் என்கின்ற போதே, பிளவை பாதுகாத்து அதை சமத்துவப்படுத்துவதை குறிக்கோளாக்கின்றது. இடைவெளியை வர்க்கப் போராட்டத்தின் ஊடாக ஒழிக்க போராட பிரகடனம் செய்யவில்லை, பிளவை நிரந்தரமாக்கி அதை சமத்துவமாக்க சட்டம் போட வாக்குப் போடுகின்றனர். இதை சமப்படுத்த தம்மை பலப்படுத்தும் விதத்தில் 'நேர்மையான பாகுபாட்டை' உறுதி செய்ய பிளவை, சட்டம் மூலம் நிரந்தரமாக்க உறுதி கூறுகின்றனர். பாட்டாளி வர்க்கம் இவற்றை கடந்து அணிதிரட்டி இதை தனது வர்க்க சர்வாதிகாரத்தில் ஒழித்துக்கட்ட பிரகடனம் செய்யும் போது, இவர்கள் இதை சமப்படுத்தி நிரந்தரமாக்கி பிளவை உறுதி செய்ய வாக்களிக்கின்றனர். இந்த இடத்தில் வர்க்கங்களின் ஜனநாயகத்தை அங்கீகரிப்போம் என்று கூறுவது முரண்பாடாக இருப்பதில்லை. ஏனெனின் உள்ளடக்கத்தில் ஏகாதிபத்திய சுரண்டல் அமைப்பின் விளக்கம் சுத்தி வளைத்து இப்படித் தான் இருக்கும். ஏகாதிபத்திய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திட்டம் கூட உள்ளடக்கத்தில் இதை ஏற்றுக் கொள்கின்றது. முதலாளித்துவ நாடுகளில் இதையே பிரகடனம் செய்கின்றது. அந் நாட்டுச் சட்டங்கள். ஏகாதிபத்திய ஒழுக்கம், சட்டம், பண்பாடு இதைக் கோருவதுடன், இதையே நடைமுறைப்படுத்துகின்றது. இதை மறுக்க முடியாது. விதிவிலக்கு பொதுவாகி விடாது அல்லவா?

மேலும் இத் திட்டத்தில் "புரட்சியினதும், குடியரசினதும் நலன்களுக்கு விரோதமாகப் போகாத வரையில், சகல தேச பக்த வர்க்கங்கள் மற்றும் சமூகப் பிரிவுகளின் சமூக பொருளாதார அரசியல் உரிமைகள் அங்கீகரிக்கப்படும்."[1] நலன்கள் என்ன? தேச நலனுக்கு எதிராக போகும் ஒரே ஒரு அடிப்படை, ஏகாதிபத்திய கைக் கூலித் தனமாகும். அதை அடையாளப்படுத்தாது பொதுவாக விரோதம் பற்றி ஆருடம் கூறும் உள்ளடக்கம் என்ன? பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்காக போராடுவது தேச நலனுக்கானதா அல்லது விரோதமானதா? அதாவது மொழி கடந்து, இனம் கடந்து, சாதி கடந்து, பால் கடந்து... பாட்டாளி வர்க்கம் போராடி, அதை சமுதாய ரீதியாக ஒழித்துக்கட்ட பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவும் வர்க்கம் போராட்டத்தை முன்னெடுக்கும் போது, அது உங்கள் திட்டப் படி தேசவிரோதமானது. ஏனெனின் நீங்கள் இவைகளை சமப்படுத்தவே விரும்பும் போது, நாங்கள் இதை ஒழிக்க விரும்புகின்றோம். நீங்கள் எல்லா வர்க்கத்தின் ஆட்சியை நிறுவ விரும்பும் போது, நங்கள் அதன் மேல் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவ விரும்புகின்றோம். இது தேசவிரோதமாக உங்கள் உள்ளடக்கம் விளக்குகின்றது. இதைத் தான் கடந்த கால தேச விடுதலை இயக்கங்கள் செய்தன, செய்கின்றன. இதையே கட்சியின் பெயரில் நீங்கள் பிரகடனம் செய்வது மட்டுமே, உள்ளடக்கத்தில் இங்கு வேறுபாடாகும்.

அடுத்த ஏகாதிபத்திய கைக் கூலித்தனத்தைப் பார்ப்போம். "தமிழீழ ஜனநாயகக் குடியரசு மற்றும் தேசத்தின் நலன்களுக்கு ஆதரவான அரசு சார்பற்ற அமைப்புகள் தமிழீழத்தில் செயற்படுவதற்கு அங்கீகரிக்கப்படும்."[1] ஏகாதிபத்திய கைக்கூலி தரகு அமைப்புகளான தன்னார்வக் குழுக்களை அங்கீகரிக்கும் தேசியம், உள்ளடக்கத்தில் ஏகாதிபத்திய திட்டமாகும். அரசு சாராத அமைப்புகள் வானத்தில் இருந்து குதித்து எழுகின்றனவா! அவை எங்கிருந்து யாரால் உருவாக்கப்படுகின்றன. அரசு சாராத என்பதன் பின்னால், ஏகாதிபத்தியம் சார்ந்தல்லவா இயங்குகின்றது. ஏகாதிபத்திய அமைப்புகளின் நேரடி கட்டளையில் இயங்கும் தொண்டர் அமைப்புகளான அரசு சார்பற்ற அமைப்புகளின், நிதி மற்றும் உதவிகள் எதற்கு பயன்படுத்தப்படுகின்றது. ஏகாதிபத்திய உலக மயமாதலை வேகப்படுத்தவும், சமூக கொந்தளிப்பை மட்டுப்படுத்தவும் இவை துணைபுரிகின்றன. மனிதாபிமான செயல் தளங்கள் மூலம், மக்களின் மனதை அறியாமையில் நிலை நிறுத்துவதன் மூலம், தேசத்தின் தேசியத்தை கொள்ளையிட்டுச் செல்வதை பூச்சு இடுவதாகும். இந்த பணிகளின் எச்சில் எலும்புகளில் ஒட்டிக் கொள்ளும் அற்ப நாய்களின் துரோகத்தை, எதிர்த்து போராடி தடை செய்வதற்கு பதில், அங்கீகரிப்பதன் நோக்கம் துரோகத்தை கம்பளம் விரித்து வரவேற்பதாகும். இவை ஏகாதிபத்தியத்துக்கு விசுவாசமாக வாலாட்டும் நாய்களின் திட்டமாகும்.

அடுத்த கூறுகின்றார்கள் உளுத்துப் போன "உள்ளூராட்சி"[1] வடிவங்கள் உருவாக்கப்படும் என்கின்றனர். புரட்சியில் மக்கள் அதிகாரத்தை நிறுவுவதுக்கு பதிலாக, ஏகாதிபத்திய ஜனநாயக அமைப்புகளின் இழிந்து சிதைந்து போன உள்ளூராட்சி அமைப்புகளை மக்கள் அதிகாரத்துக்கு பதில் வைக்கின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாட்டாளி வர்க்கம் தனது தலைமையில் நிறுவும் மக்கள் அமைப்புகள், தொடர்சியான வர்க்கப் போராட்டத்தை நிபந்தனையாக்கின்றன. ஆனால் உள்ளூராட்சி மன்றங்கள் வர்க்கப் போராட்டத்தை ஒடுக்கும், அரசின் ஏவல் நாய்கள் ஆகின்றன. புலிகள் இது போன்ற அமைப்புகளை உருவாக்கியதுடன், அதைக் கொண்டே தனது ஜனநாயக விரோதத்தை கட்டமைத்தனர். இதையே மீள முன்வைப்பதன் மூலம், இன்னுமொரு புலியாக கூறாமல் களம் இறங்குகின்றனர். "முற்றிலும், சுதந்திரமாக இயங்கக் கூடிய நீதித்துறை உருவாக்கப்படும்."[1] எதில் இருந்து சதந்திரமாக நீதி? வர்க்கத்தை கடந்து சதந்திரமாக நீதி என்பது கற்பனையான மாயை அல்லவா? நீதி வர்க்க அடிப்படையைக் கொண்டதல்லவா? பாட்டாளி வர்க்க நீதி தெளிவாக வர்க்க அடிப்படையைக் கொண்டது. அது சுரண்டலை, ஆணாதிக்கத்தை, இனவாதத்தை, மதவாதத்தை, நிறவாதத்தை.. ஒழிப்பதில் தனது நீதியை நிலைநாட்டுகின்றது இங்கு அனைத்து வர்க்கத்தின் நீதியை திட்டவட்டமாக மறுக்கின்றது. ஜனநாயகம், நீதி, சுதந்திரம் போன்றன வர்க்க சமுதாயத்தில், ஒரு வர்க்கத்தின் கருவியாகவே எப்போதும் இருக்கின்றது. அனைத்துக்கும் சமத்துவமான நீதி என்பது, சுரண்டல் சமுதாயத்தின் பொது கண்ணோட்டமாகும். சமத்துவமாக எல்லா வர்க்கத்தையும் நடத்தவும், நீதி பெற்றுக் கொடுப்பது என்பது உள்ளடக்கத்தில் எதுவுமற்ற பிதற்றலாகும்.

அடுத்து புரட்சிகரமான சமுதாயத்தை படைக்கப் போவதாக பிதற்றும் இவர்கள், அதை எப்படி கைவிட பிரகடனம் செய்கின்றனர் எனப் பார்ப்போம். "மக்கள் அனைவரும் கூட்டங் கூடவும் கருத்தை வெளிப்படுத்தவும், புரட்சிகர நியதிகளின் அடிப்படையில் தம்மை ஆயுதபாணிகளாக்கவும் உரிமைகள் உடையவராக இருப்பர்."[1] என்று கூறும் இவர்கள், "போராடிய தமிழ்த் தேசத்தின் சகல வர்க்கங்களும் தமது நலன்களை அடைந்து கொள்வது அரசியல் யாப்பு ரீதியிலும் நடைமுறை ரீதியிலும் உத்தரவாதப்படுத்தப்படும்"[1] என்ற நிபந்தனைக்கு இது முரண்பாடல்லவா? ஆயுதபாணியாகும் உரிமை முதலாளித்துவ உள்ளடக்கத்திலும் புரையோடிப்போயுள்ளது. அனைத்து வர்க்கத்தின் நலன்கள் உறுதி செய்யும் போது, இங்கு அவற்றுக்கு எதிராக ஆயுதம் ஏந்தும் உரிமை "சகல தேசபக்த வர்க்கங்கள் மற்றும் சமூகப் பிரிவுகளின் சமூக, பொருளாதார அரசியல் உரிமையை அங்கீகரி"[1] க்கும் உள்ளடக்கத்துக்கு எதிரானது அல்லவா? ஆயுதம் எதை நோக்கி ஏந்த முடியும்? எந்த குறிக்கோளை நோக்கி? இதை ஆளும் எந்த அமைப்பு, எதன் அடிப்படையில் ஏற்றுக் கொள்கின்றது. இங்கு அரச அமைப்பில் இருக்கும் பிரிவே, ஆயுதம் எந்தும் உரிமையை அங்கீகரிப்பது விசித்திரமானது. ஆயுதம் எந்துவது சொந்த வர்க்க ஆட்சியை கைப்பற்றவல்லவா? அப்படியாயின் இந்த உரிமையை அங்கீகரித்து முன்வைத்த வேலைத்திட்ட புரட்சிகர அரசை அல்லவா, ஒடுக்க ஆயுதம் ஏந்தும் உரிமை வழங்கப்படுகின்றது. இந்த திட்டத்தை ஏற்றுக் கொண்டு அரசை உருவாக்கும் போது அதன் வர்க்கத் தன்மை என்ன? இந்த அரசை கைப்பற்ற ஆயுதம் ஏந்த முடியும் என்று ஏற்றுக் கொள்ளும் பிரிவின் வர்க்கத் தன்மை என்ன? சம்பந்தமில்லாமல் புலம்புவதும், கற்பனையான பிதற்றல்களும் கனவுகளாக வடிக்கப்படுகின்றன. வர்க்கமற்ற அரசு என்பது எப்படி கற்பனையானதோ, அதைவிட ஆயுதம் எந்தும் உரிமையை அங்கீகரிப்பது அதைவிட கேலிக்குரிய கற்பனையாகும். அதாவது பாட்டாளி வர்க்கப் புரட்சியை தேசிய புரட்சிக்குப் பின், அங்கீகரிக்கப்பட்ட ஆயுதப் புரட்சியூடாக நடத்த முடியும் என்று நம்பிக்கையூட்டி, பாட்டாளி வர்க்கத்தை ஏமாற்றும் மோசடிகள் தான் இவை. அது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வரை பாட்டாளி வர்க்க, வர்க்கப் புரட்சியை ஒத்திப் போடவும், அங்கீகரிக்கப்பட்ட மோசடி கனவுகளுடன் பொறுத்திருக்கக் கோருவதாகும். அதாவது தேசியப் புரட்சியை தரகு முதலாளிகளின் தலைமையில், சகல வர்க்க உள்ளடக்கத்துடன் மூட்டை கட்டி ஏமாற்றி ஏகாதிபத்திய காலடியில் இட்டுச் செல்லும் நனவை மட்டுமே இத் திட்டம் கொண்டுள்ளது.

அடுத்து "அரசு மதச் சார்பற்றதாக இருக்கும். அரசிலிருந்து மதமும், மத நிறுவனங்களிருந்து பாடசாலைகளும் விடுவிக்கப்படும். மதமானது முற்றிலும் ஒருவரது தனிப்பட்ட விடயமாகக் கருதப்படும். மனச்சாட்சி சுதந்திரம் பேணப்படும்."[1] ஏகாதிபத்திய நாடுகளின் பொதுவான மாதிரியை அப்படியே முன்வைக்கின்றனர். மனச்சாட்சி வனத்தில் இருந்து குதித்தா எழுகின்றது? மதம் தனிப்பட்ட கற்பனையான உருவமா? மத நிறுவனங்கள் வர்க்க கண்ணோட்டம் அற்றவையா? நீங்கள் நிறுவும் அரசடன் முரண்பாடு அற்றதா? மதத்துக்கும், அதன் கருத்து முதல்வாதத்துக்கும், அதன் வர்க்க தன்மைக்கும் எதிராக போராட மறுக்கும் இவர்கள், அதை கம்பளம் விரித்து அங்கீகரிக்கின்றனர். மனச்சாட்சி சுதந்திரம் உலகில் எதையும் சாதித்ததில்லை. மாறாக அதுவே மனித அவலத்தின் ஊற்று மூலமாக உள்ளது. மனச்சாட்சி சுதந்திரம் எந்த வர்க்கம் சார்ந்து வெளிப்படுகின்றது. மனித அவலங்கள் மீது மனச்சாட்சி புரட்சி செய்து விடவில்லை.

தனிப்பட்ட மனிதன் சொந்த வாழ்க்கையில் சந்திக்கும் அவலத்துக்கான காரணத்தை திசைதிருப்பி காட்டிய பாதையே மதமும், மதச் சுதந்திரமும். தனிப்பட்ட மனிதன் தனது சொந்த அவலத்தை சமுதாய போராட்டத்தின் ஊடாக தீர்க்க முயலும் பாதை தெரியாத வரை, அவன் வழிபாடு ஆறுதலைத் தருகின்றது. இதை சமுதாயப் புரட்சி தீர்க்கின்ற போது, கடவுளை விட்டு ஒழிக்கின்றான். அதுவரை வழிபாடு சொந்த மனித அவலத்தை சொல்லி புலம்ப, உணர்ச்சியை வெளிப்படுத்தாத உருவங்கள் முன்பு, தன்னையே திறந்து வெளிப்படுத்தும் ஊடகமாக கண்ணீரை விட்டு புலம்பி துயரத்தை போக்க முயலும் வடிவமாக வழிபாடு உள்ளது. இதை சமுதாயப் புரட்சியில் உள்ளவர்கள் மிக நிதானமாக உள்வாங்கியபடி தான், மதத்துக்கு எதிரான பிரச்சாரத்தை முன்னெடுக்கின்றனர். தனிப்பட்ட மனிதனின் விடுதலையை சமுதாயப் புரட்சியூடாக அடையும் போது மதத்துடன் உள்ள உறவும் முடிந்து விடுகின்றது. ஆனால் மத நிறுவனங்கள் இதிலிருந்து முற்றிலும் வேறுபட்டவை. அவை சமுதாயத்தின் ஒட்டுண்ணி அமைப்பாகும். அவலப்பட்ட மனிதனின் துயரத்தை பகிர்ந்து கொள்ளும் பண்ட மாற்றாக, அவன் உழைப்பை சுரண்டி வாழும் நாய்களிலும் கீழ்லானவர்கள். இவர்களின் ஒட்டுண்ணி வாழ்க்கையை எல்லாத் தளத்திலும் ஒழித்துக் கட்டுவதற்கு பதில், தமிழீழ மக்கள் கட்சி ஒட்டி உறவாடி அங்கீகரிப்பதன் உள்ளடக்கம் ஆதிக்க கண்ணோட்டம் கொண்டவையாகும். இந்து மதத்தை எடுத்தால், சாதியை ஒழிப்பதாயின் இந்து மதத்தையே ஒழிக்கவேண்டும். இதை மறுத்து அங்கீகரிக்கும் இவர்கள் எப்படி சாதியை ஒழிப்பர். இது போல் ஆணாதிக்கமும் என்று, பல துறை சார்ந்து கேள்வி எழுப்ப முடியும்.

அடுத்து "வங்கித்துறை, பொதுப்போக்குவரத்து, தொலைத்தொடர்பு, சுகாதாரம், கல்வி, சர்வதேசத் தொடர்பு போன்ற துறைகள் அரசின் கட்டுப்பாட்டில் இருப்பது உறுதிப்படுத்தப்படும். ஏனைய துறைகளில் தனியார் முதலீடு"[1] செய்ய அனுமதிக்கப்படும். இதை விட இலங்கை அரசு முன்னேற்றகரமான வகையில் இருக்கின்றது. ஏன் தனியார் முதலீட்டை அனுமதிக்க வேண்டும்? உற்பத்தி எப்படி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தனியார் மயமாக முடியும்.? தனியார் சொத்துரிமையை ஜனநாயகமாக கருதுகின்றீர்களா? தனியார் மயம் சுரண்டலை செய்கின்ற போது, எப்படி தொழிலாளார் வர்க்கத்தின் உரிமை பாதுகாக்கப்படும். பாட்டாளி வர்க்கம் சொந்த வர்க்க சர்வாதிகாரத்தை கோரும் போது, தனியார் மூலதனத்தை மறுக்கின்றது. அதை தேச சொத்துரிமையாக்கின்றது. தனியார் எப்படி மூலதனத்தின் தந்தையானார்கள். அதை ஒழிப்பதை எதிர்ப்பீர்களா?, ஏற்பீர்களா? தனியார் சொத்துரிமையில் அன்னிய முதலீடுகளை எப்படி பார்க்கின்றீர்கள்? இன்று உலகமயமாதல் தேசிய மூலதனத்தை சிதைத்து மூலதனத் திரட்சியை அற்றதாக்கி வருகின்றது. அப்படி இருக்கும் போது தேசிய முதலாளிகள் எங்கிருந்து மூலதனத்தை திரட்ட முடியும்! நீங்களாக பணம் கொடுப்பீர்களோ! ஏன் அதை நீங்கள் (அரசு) முதலிட முடியாது? சுரண்டும் வர்க்கத்துடன் என்ன வர்க்கப் பாசம்! கேடுகெட்ட ஏகாதிபத்திய தேசியவாதங்கள் நாட்டையே விற்றுவிடும் பொறுக்கித்தனமாகும்.

அடுத்து "பொருத்தமான நிலச்சீர்திருத்தம் மூலமாகவும் பாவனையில் இல்லாத நிலங்களை அரசு பொருத்தமான முறையில் மீள்பங்கீடு செய்வதன் மூலமாகவும், புதிய விவசாயக் குடியேற்றத் திட்டங்கள் மூலமாகவும் நிலமில்லாப் பிரச்சினைக்கான தீர்வு உறுதிப்படுத்தப்படும்"[1] நிலப்பிரபுத்துவ வர்க்கத்தை தேசிய சக்தியாக மதிப்பிடுவதும், அவர்களிடம் நிலத்தை பறிமுதல் செய்ய மறுப்பதும் தெளிவாக்கப்படுகின்றது. தேசிய புரட்சி என்பது என்ன? தேசிய முதலாளித்துவ புரட்சியை ஏற்படுத்துவதும், அதற்கு எதிரான சக்திகளை அழிப்பதுமாகும். தேசிய முதலாளித்துவ புரட்சிக்கு தடையான சக்திகள் இன்று நிலப்பிரபுத்துவம், தரகு முதலாளித்துவம், ஏகாதிபத்தியமாகும். இதற்கு எதிரான போராட்டத்தில் இதன் சொத்துகள் அனைத்தையும் நிபந்தனையின்றி பறிமுதல் செய்வதே தேசிய புரட்சியின் அரசியல் உள்ளடக்கமாகும். இதை மறுத்து நிலத்தை கண்டு பிடித்து பகிர்வது, நிலப்பிரபுத்துவ ஆதரவு கொண்ட ஏகாதிபத்திய தரகு ஆட்சியை நிறுவுவதாகும்.

இதை அவர்கள் "தேசத்தின் பொருளாதார சுதந்திரம், சுயசார்பு என்பவை பாதிக்கப்படாத விதத்தில் அந்நிய மூலதனம் குறிப்பிட்ட சில துறைகளில் அனுமதிக்கப்படும்"[1] சுதந்திரத்தையும், சுயசார்பையும் மீறாத அன்னிய முதலிடு உலகில் எதையும் காட்ட முடியுமா? உலகமயமாதல் குவிந்த மையமாகி, அதுவே மூலதனத்தில் போக்காக உள்ள நிலையில் இதைத் தாண்டி, முதலிடு எப்படி சாத்தியம். உலகமயமாதல் நோக்கத்தை கைவிட்ட முதலிடு என்பது, ஏமாற்ற முன் வைப்பவைதான். உலகமயமாதல் போக்கில் மூலதனம் புகுகின்ற போது, அது சுதந்திரத்தையும், சுயசார்பையும் கடைப்பிடிக்கும் என்று கூறுவது, காதுக்கு பூ வைப்பது ஒன்று தான். இதைப் போல்தான் தன்னார்வக் குழுக்கள் பற்றியும் பிதற்றினர். அன்னிய முதலீடுகளின் நோக்கம் உலகச் சந்தையை முழுமையாக கைப்பற்றுவதே. இந்த அரிவரிப் பாடம் தெரியாதவர்கள் வைக்கும் அரசியல், உள்ளடக்கத்தில் ஏகாதிபத்தியத்துக்கு தொழுது சேவை செய்வதாகும். இது சாதரணமான மூன்றாம் உலக நாடுகள் வரிசையில் தனது அரசியலை, நடத்தையை தெளிவாகவே பிரகடனம் செய்கின்றது. இங்கு சிங்களவன் ஆள்வதற்கு பதில் தமிழன் ஆள்வதை அடிப்படை நோக்கமாக மட்டும் கொள்கின்றது.

"தேசியம், ஜனநாயகம், சோசலிசம் ஆகியவை ஒன்றிலிருந்து மற்றொன்று பிரிக்க முடியாத அம்சங்களாகும்."[1] ஒன்றுக்கு ஒன்று முரண்பாடானவைகளை பிரிக்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முடியாதவைகளாக காட்டும் மோசடி, ஏகாதிபத்திய நாடுகளில் மெய்ப்பிக்கும் நடைமுறையாகும். ஜனநாயகம் உள்ள வரை சோசலிசம் சாத்தியமில்லை. ஜனநாயகம் என்பது ஒருவனுக்கு மறுப்பதில் அல்லவா உயிர் வாழ்கின்றது. தேசியம் சர்வதேசியத்தை மறுப்பதில் உயிர் வாழ்கின்றது. சோசலிசம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தில் உயிர் வாழ்கின்றது. இவை அனைத்தும் பிரிக்க முடியாத ஐக்கியத்தில் உயிர் வாழ்வதில்லை. இவை எதிர் எதிர் தளத்தில் உயிர் வாழ்கின்றன. ஜனநாயகம் நீடிக்கும் வரை பாட்டாளி வர்க்கத்துக்கு ஜனநாயகம் இருப்பதில்லை. தேசியம் இருக்கும் வரை சுரண்டப்படும் வர்க்கம் அடிமைப்பட்டே இருக்கின்றது. இங்கு சுரண்டப்பட்ட மக்களின் வர்க்க சர்வாதிகார சோசலிசம் இருப்பதில்லை. வர்க்கப் போராட்டம், சர்வதேசிய கண்ணோட்டத்தில் ஜனநாயகத்தை, சுரண்டும் வர்க்கம் மற்றும் அதன் அனைத்து சமூக மேல் கட்டுமானத்துக்கும் மறுத்தே உருவாக்கப்படுகின்றது. இது தான் தேசியத்தின் அரசியல் உள்ளடக்கமாகும்.

இந்த திட்டம் இது போன்ற பல்வேறு அரசியல் சோரத்தை கொண்டுள்ளது. இது போல் பலவிடயத்தை மௌனமாக பதிலளிக்காது, திட்டம் காதுக்கு பூவைத்தும் செல்லுகின்றனர். மீண்டும் வரலாற்றை ஏகாதிபத்திய நுகத்தடிக்குள் தியாகம் செய்ய அழைக்கின்றது. இதை இனம் கண்டு கொள்வது இன்றைய வரலாற்றுக் கடமையாக உள்ளது.

1.தமிழீழம் -4
2.திருத்தல்வாதம் எதிர்ப்போம், மார்க்சியம் காப்போம். - லெனின்
3.தமிழீழம் -14



புலம் பெயர்ந்த முற்போக்கு அரசியலற்ற வக்கிரத்தில் புரண்டு எழுகின்ற போது துரோகத்தனமும் அதனுடன் கூடிக் கூலாவுவது வரலாறு ஆகின்றது. இதன் விளைவால் 24.9.1999 அன்று பிரஞ்சு வெளிநாட்டுப் பிரிவு உயர் அரசியல் பொலிஸ் அதிகாரியால் உத்தியோகபூர்வ விசாரணைக்காக அழைக்கப்பட்டு, உத்தியோகபூர்வமற்ற இரண்டு மணிநேர விசாரணையை என் மீது நடத்தினர்.

இந்த விசாரனை பற்றிய அபிரயங்களை தொகுப்பதும் பகிரங்கமாக வைப்பதும் அவசியமாகின்றது. அவர்களின் விசாரணையின் நோக்கம் மற்றும் அதன் பிரதிபலிப்புகளை தெரிவித்தனர். உள்துறை அமைச்சால் இலங்கைத் தமிழர் மீதான விசாரணை ஒன்றை நடத்த கோரியதைத் தொடர்ந்து, இவ் விசாரணையைச் செய்வதாக கூறிய படியே விசாரணைகள் ஆரம்பமாகியது.

நண்பர்களுக்கு இடையில் பகிரங்கமாக 'சமரை' விநியோகம் செய்ய நாம் முன்பு சட்டப்படி பதிவு செய்த அமைப்பு தொடர்பான கேள்விகளில் இருந்து அதன் செயல்பாட்டை ஒட்டி எழுப்பப்பட்ட குறுக்கு விசாரணையின் பின் (இதற்க்காவே உத்தியோக பூர்வமாக அழைக்கப்பட்டேன்) இலங்கை மற்றும் சர்வதேச அரசியல் விவகாரங்கள் மீது தமது நிலைப்பாட்டை சுட்டிக் காட்டியதன் மூலம், மறைமுகமான நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தினர்.

எனது அல்லது எமது எழுத்து பிரஞ்சு அரசு பற்றியோ, இலங்கை அரசு பற்றியோ, முதலாளி பற்றியோ இருக்கக் கூடாது என்பதை தெளிவாக்கினர். இந்த போக்கில் எனக்கு எதிராக, புலம் பெயர் சமூகத்துக்கோ சொந்த மக்களைப் பற்றியோ எந்த அரசியலற்ற, குறிக்கோள் அற்ற, அரசியல் செயல்த் தளப் பிரிவின் சதியும், துரோகமும் அரங்கேறியது. எனக்கு எதிராக அரசியல் ரீதியில் முகம் கொடுக்க முடியாதவர்கள் தனிநபராகவோ அன்றி ஒரு சிலரோ திட்டமிட்டு பிரஞ்சு அரசுக்கு சில



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காட்டிக் கொடுப்பை செய்துள்ளனர் என்பதை விசாரனையின் போக்கில் ஊக்கிக்கமுடிகின்றது. அரசியலற்ற ஜனநாயகவாதிகள் எப்போதும் தமது குறிக்கோளை துரோகத்திலும், உளவுகளிலும் முடித்துக் கொள்வதே ஒரே வரலாறாக உலகு எங்கும் உள்ளது.

# முற்போக்கின் பின் ஒழித்து விளையாடும் காட்டிக் கொடுப்பை இனங் காண்போம்

இன்று இலங்கையின் மிக நெருக்கடியான அரசியலில் புலியினது ஜனநாயக மறுப்பினால் சிதறிப் போன ஜனநாயக வாதிகள் மார்க்சியம் மீதான கேவலமான தாக்குதல்கள் அவர்களை புலிக்கும், கம்யூனிஸ்டுக்ளுக்கும் எதிரான ஒரு அரசியல் மார்க்கத்தை தேர்ந்து எடுப்பதை தீவிரமாக்கியது. இது எப்போதும் மாற்றுப் பாதையின்றி, குறிக் கோள் இன்றி தொடங்கும் போது ஆளும் பிற்போக்கு வர்க்கத்துக்கு சேவை செய்ய தொடங்குகின்றது.

இன்று மேற்கில் இருந்து எம் தேசம் வரையிலான அரசுகளை விமர்சிப்பதையும், அதை எதிர்த்து போராடக் கோருவதையும் காட்டிக் கொடுக்கும் போக்கில் தான் என் மீதான விசாரணை நடந்துள்ளது. இது முடிவல்ல தொடரும் என்பதையும், இந்தக் காட்டிக் கொடுப்பு நீடிக்கும் என்பதும் வர்க்கப் போராட்ட நெருக்கடி உணர்த்துகின்றது.

போஸ்னி, கோசாவோ, தீமோர், பாலஸ்தீனம், தென் ஆபிரிக்கா என்று பல நீண்ட போராட்டங்கள் இன்று முடிவுக்கு வந்து ஜனநாயகம் விளங்குவதாகவும், ஏன் இலங்கையில் 200 வருட ஆங்கிலேய காலனியம் முடிவுக்கு வந்துள்ளதால் அமைதியான ஜனநாயகம் சாத்தியம் என்பதை அரசியல் பொலிஸ், ஏகாதிபத்திய உலகமயமாதல் வழியில் எனக்கு சுட்டிக் காட்டினர்.

இந்த நிலையில் வர்க்கப் போராட்டத்தை எதிர்க்கும் ஜனநாயக பிரிவு இதன் மேல் தான் தனது அரசியல் காட்டிக் கொடுப்பை செய்துள்ளது. ஏன் இதை புலிகள் காட்டிக் கொடுத்திருக்கலாம் என்ற வினாவை நீங்கள் சிலவேளை முன்தள்ள முயலலாம். நான் அதைத் திட்டவட்டமாக மறுக்கின்றேன். புலிகள் என் மீதான ஒரு நடவடிக்கையை எடுப்பின், அது ஒரு துப்பாக்கி குண்டு, நஞ்சு அல்லது விபத்து நாடகம் இது போன்றவை மட்டுமே என்பது வெள்ளிடைமலை.

பிரஞ்சு அரசியல் பொலிஸ் உயர் அதிகாரிகள் புலிகள் பற்றிய எமது நிலைப்பாட்டை கோரியதுடன், புலிகளால் ஏதாவது நேரடி அச்சுறுத்தல் இருந்தா என்ற கேள்வியை முன்வைத்தனர். நாம் இது வரை அப்படி நேரடி அச்சுறுத்தல் எதையும் பிரான்சில் சந்திக்கவில்லை என்பதை தெளிவுபடுத்தினோம். அதே நேரம் பிரான்சில் வாழும் தமிழ் சமூகம் ஏன் மற்றைய வெளிநாட்டு சமூகத்தை விட பிரஞ்சு சமூகத்துடன் ஒன்று இணையவில்லை? என்று கேட்டனர். இதற்கு புலிகள் காரணமா என்றனர். அதே நேரம் ஏன் புலிகள் அல்லாத சமூக அமைப்புகள் (கலாச்சார பண்பாட்டு சுயாதீனமான அமைப்புகள்) ஏன் தோன்றவில்லை என்றனர். இது போன்ற பல கேள்விகளை என்னை நோக்கி எழுப்பினர்.

இந்த இடத்தில் எனது நிலைப்பாட்டை தெளிவாக பகிரங்கமாக வைப்பது அவசியமாகின்றது. எமது சொந்த நாட்டு அரசியலில் புலிகள் மறுக்கும் ஜனநாயகம் பற்றிய எனது விமர்சனம் எப்போதும் பகிரங்கமாகவே உள்ளது. அதே நேரம் சொந்த தமிழ் மக்களின் தேசியக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கோரிக்கையை சுயநிர்ணயத்தின் வழிகளில் மட்டுமே தீர்க்க முடியும். தமிழ் மக்களின் கோரிக்கையை மறுக்கும் சிங்கள இனவெறி அரசின் அனைத்து எடுபிடிகளையும் நான் எதிர்க்கின்றேன். அதாவது புலிகளை மக்கள் அல்லாத எந்த அரசும், கூலிப்பட்டாளமும், ஏகாதிபத்திய மற்றும் அன்னிய இராணுவங்களும் அழிக்கும் ஆயின், அதை எதிர்த்து போராடுவதில் எப்போதும் முன் நிற்பது கடமையாக காண்கின்றோம்.

பிரஞ்சு அரசு புலிகளின் மக்கள் விரோத போக்குகளை தனக்கு சாதகமாக பயன்படுத்தி போராட்டத்தை நசுக்கும் எல்லாப் போக்கின் மீதும் நாம் எதிர்த்துப் போராடுவோம். புலிகளின் பல மக்கள் விரோதப் போக்கைப் பயன்படுத்தி இலங்கையில் அமைதியின் பெயரால் நடத்தும் எல்லா ஆக்கிரமிப்பு தலையீட்டையும் எதிர்த்து போராடுவோம்.

புலிகள் போராட்டத்தை ஜனநாயகப்படுத்தாத எல்லா நிலையிலும் புலிகளுக்கு எதிரான தலையீடுகளை அவர்களே கம்பளம் விரித்து வரவேற்பதாகவே இருக்கும். இது தமிழ் பேசும் மக்களின் நியாயமான விடுதலைப் போராட்டத்தை சிதைப்பதற்கு வழிவகுக்கும். ஏனெனின் சர்வதேச ஐக்கிய நாட்டுப்படை சரி அல்லது அன்னியப் படை சரி அரசைச் சார்ந்து நின்று தான் சிறுபான்மையினத்தை அணுகுவது தவிர்க்க முடியாத சுரண்டல் நலன்கள் எல்லைப்படுத்தும். போராட்டத்தை சொந்த மக்களை சார்ந்து ஜனநாயகப்படுத்துவதும், புலம் பெயர் நாடுகளில் அந் நாட்டுச் சட்டத்தை மதிப்பதும் அவசியமானதாகும். இதை புலிகள் கடைப் பிடிக்காத வரை இந்த அரசுகளை அவைகளைப் பயன்படுத்தி புலிகளையும், எமது தேசவிடுதலைப் போராட்டத்தையும் நசுக்கவும், நேரடி தலையீட்டையும் நடத்தி, தேசத்தின் தேசிய கோரிக்கைகளை அழிக்கும். இன்று ஏகாதிபத்தியங்கள் தேசங்களையும், தேசிய சொத்தையும் அழித்து அதை தனதாக்கும் கனவுக்கு அத்து மீறல்களை பயன்படுத்துவது எங்கும் காணமுடிகின்றது. தேசம், தேசிய சொத்துகளை உலகளவில் பொதுவில் ஏகாதிபத்தியம் அழித்து அதன் இடத்தில் தேசம் கடந்த தமது பன்நாட்டு நிறுவனங்களை உருவாக்குவது என்பது பொதுவான பண்பாக விதிவிலக்கின்றி உள்ள போது தமிழ் தேசியத்தை, உயிர் வாழ்வதை எந்த ஏகாதிபத்தியமும் அனுமதிக்காது என்பது வெள்ளிடைமலை.

எனவே சொந்த நாட்டில் போராட்டத்தை ஜனநாயப்படுத்துவதும், புலம் பெயர் நாட்டில் அந் நாட்டு சட்ட எல்லைக்குள் போராட்டத்தை நகர்த்துவது அவசியமும் அவசரமான கடமையாக இன்று எம்முன் உள்ளது. இந்த நிலையில் புலிகள் ஜனநாயகத்தை ஏற்க மறுத்து, இந்த நாட்டுச் சட்டத்தை மீறும் கட்டத்தில் அதை ஜனநாயக வாதிகள் எப்படி எதிர் கொள்வது என்பதை ஆராய்வது அவசியமாக உள்ளது. தனிப்பட்ட ஒரு மனிதன் அதுவும் அரசியலில் ஈடுபடுபவன் புலிகளினால் ஏற்படும் ஒரு நேரடிப் பாதிப்பை இந்த நாட்டுச் சட்ட எல்லைக்குள் பகிரங்கமாக நீதி கோரவேண்டும். அல்லாது இரகசியமான வழிகளில் இதை கொண்டு செல்வது என்பது சொந்த பாதிப்புக்கான நீதியை கோருவதற்குப் பதில் (இங்கு நீதி கிடைப்பதில்லை) இலங்கை அரசியலில் அன்னியனை நுழைப்பதில் துணை போகும். இது கண்டிப்பாக அரசியலில் ஈடுபடுவோரின் கட்டாயமான அரசியல் மார்க்கமாகும். சொந்த பாதிப்பு இல்லாத பொதுவான ஜனநாயக மீறல்களை எக் காரணம் கொண்டும் அரசியலில் ஈடுபடுவோர் ஏகாதிபத்திய அரசின் இரகசிய பிரிவுகளுக்கும், பகிரங்க பிரிவுகளுக்கும் கொண்டு செல்வது மக்களுக்கு எதிராக ஏகாதிபத்திய தலையீட்டை ஊக்குவிப்பதாகும். பொதுவான புலிகளின் ஜனநாயக மீறல்களை சொந்த மக்களுக்குள்ளும், உலகப் புரட்சிகர மக்களுக்குள்ளும் எடுத்துச் செல்வதே மாற்று அரசியல் பாதையாகும்.

இதை மறுத்து இன்று ஜனநாயகத்தின் பின் தனிப்படவோ அல்லது வேறு வழியிலோ செயல்படும் அரசியலற்றோர், குறிக்கோள் அற்றோர் முன் இருப்பது மாற்று அரசியல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாதையை தேர்ந்து எடுப்பது தான். இது பகிரங்கமாக மக்களைச் சார்ந்து இருப்பதே. அன்னிய சக்திகள், எமது எதிரிகளுடன் இரகசிய மற்றும் பகிரங்கமான அனைத்து செயலும் மக்களை மேலும் ஆழ துன்பச் சேற்றுக்குள் இட்டுச் செல்வதாகவே இருக்கும். எனது கருத்தை கருத்தால் எதிர் கொள்ள முயலுங்கள். மாறாக சதியால், மோசடியால் எதிர் கொள்வது மக்கள் விரோத ஜனநாயக விரோத அரசியலாகும். எதை ஜனநாயகத்தின் பின் புலிகளிடம் இருந்து கோரினீர்களோ அதையே மற்றவனுக்கு மறுக்கும் மக்கள் விரோத அரசியலை கைவிட்டு வெளிவாருங்கள். அதே நேரம் அரசியலற்ற, முற்போக்கின் பின் அரங்கேறும் அனைத்து மக்கள் விரோதப் போக்கை அம்பலப்படுத்துங்கள். இல்லாத வரை இந்த மாதிரியான மக்கள் விரோதத்துக்கு சாமரை வீசுவதே எஞ்சி அதற்குள் ஒட்டு மொத்தமாக சீரழிவதே எஞ்சும்.

புலிகளுக்கு எதிராக சரி, கம்யூனிஸ்டுகளுக்கு எதிராக சரி சதிப்பணியிலான எந்த நடவடிக்கையையும் இனம் காணவேண்டியது அவசியமாகும். மக்களிடம் பேசாத, மக்களைச் சார்ந்திருக்காத இரகசிய மற்றும் பகிரங்கச் செயல்பாடுகள் மக்கள் விரோதமானவை. இவற்றை இனம் கண்டு அம்பலப்படுத்துவது ஒவ்வொரு ஜனநாயகவாதியின் ஜனநாயகக் கடமையாகும். இதை மறுத்த ஜனநாயகம் என்பது போலித்தனமானதும் கேவலமானதுமாகும்.

பி.இரயாகரன்
28.9.1999

---

# நீட்சே பாசிசத்தின் சித்தாந்தவியலாளன்

"நான் மனிதன் அல்ல நான் வெடிகுண்டு." "ICH BIN KEIN MENSCH ICH BIN DYNAMIT" இது நீட்சேயின் வாக்குமூலம். சமூக உணர்வோடு ஒட்டாத சாகசத்தன்மை வாய்ந்த அன்னியப்பட்டு நிற்கும் தனிமனித வாதத்தின் குரல். தனிமனிதனை மையமாய் கொண்ட சிந்தனைகட்கும், அவன் சார்ந்த வர்க்கக் கோட்பாடுகட்கும் இது சாட்சியம். சமூகத்துக்கும் தனிமனிதருக்குமான மனித அகத்துக்கும் புறத்துக்குமான உறவுகளை விளக்காத சுயம் சார்ந்த பரபரப்பூட்டும் தான் கவனிக்கப்படுவதில் நாட்டமுள்ள தன்னைமட்டுமே முன்னிலைப்படுத்தும் மையப்படுத்தும் சிந்தனைப் போக்கே இது. "என்னைச் சொல்ல வார்த்தைகள் வேண்டும். பலவீனத்தின் எல்லா வடிவங்களும் தன்னில் ஒலிப்பதாய்" நீட்சே மறுபுறம் முறையிட்டான். எங்கும் எதிலும் நிறைவுறாத கட்டுப்பாடற்ற சுதந்திரம் பற்றிய கனவுகள் எதிர்காலம் மீது நம்பிக்கையின்மை மனிதவாழ்வுமீதான அவநம்பிக்கை மனிதர்களின் பொதுவான நலன்கள் இலட்சியங்கள் இவைகளை தனிமனித நிராகரித்த அகஅம்சங்கட்டு முதன்மையளிக்கும் போக்கு நீட்சேயிடம் ஆளுமை செலுத்தியது. அவனது சொந்த குட்டிமுதலாளியப் பின்புலங்கள் சமூகத்தில் முதன்மைப் பாத்திரம் வகிக்க முடியவில்லை என்ற மனோவியலுடன் இனைந்த பொறுமையற்ற போக்குகளை, நாம் விசாரிக்க வேண்டும். அவனது கிறிஸ்தவ சமயம் சார்ந்த குழந்தைப்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பருவ சமயக் கட்டொழுங்குகள் நசுக்கப்பட்ட பாலியல் உணர்வுகள், நண்பர்களற்ற தனிமை என்பன அவனது பிற்கால எழுத்துக்களில் விரக்தி, மற்றும், தோல்விமனவாதப் புலம்பலாயும் நடப்பில் காணக்கிட்டாத மாமனிதனைப் படைக்கும் அதீதத்துக்கும் துரத்திவிட்டது. பல்வகை முரண்பாடுகளின் தொகுதியாகியது.

1870 இல் ஜெர்மனிய ஐக்கியம் சாதிக்கப்பட்டு ஜெர்மனியின் பல்வேறுபிரிவு மக்களின் வித்தியாசமான குறுகிய அடையாளங்கள் என்பன அழிந்து பரந்தகன்ற தேசியம் கட்டியமைக்கப்பட்டது. இது விரைவான தொழில்வளர்ச்சிக்கும் பெரும் மூலதனத்திரட்சியையும் நோக்கி வேகமாய் இட்டுச் சென்றது. ஜெர்மனியானது பிரான்ஸ், பிரிட்டனுக்கும் போட்டியாக கொலனிகளை கொள்ளையிடும் போக்கில் வளர்ந்தது. சமூக ரீதியாக ஜெர்மனியுள் விவசாய சமூக மதிப்பீடுகள் அழிக்கப்பட்டு குடும்பஅமைப்புகளின், சொந்தம், அன்பு, உறவுகள் தகரத்தொடங்கின. பொருள் வழிபாடும், பணவழிபாடும் மூர்க்கமாய் எழுந்தன. இக்காலகட்டத்திலேயே நீட்சே வாழ்ந்தான். தொழில் வளர்ச்சிப் பெருக்கம் நகரங்களில் மக்கள் தொகையைப் பெருக்கியது, பல்வேறு பிரதேச அடையாளங்களை உடைய மக்கள் தொழிலாளர்களாக நகரங்களில் குடியேறி பொதுவான சமூக மற்றும் வர்க்க அடையாளங்களைப் பெறுவது விரைவுபட்டது. புதிய முதலாளியக் கலாச்சாரம் மக்களின் பழைய கலாச்சாரத்தின் பெரும் பகுதியை வழிவிடக்கோரியது. மறுபுறம் பழமையின் பெருமைகளையும் புதிய விஞ்ஞான அறிவியலின் வளர்ச்சியையும் உள்வாங்கிக் கொண்ட தேசியவெறி மற்றும் பாசிச அடிப்படைகளும் கருக் கொள்ளத் தொடங்கின. இங்கு நீட்சே சார்ந்திருந்த குட்டிமுதலாளிய வர்க்கம், பெருவீத உற்பத்தி முன்பு தன் முன்னேற்றமற்ற சறுவீத உற்பத்தியை காக்க அதன்

*மக்களின் விடுதலைக்கு போராடும் மார்க்சியத்துக்கு எதிராக ஏகாதிபத்திய கோட்பாடளர்கள் பின்நவீனத்துவத்தை முன்வைக்கின்றனர். ஏகாதிபத்திய விரிவாக்கத்தை இலகுபடுத்த அதற்கு எதிரான மார்க்சியத்தை செயலற்றதாக்க, முன்வைக்கப்படுவதே பின்நவீனத்துவம். அதன் தத்துவார்த்த உள்ளடக்கத்தை பின்நவீனத்துவ கோட்பாடுகள் மீதான எனது தனியான நூல் ஒன்றின் மூலம், மிக விரைவில் அதை கழுவேற்றுவது அரங்கேறும். "அம்மா 10, எக்சில் 6, ஆறாம் திணை"யில் அ.மாக்ஸ் நீட்சே பற்றி எழுதியவற்றில் இருந்து தமழரசன் இக் கட்டுரையை எழுதியுள்ளார். அ.மார்க்ஸ்சின் "பின்நவீனத்துவம் இலக்கியம் அரசியல்" என்ற கோட்பாட்டு நூலில் நீட்சே பற்றியும், லெனின் "புரட்சிகர நிகிலிஸ்டுகள்" என்று குறிப்பிடுவதாக குறிப்பிடம் பகுதிகளை எனது நூல் ஊடாக விரைவில் பாப்போம். அதற்கு முன்பு பின்நவீனத்துவ கோட்பாட்டளர்கள் எப்படி கடந்த கால பாசிசத்தின் தூண்களாக இருந்தனர் என்பதை இக் கட்டுரை அம்பலம் செய்கின்றது. யூத எதிர்ப்புடன் கம்யூனிச எதிர்ப்பை ஒருங்கிணைத்த வகையில், பாசிசத்தை கட்டமைத்த பின்நவீனத்துவ தத்துவவியலாளர்களின் ஜனநாயக முகமூடியை இக் கட்டுரை நிர்வாணப்படுத்துகின்றது. இன்று மீண்டும் ஜனநாயக அரசின் மறைமுகமான ஆதாவுடன் செழிப்புற்று வளர்ச்சி பெற்று வரும் பாசிசம், தனது தத்துவார்த்தை பின்நவீனத்துவ தத்துவ வழிகாட்டலில் இருந்து பெறுவதை, இக்கட்டுரை தெளிவாக படம்பிடித்து காட்டுகின்றது. அந்தவகையில் பாசிசத்தையும், பின்நவீனத்துவத்தையும் ஒருசேர புரிந்து கொள்ள இக்கட்டுரை உங்களுக்கு உதவிசெய்கின்றது. மனுவிடம் இருந்து நீட்சே ஆரிய மேன்மையை பெற்றது*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அழிவைத்தடுக்க மரணப் போராட்டம் நடாத்திக் கொண்டு இருந்தது. குட்டிமுதலாளிய வார்க்கம் தப்பிப் பிழைக்க நடத்திய போராட்டத்தின் விளைவுகளை இலக்கிய மட்டத்தில் பிரதிபலிக்கும் வேலையை நீட்சே செய்யமுனைந்தான். அதற்காக உதிரிவர்க்க சிந்தனையாளர்களை தம் வர்க்கத்தின் பக்கமாய் அணிகட்டும் பிரயத்தனமே அவன் எழுத்து, எனினும் தவிர்க்க முடியமால் சுயமுரண்பாடுகள் குழப்பங்களின் குவியலாயும், சுய அழுகையாயும் வெளிப்படுகின்றது. நீட்சேயின் எழுத்துக்கள் உயர் தத்துவமட்டமற்ற இரண்டாம் தரச் சிந்தனையாளர்களிடம் கைடேக்கர் முதல் கிட்லர் வரையும் மற்றும் லக்கான், காமு போன்றவர்களிடமும் ஒட்டிக் கொண்டது. தன் உதிரி வர்க்க ஒடுகாலிச் சிந்தனைக் கேற்ப அடையாளங்களை தேடிக் கொண்டது.

நீட்சே என்ற மனிதனைக் கட்டமைத்த தேர்தெடுத்த சமூகச்சூழலும் வர்க்க விருப்பங்களும் கவத்துக்குரியது. அவன் பகுத்தறிவையும் அறிவொளிக்காலச் சிந்தனையையும் எதிர்த்துக் கொண்டே அதன் பல பிரிவுகளை தன்னுள்ளே உள்வாங்கிக் கொண்டான். அன்றைய ஜெர்மனியின் விரைவான இயந்திரமயமாக்கலையும் உற்பத்தியில் இருந்தும் சமூக உறவுகளிருந்தும், அன்னியமாக்கப்பட்ட மனிதர்களின் சமூக நிலைகளையும் கண்டு அஞ்சி அவை எழுப்பிய கேள்விகளை எதிர்கொள்ள முடியமால் ஆதியான இயற்கையான ஜெர்மனிய பொற்காலத்துக்குத் தப்பியோட முயன்றான். நீட்சே பிரான்சின் தத்துவவியலானன் ஆனருசோவின் "மனிதாகளின் இழந்து போய்விட்ட தொன்மையான இயற்கைவாழ்வு" புருத்தோனின் (JOSEPH PROUDHON) "zurück zur natur" "இயற்கைக்கு திரும்புதல்" என்னும் கோசம் ஜெர்மனிய மக்ஸ் ஸ்ரேனரின் (MAX STIRNER) தன்னிச்சை வாதப் போக்குகள், டார்வினின் "வலியது தப்பிப் பிழைக்கும்" என்ற கோட்பாடு இவைகளின் கலவையாகவும் நீட்சே விளங்கினான். அகவயமான தனிமனித மன உழைச்சலுக்கு ஆட்பட்ட அதீத சிந்தனைகளிலும் வரலாற்று வளர்ச்சிகளை மறுத்த போக்கிலும் இவைகள் வெளிப்பட்டன. முதலாளிய அமைப்பின் முரண்களை நோய்க்கூறுகளை தம் வர்க்க நிலைக்கேற்ப வெளியிட்டதோடு தீர்வாக பாசிசத்துக்கு அடிப்படையான ஜெர்மனிய பொற்காலத்துக்கு வழிகாட்டும் கருத்துகளை கட்டமைத்தான்.

*போன்ற தரவுகளை ஒப்பிட்டு தன்மையிலும், நீட்சேயின் தத்துவார்த்த கோட்பாட்டு அடிப்படைகள மீது, இக் கட்டுரை* முழுமையான விமர்சனத் தரவுகளை தரத்தவறிவிட்டது. டார்வின் விளக்கிய, வலிமை உள்ளவை உயிர் வாழும் உலகில் நீடிக்கும் என்பதை, நீட்சே பயன்படுத்தினர் என்பதன் ஊடாக, அக் கோட்பாட்டின் சரியான விளக்கம் நிராகரிக்கப்படுகின்றது. டார்வின் கோட்பாட்டை ஒரு உயிரிணத்துக்குள் திரித்து புகுத்தியதையே நீட்சே போன்ற நாசிகள் செய்தனர். அத்துடன் வலிமை என்பதை சுரண்டி வாழும் பொருளாதார ஆதிக்க இழி தன்மைக்குள் விரிவாக்கியே இது திரிக்கப்படுகின்றது. ஏகாதிபத்திய நாடுகளில் சீர்திருத்தம் என்பது கோட்பாட்டில் ஏகாதிபத்தியமயமாதலுக்குள்ளேயே குறிக்கின்ற போது, அதை கட்டுரை சுட்டிக் காட்ட மாறுக்கின்றது. ஜனநாயக புரட்சி நடைபெறதா நாடுகளில் சீர்திருத்தம் முதலாளித்துவத்தை நோக்கியிருக்கும் வாய்ப்பு போன்றவற்றை, ஏகாதிபத்திய நாட்டுக்கு பொருத்தி குட்டிபூர்சுவா வர்க்க விளைவுகளாக காட்டுவது தவறானது. இது போன்றவற்றை பொதுமைப் படுத்துவதில் கட்டுரை தவறு இழைத்த போதும், பின்நவீனத்துவ நாசிசத்தை இது அம்பலம் செய்கின்றது.

சமர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நீட்சே மக்ஸ் ஸ்ரேனரின் சிந்தனைகளால் பெரிதும் பாதிக்கப்பட்டு இருந்தான். "நான்", "எனதுசுயம்" என்பது போன்ற தனிமனிதவாதக் கருத்துக்களை இவர் உருவாக்கினார். தன்னலமே முதன்மையானது, தனிமனிதர்களது சுயமே பிரதானமானது, கட்சிகள், அமைப்புகள், அரசுகள் தனிமனிதர்களது சுயத்தை ஆர்வங்களை அரித்து அழித்துவிடும், அடையாளமற்றதாக்கிவிடும் எனவே இவைகளை நிராகரிக்க வேண்டும் என்றார். மக்ஸ் ஸ்ரேனரை வாசித்தவர்கட்கு நீட்சேயின் சிந்தனைகள் வியப்பூட்டமாட்டா. புருத்தோனியம் மற்றும் மக்ஸ் ஸ்ரேனரின் கருத்துகளின் திரட்டலாய் பக்கூனியச் சிந்தனை பிற்காலத்தில் எழுந்தது. இக் கருத்துக்களின் ஆக்கிரப்புக்குட்பட்டதோடு நீட்சே மறுபுறம் ஜெர்மனியப் பாசிச மூலங்கட்கு அடிப்படையான ஜெர்மனிய தேசியவாத தொல்பெருமைகட்டும் ஆட்பட்டு இருந்ததை கவனிக்கமுடியும். நீட்சேயின் ஆக்கத்தில் பெரும் பாதிப்பு எற்படுத்திய ரிச்சர்ட் வாக்னர் (1813-1883) உடன் 30 வயதிலேயே நீட்சே தொடர்பு கொண்டு இருந்தான். றிச்சர்ட் வாக்னர் இசையுடன் மட்டும் நின்றவரல்ல. 1870 முன்பான மற்றும் பின்பான ஜெர்மனிய தேசிய வாதத்தை பலமூட்டி வளர்த்தெடுத்ததிலும் பெரும் பங்குடையவர். "ஜெர்மானியம்" அமைப்பை நிறுவியவர். பழைய புரதான ஜெர்மானிய வாழ்வின் மீது வரலாற்றுக்கு அப்பாலான கருத்தியல் பெருமைகள் சுமத்தப்பட்டன.இந்தப் பெருமையின் மீதான ஆரவாரங்களில் யூத மற்றும் சிந்தி, ரோமா மக்கள் மேலான அடக்கு முறைகள் இழிவுகள் மறைக்கப்பட்டன. ரிட்சர்ட் வாக்கனர் வெளிப்டையாகவே யூதவிரோதம் கொண்டவர். "யூதர்கள் எம்மொழியைப் பேசுகின்றனர். ஆனால் எம்மவர்களாக இல்லை. யூதர்களின் பணபலத்தை பறித்து விட்டால் அவர்கள் அதிகாரம் இழந்துவிடுவர்." என்றார்.அவர் பெரும் நிதி மூலதனத்தைக் கொண்டிருந்த ஜெர்மனிய உயர் வர்க்கங்களின் பணத்தைப் பறிப்பது பற்றிப் பேசியது இல்லை. இவரையும் ஜெர்மனியப் பெருமை தாங்கிகளையும் நீட்சே "ஜெர்மனிய வீரர்கள்" என்று பாராட்டினான். 1870 இல் ஜெர்மனி பிரான்சுடன் நடத்திய யுத்தத்திலும் நீட்சே கலந்துகொண்டு தன் பிஸ்மார்க் அரசுக்கு ஆதரவாய் போராடினான்.

ஜெர்மனியில் கிறிஸ்தவர்கள், யூதர்களை கிறிஸ்துவைக் கொன்றவர்களாக, சர்வதேச யூதர்களாக பழித்தனர். இதே சமயம் தொழிலாளர்கள் மற்றும் ஏழைகள் "உருளைக்கிழங்கு தின்னிகள்" என்று பழிக்கப்பட்டனர். ஜெர்மனிய ஐக்கியத்துக்கு பின்பான (1870) காலகட்டத்தில் கிறிஸ்தவத்தை நிராகரித்த ஜெர்மனிய கலாச்சாரத்தை பழைய ஜெர்மனிய இயற்கை வாழ்வு தொன்மைக் கடவுளர் இவைகளுடன் இணைத்து அடையாளம் காட்டும் தேசியவாதம் வளர்க்கப்பட்டு வந்தது. இது தொழிலாளர்களையும் அவர்களின் இயக்கங்களையும் மட்டுமல்ல யூதர்களையும் எதிர்க்கும் கூறுபோடும் போக்கில் உசுப்பிவிடப்பட்டு இருந்தன. தொழிலாளர் இயக்கங்களில் யூதர்கள் அதிகமாய் இருந்ததோடு தலைமைப் பாத்திரத்தையும் எற்று இருந்தபடியால் சோசலிசம் யூதர்களின் "உலகச் சதி" என்ற ஜெர்மனிய ஏகாதிபத்திய பிரச்சாரம் தீவிரமாய் செயற்பட்டது. ஆரியர், ஜெர்மனிய இரத்தம், பெருமை மிகுந்த இனம், பெருமை கொண்ட ஆரிய இனம், டொச்ச ஜெர்மனியக் கலாச்சாரம் என்ற சிந்தனைகள், வீரியமாய் பேசப்பட்டன. இவை கிறிஸ்தவ மற்றும் அன்னிய இனங்களின் கலாச்சாரத்தால் பாதிக்கப்படாத ஆதி ஜெர்மனிய வாழ்வு அதன் பெருமையுடன் இணைத்துப் பேசப்பட்டன.

1894 இல் DIE DEUTSCHERASSISTISCHEN WAGNER GOBINEAU என்ற அமைப்பு ரிச்சர்ட் வாக்கரின் மருமகனானசம்பர்லைன் ஆல் தொடங்கப்பட்டது. இது ரிட்சர்ட் வாக்கன்னரின் ஜெர்மனியப் பெருமைக் கருத்தியல்களைப் பிரச்சாரம் செய்தது. ஜெர்மனிய மன்னனான கெய்சல் வில்கெம் -1 ஜெர்மனிய பழைய இனக் குழுத்தலைவனான "கெர்மான்" பெயரில் "கெர்மான் நினைவிடம்" அமைத்ததோடு, "கெருஸ்கார்" இனக் குழுத்தலைவான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆர்மினியுஸ் போன்றோரும் நினைவுகூரப்பட்டனர். ஜெர்மனிய பழம் யுத்தக் கடவுளான "ஓடின்" மின்னற் கடவுளான "தோர்", சூரியக் கடவுளான "பிறைர்", பெண் காதற் கடவுளான "பிறையா", நீதிக் கடவுளான "போர்செர்ரி", இறப்புக்கான பெண் கடவுளான "கெல்", குளிர்காலத்துக்கான கடவுள் ஆன "கேடர்"பொன்னிறக் கூந்தலையுடைய பெண் கடவுள் "சிவ்" போன்றவை மறு கண்டுபிடிப்புச் செய்யபட்டு கிறிஸ்தவத்தை விலத்திய நாத்திகவாதம் கலந்த பல போக்குகள் எழுந்தன. எனினும் வர்க்கப் போராட்டம் கூர்மையடைய ஜெர்மனியப் பாசிசம் தோன்ற ஏதுவான இரண்டு போக்குகள் அதாவது பழைய ஜெர்மனியம் இயற்கை வாழ்வு இவைகளை அடிப்படையாய் கொண்ட போக்கும், ஜெர்மனிய கிறிஸ்தவப் பாரம் பரியத்துடன் இயங்கிய மறுபோக்கும் ஒன்றுடன் ஒன்று இனைந்து முரண்பட்டும் இயங்கிவந்தன. இவைகள் இரண்டு போக்கும் கொம்யூனிசம், யூதர்கள் இரண்டையும் எதிர்க்கும் அழிக்கும் போக்கில் ஐக்கியப்பட்ட நிலையைக் கொண்டு இருந்தன. இவை யூத எதிர்பின் பழைய மூர்க்கத்தை அழியாமல் பாதுகாக்க கடுமையாய் முயன்றன.

1878 இல் "கிறிஸ்தவ சமூக தொழிலாளர் கட்சி" புரட்டஸ்தாந்து மதகுருவான அடோல்வ் ஸ்டோக்கர் தலைமையில் தொடங்கப்பட்டு ஜெர்மன் தொழிலாளர்களிடையே யூத எதிர்ப்புப் பிரச்சாரம் செய்து, யூத அரசு உறுப்பினர்களை நீக்க வேண்டும் என்றும் அது யூத ஆக்கிரமிப்புக்கு வழிவகுப்பதாய் குற்றம்சாட்டியது. 1881 இல் பலநூறு ஆயிரம் கையெழுத்துக்கள் யூதர் அல்லாத ஆசிரியர்கள், மாணவர்கள், அரசு உத்தியோகத்தர்கள், அரசியல் வாதிகள் மற்றும் ஜெர்மனிய தேசியவெறியர்களிடம் சேர்க்கப்பட்டு அரசு மற்றும் பொதுத்துறைகளில் இருந்த யூதர்களை விலக்கவேண்டும். அவர்களின் உரிமைகளைப் பறிக்கவேண்டும்.என்று ஜெர்மனிய அரசனுக்கு விண்ணப்பிக்கப்பட்டது. 1880-1881 களில் யூத எதிர்ப்பு உச்சக்கட்டத்தையடைந்தது. பெர்லின் உட்படப் பலபகுதிகளில் யூத வழிபாட்டிடமான சினகோகன்கள், யூதர்கட்கு சொந்தமான விடுதிகள், கடைகள் தாக்கப்பட்டன, கொள்ளையிடப்பட்டன. யூதர்கள் மேல் தெருக்களிலும் தாக்குதல்கள் நடத்தும் பாசிசப் போக்கிலான குழுக்கள் உருவாகியிருந்தன. 1882 இல் டிரேஸ்டன் நகரிலும், 1883 இல் செமினிற்ஸ் நகரிலும் சர்வதேச யூத எதிர்ப்பு மகாநாடுகள் நடைபெற்றன. 1888 இல் ருடோல்வ் ஸ்டைனர் என்ற மானுடவியலாளன் ஜெர்மனிய உயர் இனம் என்ற கோட்பாட்டை மானுடவியல் ரீதியில் நிறுவமுயன்றான். ஜெர்மனியானது சீனா, ஆபிரிக்கா உட்பட பல நாடுகளில் நுழைந்து ஆக்கிரமிக்கத் தொடங்கிய காலகட்டத்துக்கு ஏற்ற உயர் இனம் கோட்பாட்டுக்கு உதவியாயும் இருந்தது. இவன் "ஆரியர்", "ஆரியரல்லாதோர்" பற்றிய சிந்தனைகளையும் ஜெர்மனிய உயர் இனம் பற்றிய கோட்பாடுகளையும் உருவாக்கினான். ஆரியர்களையும் ஆறு பிரிவுகளாகப் பிரித்து வகைப்படுத்தினான். ஆபிரிக்க மக்களை கொழுத்த உதடுகள் கொண்ட வளர்ச்சிகுன்றிய குழந்தை நிலையில் உள்ள இனங்களாக வரையறுத்தான். "கீழ்நிலை மனிதன்" "மிருகத்துக்குச் சமமான மனிதாகள்" அநாகரீகர்கள் போன்ற பகுப்பாய்வுகள் செய்யப்பட்டன. நேக (கறுப்பின மக்களை சுட்டும் பழிப்புச் சொல்), பாபிகன் என்பன முக்கியமாக ஆபிரிக்க கறுப்பின மக்களை சுட்ட கொலனிகளை அடிமைப் படுத்திய காலத்தில் எழுந்தன. இங்கு "கீழ்நிலை மனிதன்" என்ற பாசிசக் கருத்தியலை நீட்சே ருடோல்வ் ஸ்டைனருக்கு சமமாய் பாவிப்பதை நாம் காணமுடியும். சீன ஆக்கிரமிப்பை ஜெர்மனி நடத்திக் கொண்டிருந்தபோது "மஞ்சள் அபாயம்" பற்றியும் அதற்கு எதிராக ஐரோப்பிய மக்கள் கலாச்சாரம், வெள்ளையினப் பெருமைகள் ஜெர்மனியில் பேசப்பட்டன. சீனாவை பங்கிடுவது பற்றி "பெரும் சீனக் கேக்கை வெட்டிப்பிரிப்பது" பற்றியும் பேசப்பட்டது.

ருடோல்வ் ஸ்டைனர் யூதர்களை சமஉரிமை வழங்கப்படமுடியாத ஒட்டுண்ணி இனங்களில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒன்று என வகைப்படுத்தினான். யூதர்களின் சியோனிச் கொள்கையே செமிட்டிக் எதிர்ப்புச்சிந்தனைக்கு மூலகாரணமே தவிர ஜெர்மனியர்கள்அல்ல என்று விளக்கமளித்தான். கத்தோலிக்க மற்றும் புரட்டஸ்தாந்து மதம் சார்ந்தவர்கட்கு யூதக்கடவுளான கிறிஸ்துவையும் யூத நம்பிக்கைளையும் பின்பற்றுபவர்கட்டு யூதர்களை எதிர்க்க உரிமைகிடையாது. கிறிஸ்தவத்தை துறந்த பழம்பெரும் ஜெர்மனிய மரபைத் தொடர்பவர்கட்கே ஜெர்மனிய இனப்பெருமை காக்கும் பொறுப்பு விடப்பட்டுள்ளது. அவர்களே யூதர்களை எதிர்க்க உரிமை பெற்றவர்கள். யூதச் சிந்தனைகளால் களங்கப்படாதவர்கள் என்ற விளக்கங்கள் கொடுக்கப்பட்டன. ஜெர்மனிய உயர்இனம், இனத்தை தூய்மையாய் வைத்திருத்தல், இனத்தூய்மை, யூத இரத்த நஞ்சூட்டல் , அன்னியரும் அடுத்தவர்களும், அன்னியக் குழுக்கள் என்ற கருத்துப் போக்குகள் ஆட்சிக்கு வந்தன. ஜெர்மனியர்கள் அல்லாத சகல போக்கும் எதிர்க்கப்பட்டதோடு தனிமைப்படுத்தப்பட்டு ஒதுக்கப்பட்டன.

ரிட்சார்ட் வாக்கனரின் மருமகனான சம்பர்லைன் கைசர் வில்கெம் 2 நெருக்கமாயிருந்தவன் 1905 இல் ரஸ்யாவில் யூதர்கள் அழிப்பிலிருந்து தப்பி ஜெர்மனியுள் புகுந்த போது கைசர் வில்கெம் 2 அம்மக்களை பன்றிகள் ஊத்தை யூதர்கள என்று திட்டினான். ''யூதர்கள் எனது அரசின் ஒட்டுண்ணிகள் என்று தூற்றினான்'' ''யூதர்கள் எம் அதிஸ்டமின்மைக்கு பொறுப்பானவர்கள்'' என்று கருதப்படும் சொற்றொடர் நாசிகாலத்தில் பிரபலமானது. ஆனால் இது நீட்சே காலத்துக்குரியது. நீட்சேயை அவன் எழுத்தை பரிசீலிக்கு முன்பு அவன் வாழ்ந்த காலகட்டத்தைய ஜெர்மனிய அரசியல் சமூக கருத்தியல்களையும் வளர்த்து பலம் பெற்றுவந்த பாசிசத்துக்கு அடிப்படையான பொருளாதார சக்திகளையும் கவனிக்கவேண்டும். அப்போது மட்டுமே ஜெர்மனிய ஏகாதிபத்தியப் பொருளாதார ஆர்வங்களோடும் தொழிலாள வர்க்க இயக்கங்களை சிதைத்தழிக்கும் போக்கோடும் இணைந்த வளர்ந்த பாசிச மூலக் கூறுகளையும் அதன் நேசசக்தியான நீட்சேயையம் விளங்கிக் கொள்ளமுடியும். நீட்சே அன்றைய ஜெர்மனியின் பாசிச வளர்ச்சிப் போக்கை சிந்தனை வடிவில் திரட்டி புதுவடிவம் வழங்கினான்.

- கிறிஸ்துவ எதிர்ப்பு - யூத எதிர்பின் ஜெர்மனிய பாசிசவடிவம் -

நீட்சே பிளாட்டோவை உயர்மனித வரிசையில் இருத்தினான். அன்றைய கிறிசில் பிளாட்டோவை ஒத்த மாமனிதர்களே ஆட்சி செய்தனர் என்றான். போப்பை சிறை பிடித்த நெப்போலியனைப் பாராட்டி தன் முன்னோடி என்று கொண்டாடுகின்றான் நீட்சே. நீட்சேயின் கிறிஸ்துவ மறுப்பு மனித அறவுணர்வின் அடிப்படையில் மனிதகுலத்து விடுதலையின் பாலான அக்கறை மீது எழுந்தல்ல. மாறாக ஜெர்மனிய பழம் பெருமையுடன் கூடிய இயற்கை வாழ்வு மற்றும் தேசிய வெறி, பாசிசப் போக்குகட்கு அடிப்படையான யூத எதிர்ப்பின் மீது எழுந்ததே. நீட்சேயின் der Antichrist "கிறிஸ்தவ எதிர்ப்பு" நூல் வெளிவந்த காலகட்டம் ஜெர்மனியில்மிகப் பெரும் யூத எதிர்ப்பும், கிறிஸ்தவம் யூதச் சிந்தனை என்ற வாதாட்டங்களும் நடைபெற்றுக் கொண்டிருந்த காலகட்டமாகும். கிறிஸ்தவம் தன்னுடைய "மரணஎதிரி" என்ற நீட்சே பிரகடனப்படுத்தியதை இந்த அடிப்படையிலேயே பார்க்கவேண்டும். "கடவுள் இறந்து விட்டான்" என்று கிறிஸ்தவ கடவுளைச் சபித்துவிட்டு நீட்சே ஐரோப்பிய நாகரீகத்துக்கு அடிப்படையாகக் கருதப்படும் கிறீசின் டியோனிசோஸ் என்ற கடவுளிடம் செல்கின்ற முரணையும் நாம் ஜெர்மனியப் பழம் பெருமையில் கிறிஸ்துவ யூதச்சிந்தனையை துறந்து விட்ட ஜெர்மனியப் பாசிசக் கூறின் வடிவமாயே காணவேண்டும். கி.மு 6ம் நூற்றாண்டில் வாழ்ந்த பெர்சிய மதத் தலைவரான சாராதுாஸ்ட்ராவில் அக்கறை காட்டுகின்றான். இவர் நல்ல கடவுள், தீய கடவுள் கோட்பாட்டுக்கு சகலரிலும் முன்னோடி ஆவர். இவரின் மூலக்கருத்துக்களைத் தேடி சீனாவின் யூனான் பகுதிக்கும் நீட்சே போய்வந்தான். ஆனால் சீன மக்கள் மேலான ஐரோப்பியரின் ஒடுக்குமுறையையோ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுரண்டலைப்பற்றியோ அவன் பேசமால் போனமையை அவனது பாசிச மூலங்களின் மேலாண்மைக் கொள்கையின் அடிப்படையிலேயே பார்க்க வேண்டும். ஜெர்மனி நீட்சே காலத்தில் சீனாவைக் கொள்ளையிட்டு சீன மக்களை அழிக்க தொடங்கியதையிட்டு ஆபிரிக்க நாடுகளை சூறையாடத் தொடங்கியதையிட்டு நீட்சே ஒருவரி கூடப் பேசவில்லை எதிர்க்கவில்லை என்பதையும் இவனுக்கு முன்பு வாழ்ந்த மார்க்ஸ் ஏங்கெல்ஸ் தொடக்கம் கொம்யூனிஸ்டுகள் சகல ஐரோப்பிய ஆக்கிரமிப்புகளை கீழைத்தேச மக்கள் மீதான படுகொலைகளை எதிர்த்து போராடி வந்தனர் என்ற உண்மை ஒன்றே நீட்சேயின் பாசிச இலக்கியத்தை அம்பலப்படுத்தப் போதுமான ஒன்றாகும்.

அ.மாக்ஸ் போன்றோர் நீட்சேயின் "கடவுள் இறந்து விட்டான்" என்பதற்கும் கிறிஸ்தவ மறுப்புக்கும் பின்புறமுள்ள யூதவிரோதத்தை பாசிசத்தைக் கண்டு வேண்டுமென்றே மறைத்தனர். மேலும் முதலாளிய மறுமலர்ச்சிக் காலத்தில் கடவுளர், மத மறுப்பு என்பது சாதாரணமானதாகும். கடவுள் மறுப்பை பிரதானப்படுத்திய ஜெர்மனியச் சிந்தனையாளர்கள் நிறைய இருக்க நீட்சேயை மட்டும் தூக்கிப்பிடிக்கும் சூட்சமங்களை அரசியலில் தேடவேண்டும். ஜெர்மனியக் கவிஞர் சில்லர் கடவுள் மறுப்பை பிரதானப் படுத்தியவர். கைன்றிச்கைன "அறிவின் வெற்றி மதநம்பிக்கைகள் மீதான வெற்றி" என்றதோடு கடவுளை வெறுத்து தேவாலயத்தை தூசித்தார். அதிகாரமும் பணமும் மதங்களின் சொத்தாகிவிட்டது என்று சொன்னார். இவரின் கடவுளர் மறுப்புக்காக இவரது நூல்கள் போப் கிறிகோர் 16 ஆல் தடை செய்யப்பட்டது. அப்படியான நிலை எதும் நீட்சேக்கு ஏற்படவில்லை. நீட்சேக்கு முன்பே மார்க்ஸ் "மதம் மக்களுக்கு அபினி என்றார்." "எல்லாவற்றையும் சந்தேகி" என்ற மார்க்சின் குரல் இன்றி "எல்லா மதிப்பீடுகளையும் மறு மதிப்பீடு செய்" என்ற நீட்சேயின் குரல் எழுந்திருக்கவே முடியாது.

- நீட்சேயின் பாசிசக் கூறுகள் -

மாக்சியம் புதிய மனிதனைப் பற்றி, மக்களின் வரலாற்று பங்களிப்பை பற்றி பேசியது. அந்தப் புதிய மக்கள் முன்னேறிய அரசியல் பொருளாதார சமூக நிலைகளில் வளர்ச்சியில் படைக்கப்படுவர்கள். ஆனால் நீட்சேயின் கருத்துகள் அதிகாரத்துக்குக்கும் புனிதங்கட்கும் எதிராய் குரல் கொடுத்துக் கொண்டே மரபுகளை மறுத்துக் கொண்டே மனித இயல்புக்கு அப்பாற்பட்ட "மாமனிதர்களை", "உயர்மனிதர்களை" மக்களிடம் இருந்து அன்னியப்பட்ட நிலையில் ஆதிக்க கதாநாயகர்களைப் பற்றி பேசியது. புதிய மரபுகளை புதிய புனிதங்களை, பதிய அதிகாரத்தை படைக்கும் முரணுக்குப் போய்ச் சேர்கின்றது. "மாமனிதத்தரம், மாமனிதசக்தி, மாமனிதன், உயர்ந்த மற்றும் தாழ்நிலை மனிதன்" பற்றிய கருத்தியல்களை நீட்சே பேசினானன். இது மக்களை பிளக்கும் பாசிசக் கூறாகும். இதில்தான் கிட்லர் உருவானன். கிறிஸ்துவைஇறக்கிவிட்டு அவர் சாவை அறிவித்து விட்டு கடவுளின் இடத்தில் மாமனிதர்களை மக்களுக்கு மேலாக படைத்து விடப்பட்டனர். இந்த மாமனிதர்களே பாசிசத்தின் கருத்தியலுக்கும் இனப்பெருமைச் சிந்தாந்தத்தை உருவாக்க வலுச் சேர்த்தவர்கள். நீட்சேயின் "பூமியின் உயர்வானவன்", "மனித மாதிரிகள்" பற்றிய கருத்தியல்கள் வளர்ந்து வந்த பாசிசத்துக்கு மாதிரியாகத் திகழ்ந்தன. அடிக்கட்டுமானத்தில் எழுந்த வர்க்கப் போராட்டத்தை ஜெர்மனிய தொழிலாள வர்க்க எழுச்சிகளை நசுக்க தேவையான பாசிசத் தயாரிப்புகளை செய்து கொடுத்தான்.

நீட்சேயின் மாமனிதர் கோட்பாடுகளின் மூலம் இந்திய மனுதர்ம சாஸ்திரத்திடமும், மனுவிடமும் இருந்து எடுக்கப்பட்டதாகும். ஆரியர் உயர் இனம், உலகை ஆளப் பிறந்த இனம் என்ற கருத்துக்கள் ஆய்வுகள் இந்தியாவில் ஆரியத்தின் தொடர்புகளை தேடிச் செல்வதில் முடிந்தது. கேகல், மக்ஸ்முல்லர், கும்போல்ட் உட்படப் பலர் இந்தப் போக்கின் பிரதிநிதிகளாய் இருந்தனர். இந்த வழியில் நீட்சே ஆரியரைத் தேடிப் புறப்பட்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மனுவைக் கண்டு கொள்கின்றான். பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரனையும் நால்வருனப் பாகுபாட்டையும் ஆதி ஆரியனின் தர்மமாய் காண்கின்றான். ஒடுக்கப்பட்ட இழிவுபடுத்தப்பட்ட தாழ்நிலையிலுள்ள மனிதர்களின் சமூகநீதிக்கான வரலாற்றுப் போராட்டங்களை அவன் அடையாளம் காணவோ அனுதாபப்படவோ இல்லை. மாறாக பிராமணர்கள் சார்ந்த உயர் வர்க்க கருத்தியல்களை தனதாக்கிக் கொண்டான்.

அவனின் மாமனிதச் சிந்தனை மில்லியன் கணக்கான மக்களை இழிவுபடுத்தவும் அடிமைப்படுத்தவும், படுகொலை செய்யவும் படுகொலை முகாங்களை அவுஸ்விட்ஸ் (AUSWITZ) களை உருவாக்கவும் காரணமாயிற்று. நீட்சேயிடம் இருந்த அதிகாரவிருப்பு, வன்முறை வெறி, யுத்தத்துக்கு விருப்பு, மனிதர்களின் ஆத்மீக மதிப்புகளை நிராகரித்தல் என்பன மக்களின் வரலாற்றுப் போக்கை மதிக்காத பாசிச ஆளும் வர்க்க நலன் சார்ந்த அதிகார வர்க்கத்து கருத்துப் போக்கே. சராசரி மனிதத் தன்மை கடந்த மாமனிதனே அவனது பேசு பொருள். அவனது கனவு, புதிய அதிகாரம் கொண்ட தனிமனிதனை சமூகத்தின் ஆற்றலை மனித முன் முயற்சிகளை கடந்து அவன் படைக்க முயன்றான். அதுவே கிட்லராய் பாசிசத்துக்குக் கிடைத்தது. கிட்லர் நீட்சேயால், அவன் கோட்பாட்டால் மிகவும் பாதிக்கப்பட்டான். அவனின் "எனது போராட்டம்" நூல் அதற்குச் சாட்சியம். நீட்சேயினுடைய கையெழுத்துப் பிரதிகளை தன் சொந்த ஆவணக் காப்பகத்தில் வைத்து கிட்லர் பாதுகாத்தான். நீட்சேயின் அரசியலில் பாசிச பக்கத்தை மறைத்துவிட்டு அ.மார்க்ஸ் போன்றோர் அரசியல் கரடி விடுவதை அம்பலப்படுத்தவேண்டும்.

- முதலாம் உலக யுத்தத்தில் நீட்சேயிசம் -

நீட்சே 1900 ஆண்டில் மரணமடைந்தான் ஜெர்மனியின் இலக்கிய விமர்சகரான பிரான்ஸ் மேரிங் நீட்சேயின் ஜெர்மனியப் பெரும் தேசியவாதக் கூறுகளை விமர்சித்தார். 1905 இல் லெனின் சுவிஸ்சர்லாந்தில் இருந்த காலத்தில் நீட்சேயைக் கற்று இருந்தார் என்று தெரிகின்றது. 1916 இல் லைபிசிக் நகரைச் சேர்ந்த குரோனர் (DIE NATIONEN UND IHRE PHILOSOPHIE, EIN KAPITAL ZUM WELTKRIEG) வெளியிட்ட புத்தகத்தில் உலக யுத்தத்தில் நீட்சேயின் கருத்துக்களின் பங்கை ஆராய்ந்தார். பிரிட்டனைச் சேர்ந்த தோமஸ் கார்டி, ரெமாயின் ரோலாண்ட் போன்றோர் முதலாம் உலகயுத்தத்தில் நீட்சேயிசத்தில் பெறப்பட்ட கருத்துக்களை ஆராய்ந்தனர். அதை "EURO NIETZSCHEN WAR" என்று மதிப்பீடும் செய்னார். முதலாம் உலக யுத்தத்தில் கென்றி லூயிஸ் மென்கன் என்பவர் அமெரிக்காவில் வெளியிட்ட நீட்சே பற்றிய புத்தகம் ஜெர்மனிய பிரிவாக்க கருத்தியல் என்று தடை செய்யப்பட்டது. வில்லியம் ஆர்கர் யுத்தம் மீதான நீட்சேயிச கருத்துகளின் செல்வாக்கை கண்டறிய முயன்றார். முதலாம் உலக யுத்த முடிவில் நீட்சேயிசம் பரவிய நாடுகளில் முக்கியமானது இத்தாலியாகும். முசோலினி தலைமையிலான பாசிஸ்டுகள் நீட்சேயைப் போற்றினர். இத்தாலியப் பாசிசம் பிற்காலத்தில் ஜெர்மனியப் பாசிசத்தோடு மிகவும் நெருக்கமாகியது. முதலாம் உலகப் போரின் தோல்விக்குப் பின்னர் நீட்சேயிசம் ஜெர்மனியில் பின்தள்ளப்பட்டு ஒதுக்கப்பட்டது. ஜெர்மனியக் பெரும் கவிஞர்களான கோத்தே, சில்லர், கோர்டர் ஆகியோர் வைமர் குடியரசு காலத்தில் முன்னே வந்தனர். மாபெரும் அரசியல் இலக்கிய எழுச்சிக் காலமாய் அது இருந்தது. மீண்டும் ஜெர்மனியப் பாசிசத்தின் எழுச்சிவரை நீட்சேயிசத்தின் மறுபிறப்பு வரை அவை நீடித்தன.

- மாக்சியம் பற்றி நீட்சேயிசம் -

யூதவிரோதமும் தூய ஜெர்மனிய இயற்கைச் சிந்தனை என்ற கருத்தாக்கமும் கொண்டிருந்த நீட்சே மாக்சியத்தை கிறிஸ்தவ மற்றும் யூதா ஆதிக்கக் கருத்தியல்களின் தொடர்ச்சி அதன் மனோபாவம் என்று கருதினான். சோசலிசத்தின் அடிப்படையான மனித சமத்துவத்தை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(இங்கு சமத்துவம் என்பது ஏற்றத் தாழ்வை கடத்தலைக் குறிக்கின்றது.) நிராகரித்து, மனித சமத்துவம் என்பது கற்பனையானது என்றான். சோசலிசம் மனித உரிமைகளை வழங்காது மாறாக புதிய அதிகாரத்தை நிலவும் வன்முறைகளையே தொடரும் என்றதோடு மனித உரிமைகள் சாத்தியப் படாதவை என்றான். சோசலிசம் என்பது அரசியலைத் திணித்து இயற்கைக்கு முரணான கட்டமைப்பை மனிதர்கள் மேல் சுமத்தி விடும் என்றான். இதன் மூலம் ஜெர்மனிய ஆளும்வர்க்க கனவுகளை நிறைவாக கொண்ட கோட்பாட்டை விரிவாக்கினான். நீட்சே சமூகத்தில் நடைபெறும் மாறுதல் வளர்ச்சி போன்றவைகளை புறநிலை யதார்த்தத்தில் செயற்படும் பல்வேறு விதிகளையும் புரிந்து கொள்ள மறுத்தான். தோற்றத்துக்கும் நிகழ்வுக்கும் இடையிலான தொடர்புகளை சமூகப் போக்கை சரித்திர ரீதியில் விளங்கிக் கொள்ளும் இயங்கியல் இன்மை மார்க்சியத்துக்கு எதிராக நிற்க கோரியது. சோசலிசத்தை கிறிஸ்தவக் கற்பனாவாத்தின் கடைசி வடிவம் என்று கருதியமை, சோசலிசத்தின் அடிப்படையான மனித சமத்தவத்தை நிராகரிப்பதும், அவனுள் காணப்பட்ட ஜெர்மனியப் பன்னெடுங் கால யூதவிரோதம், ஜெர்மனிய உயர் இனம், மாமனிதன் கோட்பாடுகள் இவைகளின் தொடர்ச்சியே. நீட்சேக்கு முன்பும் பின்பும் நாசிகளின் கால கட்டத்திலும் கொம்யூனிசம், சோசலிசம் என்பவை உலக ஆதிக்கம் பெற முனையும் யூதர்களின் சதியாகவே பார்க்கப்பட்டது என்ற வரலாற்ற உண்மையூடாக இவற்றை நாம் விளங்க வேண்டும். நீட்சேயின் காலம் தொழிலாளர் வர்க்க இயக்கங்கள் முழுமூச்சோடு வளர்ந்து கொண்டு இருந்தகாலம் என்பதும் ஜெர்மனிய மேலாதிக்கக் கனவுகளின் மூடுதிரையான ஜெர்மனிய உயர் இனம் என்ற கருத்துக்கு எதிராக இருந்த கருத்து மாக்சியத்திடமிருந்தே வந்தது என்பதையும் நாம் கவனத்தில் எடுக்கவேண்டும். நீட்சேயின் சிந்தனைப் போக்கு அப்போதை புலப்படும். தொழிலாளர்களை இயந்திரங்களின் அடிமைகள் என்றதோடு சுயமாய் செயற்படமுடியதவர்களாயும் கருதிய போக்கு வழக்கமான வரம்பு மீறாத முதலாளியப் பார்வையே. மனிதர்களின் சமமற்ற நிலையில் நீட்சே நம்பிக்கை கொள்வது அவனது மாமனிதக் கனவுகளின் அடிப்படையிலானதாகும். மனித ஏற்றத்தாழ்வுகள் இயற்கையானவை என்று அவன் கருதினான். இச்சிந்தனை பின்பு நாசிகள், யூதர்களையும், சிந்தி, ரோமா, ஆபிரிக்க ஐரோப்பிய கலப்பின மக்கள், கச நோயாளர்கள், அங்கவீனர்கள் போன்றோரை அழிக்கவும் வலிமை பொருந்திய ஆரிய மனிதனைப் படைக்கும் போக்கிலும் வளர்ந்தது. "வாழ்த் தகுதியற்றவைகளை அழித்தல்" என்ற சிந்தனை கிட்லரின் வரலாறு காணாத மனித அழிப்புக்கு வழிவிட்டது. நீட்சேயின் எல்லாப் போக்கிலும் தலையிடும் அவனது அவ நம்பிக்கை உலகை "கிறுக்கர்களின் இல்லம்" என்ற போது, மனிதர்களின் மீது தொழிலாளர்களின் உலகை மாற்றி அமைக்கும் சக்தி மீது நம்பிக்கை கொண்ட மாக்சோ "உலகை இயற்கையின் எழில்மிகுந்த கொடை" என்ற கருதினார்.

பாசிசம் நிலவிய காலத்தில் விமசர்சகரான கானஸ் குன்தர் 1930 களின் நடுப் பகுதியில் பாசிசத்துக்கும் நீட்சேயின் சிந்தனைக்குமுள்ள தொடர்புகளை ஆராய்ந்தார். புதிய காண்டியப் போக்குகள், டார்வினிய சிந்தனைகள் இணைத்து நீட்சேயின் சமூகம், பொருளாதாரம் பற்றிய அறிவின்மையோடு பாசிசத்துக்கு தொண்டு செய்வதை நிருபிக்கின்றார். "வாழுவதற்கான" அல்லது "இருப்புக்குக்கான" போராட்டம் என்ற கருத்துகள் முதலில் சோப்பன்கோவரிடமிருந்தும் மற்றைய சிந்தனையாளர்களிடமிருந்து நீட்சேயிடம் வந்து சேர்ந்தமையையும் இது சாதாரண மனிதர்களை ஜெர்மனியப் பொதுமக்களையும் தவிர்த்து பலமான உயர் மனிதர்கட்கே நாசிகள் சித்தரிக்கும் அதிஉயர் இனக் கோட்பாட்டுக்கே உரியது என்று காட்டுகின்றார். இது நாசிகள் இனப் போராட்த்தை வர்க்கப்போராட்த்துக்கு எதிராய் நிறுத்த உதவியது. நீட்சே சாதாரண முதலாளிய ஜனநாயக உரிமைகளைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கூட மதிப்பிடாமை அவனின் பழம் கிரீசின் அரிஸ்டோட்டலின் சிந்தனை எச்சங்கள். இவைகளை ஆய்வுக்குட்படுத்தினார். 1954 இல் லூக்காக்ஸ் பாசிசத்தையும் நீட்சேயையும் விரிவாக ஆராய்ந்துள்ளார்.

- பெண்கள் பற்றி நீட்சே -

"நீ பெண்களிடம் போகும் போது சவுக்கை எடுத்துச் செல்ல மறந்த விடாதே"("du gehst du frauen? vergiss die peische nicht") இது நீட்சேயின் புகழ்பெற்ற பெண்கள் பற்றிய கருத்துரை. நீட்சே தன் தாய் பிரான்சிஸ் காவையும் சகோதாரியான எலிசபெத்தையும் தவிர எல்லாப் பெண்களையும் வெறுத்துக் கொட்டினான் நம்பத்தகாதவர்கள் என்றான். பெண்களை சூனியக்காரிகள், பாம்புகள் என்று அழைத்தான். இவைகளையே இந்து மனு தர்மமும் பெண்ணுக்கு கொடுத்த அடைமொழிகளாகும். ஆண்கள் பெண்களிடம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். பெண்களிடம் தம்மைப் பறி கொடுத்து விடக் கூடாது. குழந்தை பெறுவது மட்டுமே பெண்களின் வேலை. நீட்சேயின் "உயர் மனிதர்கள்" "மாமனிதர்கள்" வரிசை ஆண்களுக்கு மட்டுமே ஒதுக்கப்பட்டது. பெண்களுக்கு அங்கு இடம் கிடையாது. இதையே நாசிகால பெண்களின் நிலை தெளிவுபடுத்தியது. பெண்களை ஆணின் கண்காணிப்பில் அடக்கி வைத்திருக்கப்பட வேண்டியவாகளாய் நீட்சே கருதிய காலத்தில், ஜெர்மனியில் கிளாரா செட்கின் போன்ற பெண் மார்க்சியவாதிகள் பெண் விடுதலையைப் பற்றி பேசத் தொடங்கிவிட்ட காலமாகும். பெண்கள் குடும்பப் பெண்களாக புனிதமாக மற்றய இனத் தொடர்பு இன்றி இருக்க வேண்டும் என்ற நாசி காலப் பெண் சிந்தனைகள் நீட்சேயின் பிற்போக்குதனத்தின் தொடர்ச்சியே. மாக்சியம் பெண்களின் பிரச்சனையை போதியளவு பேசவில்லை என்று துள்ளியடிக்கும் பின் நவீனத்துவங்கள் தம் குருவானவர்களின் ஒருவரான நீட்சேயின் காட்டுமிராண்டித்தனமான பெண்கள் மேலான வன்முறைச் சிந்தனை பற்றி பேச்சு மூச்சுக் காட்டுவதில்லை. இந்த இரட்டை வேடம் எந்த வர்க்க நலனுக்காக?

- நீட்சேயின் தத்துவவிசுவாசிகள் -

நீட்சேயின் பாசிசக் கருத்தியல்களைத் தொடர்ந்து பந்தம் பிடித்தவர்களில் மார்டின் கைடேக்கர்(1889-1976), ரோபேட் முசில்(1880-1942), ஏரன்ஸ்ட் யுங்க(1895-1998), பூகோ(1926-1984) போன்றோர் முக்கியமானவர்கள். இவர்களில் முக்கிய பாசிஸ்ட் கைடேக்கர் இன்றைய பின் நவீனத்துவ தத்தவ விடலைகளாலும் தூக்கிப் பிடிக்கப்படுபவன் என்பதால் இவனை பார்ப்போம். அ.மார்க்ஸ் போன்ற தமிழ் நாட்டின் பின்நவீனத்துவ மேதைகள் நீட்சேயை மட்டுமல்ல கைடேக்கரையும் வர்க்க இடம் வலம் தெரியாமல் காவித் திரிவது இன்று நாம் காணும் கண்கொள்ளாக் காட்சியாகும்.

கைடேக்கர் 1916 "சரித்திர விஞ்ஞானங்களின் காலம் பற்றிய கருத்து" என்ற நூலையும், 1927இல் "காலமும் இருத்தலும்" என்ற நூலையும் வெளியிட்டான். "மனித எதிர் காலம் அவர்களையே சார்ந்தது மனிதனின் ஒவ்வொரு அடியும் அவனைக் கட்டுப்படுத்துகிறது" என்று நவீன கருத்துமுதல்வாதம் இங்கு புதுப்பிக்கப்படுகின்றது. சமூகத்தின் வர்க்க கட்டமைப்புகள் மனிதர்களின் வித்தியாசம் வித்தியாசமான செயற்பாடுகளில் இயங்க நிர்ப்பந்திக்கப்பட்டு இருப்பதை மதிப்பிடாமல் மனிதர்கள் தனித்தனியே செயற்படுவர்களாக சுதந்திரமாக இயங்க வாய்ப்புடையவர்களாக புனைந்து மக்கள் ஏமாற்றப்படுகின்றனர். "எல்லாப் பொருட்களும் கருவிகளே" என்ற கைடோக்கர் நடப்பின் அனுபவத்தை வரலாற்றுப் படிப்பினைகளை விட்டு நிகழ்ச்சிகட்கும் புறத்தோற்றத்துக்கும் இடம் வழுங்கினான். இவைக்கு புறத்தே நிலவும் உண்மைகள் காரணிகள் ஆராயப்படவில்லை. கைடோக்கர் ஆரம்பம் முதற் கொண்டே பாசிச அமைப்புகளோடு தொடர்பு கொண்டு இயங்கினான். யூதர்கட்கும், கொம்யூனிஸ்கட்கும் எதிராய் இயங்கிய "இரத்தத்தையும் நிலத்தையும்" காக்கும் அமைப்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிறைபூகர் நகரில் இயங்கிய போது, அதில் பிற்போக்கான அடிப்படைவாதிகளுடன் சேர்ந்து இயங்கினான். நாசிகளின் கட்சியான NSDAP உருவாகி வளர்த்த போது ஏனைய பாசிசக் குழுக்களை உள்வாங்கியது அல்லது அழித்தது. பெர்லினில் இயங்கிய "STRASSER BRUDER" உட்பட பல பாசிச அமைப்புகட்கும் இக்கதியே நேர்ந்தது. 1933 கைடேக்கர் வெளிப்படையாக நாசிகளின் NSDAP இல் இணைந்து கொண்டதோடு, சகல சிந்தனையாளர்களையும் நாசிகளுடன் சேர்ந்து கொள்ளளும் படி அழைப்புவிட்டான். பிறைபூகர் பல்கலைக்கழகத்தில் கைடேக்கரின் மாணவப் பருவத்தில் முக்கிய விரிவுரையாளராக இருந்த யூத அடியைச் சேர்ந்த எட்முண்ட் குஸ்சவ் என்பவரை நாசிகளிடம் காட்டிக் கொடுத்துவிட்டு, அவரின் பதவியை தானே பறித்தவன். அதன் பின்பு பிறைபூகர் பல்கலைக்கழகத்தில் தலைமையான பாசிஸ்ட்டாக, கொலைகாரனாக இயங்கியவன். இவன் கிட்லரை "தலைவர்" என்ற அழைத்ததோடு நாசிகளால் "தேசியப் புரட்சியாளன்" என்று அழைக்கப்பட்டான். கிட்லர், ரோசன்பேர்க் போன்ற தலைமைப் பாசிஸ்டுகளுக்கு நெருக்கமாயிருந்தான். 1934 இல் நாசிகளோடு தனிப்பட்ட காரணங்கட்காக முரண்பட்டுக் கொண்டு இத்தாலிய பாசிஸ்ட் முசோலினிக்கு மிகவும் நெருக்கமான தத்துவவாதி ஆனான். இவனே 1927 இல் நீட்சேயின் வெளியீடுகளை மறுபதிப்புச் செய்து வெளியிட்டான். தன்னை நீட்சேயின் தொடர்ச்சி என்று வெளிப்படுத்திக் கொண்டான். நீட்சேயை ஜெர்மனிய இத்தாலியப் பாசிஸ்டுகளின் வேதப் புத்தகமாக்கியதில் கைடேக்கருக்கு பெரும்பங்குண்டு. சோவியத்யூனியனையும் கொம்யூனிஸ்டுகளையும் சத்துராதியாய் கருதிய கைடேக்கர் ஒக்டோபர் புரட்சி காட்டுத்தனமானது, நாகரிகத்தின் அழிவு, மனித இயற்கை மேலான வன்முறை என்றான். நீட்சேயை "தொழில் நுட்ப உலகின் தூதன்" என்று புகழ்ந்து ஜெர்மனிய, இத்தாலிய பாசிஸ்ட்டுகளை கைடேக்கர் ஆதரித்துக் கொண்டு இருந்த சமயம் 1935 இல் ஜெர்மனியின் சிறந்த இலக்கியவாதியும் சிந்தனையாளருமான பெர்டேல் பெறெஸ்ட் பரிஸ் நகரில் முதலாவது உலக எழுத்தாளர் மாநாட்டைக் கூட்டி பாசிச எதிர்ப்பு முழு மனிதகுலத்தினதும் கடமையாகும் என்று பிரகடனப்படுத்தினார்.

இரண்டாம் உலகயுத்தம் முடிந்து ஜெர்மனிய மற்றும் இத்தாலியப் பாசிசம் தோற்கடிக்கப்பட்ட பின்னர் கைடேக்கர் தம் பழைய பாசிச நிறத்தை மேற்கு ஜெர்மனியின் பிரதான ஜனநாயக சித்தாந்தவாதி என்ற கூட்டுக்குள் சுருக்கிக் கொண்டான். பெரும் நவீன தொழில்மயமாக்கலையும் இராணுவப் பெருக்கத்தையும் ஒப்புக்குக் கண்டித்த கைடேக்கர் கடைசிவரை கொம்யூனிச மற்றும் யூத விரோதியாகவே இருந்தான். தன் பாசிசக் கடந்தகாலம் யூதமக்களை அழிப்பதில் பங்கெடுத்தமை பற்றி ஒரு வார்த்தையோ ஒரு சிறு சுயவிமர்சனமோ, விமர்சனமோ செய்ததில்லை. மேற்கு ஜெர்மனிய ஏகாதிபத்தியதால் அவன் பெருமை கொண்ட ஜனநாயகச் சிந்தனையாளன். கொம்யூனிச சர்வாதிகாரத்துக்கு எதிரான பழம் பெரும் சித்தாந்தவாதி என உளமார உபசரிக்கப்பட்டான். கொம்யூனிஸ்ட்கட்சி தடை செய்யப்பட்ட நிலையிலும் கொம்யூனிஸ்டுகள் மேற்கு ஜெர்மனியில் அரசால் வேட்டை கொள்ளப்பட்ட நிலையிலும் கொம்யூனிஸ்டுகள் மட்டுமே கைடேக்கரையும் அவனின் பாசிசச் சிந்தனைகளையும் எதிர்த்து அம்பலப் படுத்திப் போராடினர். புதிய நாசிப் போக்குகள் கிட்லர், ரோசன் பேர்க் போன்றவர்களை மட்டுமல்ல தலைமை பாசிசச் சித்தாந்த மட்டங்களில் நீட்சே, கைடேக்கர் போன்றவர்களையும், தமது கோட்பாட்டு விரிவாக்க ஆசானாகவும் இன்றும் மதித்து வருவதையும், இரண்டாம் உலக யுத்தமுடிவின் பின்பான நியூரென்பேர்க் யுத்தக் குற்றவாளிகளின் மேலான விசாரணைகளின் போது பாசிசக் கருத்துக்களுக்கும் நீட்சேக்குமான தொடர்புகள் ஆராயப்பட்டு தீர்ப்புகளில் குறிக்கப்பட்டுள்ளமையும் அ.மார்க்ஸ் சார்ந்த பின்நவீனத்தவ கும்பல் மறைத்தே நீட்சேயை முன்னிலைப் படுத்துகின்றனர். பின்நவீனத்துவவாதிகளால் முன்னிலைப்படுத்தி பேசப்படும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சார்த்தர் கூட நாசிகளிடம் போர்க்கைதியாக இருந்த சமயம், நாசிகள் தம் சிந்தனைவியலாளர் என்ற அறிமுகத்துடன் கைடேக்கரையும் படிக்க அனுமதித்தனர். அதன் பின்பே கைடேக்கரில் சார்தருக்கு ஈடுபாடு ஏற்பட்டது.

அ.மார்க்ஸ் அண்மைக் காலமாக நீட்சேயால் வாலாயம் செய்யப்பட்டுள்ளார். "நீட்சேயைப் படியுங்கள். விளங்குங்கள். நாம் எல்லோரும் சேர்ந்து கற்க முயலலாம்" என்று போதனை செய்யத் தொடங்கியுள்ளார். தன் வர்க்கங் கடந்த அரசியல் துறவற நிலைக்கு ஏற்ப நடுத்தர வர்க்க அரசியல் பறந்தடிப்புக்கு ஏற்ப சித்தாந்தப் பிச்சையிடுபவர்களை தேடியலைகின்றார். நீட்சே, கைடேக்கரின் பாசிசப் போக்குகளை மறைத்தும், திரித்தும், பேசாப் பொருளாக்கியும், எச்சரிக்கையாய் நகர்கின்றார். கட்டுடைப்புக்காகவே தாம் அவதரித்திருப்பதை ஈரேழுபதினான்கு உலகுக்கும் அறியத் தந்த இவர்கள், நீட்சே, கைடேக்கர் போன்றோரை புனிதப் படுத்தி சிம்மாசனம் தருவதும் தனிநபர் வழிபாட்டுக்கு நிகராக அவர்களை நினைந்து நினைந்து உருகி நிற்பதும் காணக் கிடைக்கிறது. இவர்கள் விமர்ச மற்றும் புகழாரம் சூட்டும் அம்பேத்கார் பிராமணியத்தின் நால்வருணப்பாகுபாட்டையும் மனுவையும் நீட்சேயின் மாமனித சிந்தனைக்கு சமமாக வைத்து விமர்சித்திருப்பதை பற்றி இவர்கள் பேச்சு மூச்சுக் காட்டியதில்லை. இந்தியப் பிராமணியத்தின் உயிர் மூச்சிலிருந்து பிறந்த நீட்சேயின் மாமனிதக் கருத்தியலின் பாசிச மூலத்தின் துணை கொண்டு இவர்கள் தலித்துகட்காவும் விளிம்பு மனிதர்கட்காகவும் போராடப் போகின்றார்களாம். அனைத்து அறிவுள்ள ஜீவராசிகளும் நம்பக்கடவீராக! தத்துவத்துறையில் மிகவும் மோசமாய்ப் புரிந்து கொள்ளப்பட்ட தவறாக விளக்கம் கொடுக்கபட்டவராக நீட்சேயை கண்டு அ.மார்க்ஸ் வர்க்க பாசத்துடன் கண்கலங்கி நிற்கின்றார். வெளிப்படையான பாசிச ஆதரவுக் கருத்துக்காக நீட்சேயை நாசிகள் நீட்சேயின் சகோதரி எலிசபெத் ஊடாக சிலமாற்றங்கள் செய்தனர் என்பது உண்மை எனினும், பாசிசத்தின் பிறப்புக்குத் தேவையான தத்துவ அடிப்படையிலான கருத்தியல்களை நீட்சே பூரணமாய் உருவாக்கியிருந்தான். நீட்சேயை பாசிஸ்டுகள் திரித்து விட்டனர், தவறாக பயன்படுத்தி விட்டனர் என்ற ஓலம் அரை நூற்றாண்டுப் பழசு என்பதும், 1970களில் தோற்றம் பெற்ற மார்க்சியத்தில் இருந்து விலகிச் சென்ற இடதுசாரி சார்பு கொண்ட பூக்கோ, சர்த்தர் போன்றோரது நீட்சேயிச் சாய்வுகளும் அக்காலகட்டத்திய தொழிலாள வர்க்கமல்லாத உதிரி வர்க்க அரசியல் சாகசங்கட்கு பணி செய்து விட்டு மறைந்துவிட்டன. பலதளப் பார்வைக்கு போரிடுபவர்கள் இவ்வாறாக நீட்சேயை தமக்கு ஏற்ற விதத்தில் ஒற்றை வாசிப்புச் செய்து என்றென்றைக்குமான அகவயப்பட்ட ஆனந்தங்களை அடையவிரும்புகின்றனர். "எல்லாவற்றையும் பிரதியாகவே பார்க்க வேண்டும். எழுதியவனின் உள் நோக்கம் என்னவென்று ஆராய்ச்சி செய்யக் கூடாது" இது அ.மார்க்சின் அடுத்த அறிவியல் உலகமே பொறிந்து கொட்டத்தக்க கட்டுடைப்பு அப்படியாயின் கிட்லரின் "என்னுடைய போராட்டம் (mein kampf) என்ற பாசிச எழுத்தை ஆசிரியர் இறந்துவிட்டார் என்று கிட்லரைத் தப்பவிட்டுவிட்டு அவனின் பிரதியை தற்போது நிலவும் முன் கூட்டியே தீர்மானிக்கப்பட்டவாசிப்பு முறையை நிராகரித்துவிட்டு புத்தம் புதிதாய் எம் சுயங்கட்கு ஏற்ப வாசித்துக் கொள்ள முடியுமா? கிட்லரை, பாசிசத்தை, மனித அழிவுகளை, இப்படி எற்கனவே ஒப்புக் கொள்ளப்பட்ட மரபுகளை நம்பிக்கைகளை கட்டுடைத்துக் காடாத்தி விட்டு எம் சுயங்களை நிறைவு செய்து பிறவிப் பெரும் பயனை அடையலாமா? பின்பு பாசிசம் எமக்கு நீட்சே வழியில் பழக்கப்பட்டுவிடும். இந்திய மனுதர்மசாஸ்திரத்தையும் மனுவையும் மன்னித்து மறந்துவிட்டு நீட்சேயின் வாசிப்பைப் பின் தொடர்ந்து அவன் அதை வாசித்துக் காட்டிய வழியில் பிராமணனை மாமனிதனாக உயர் பிறப்பாய் தொன்று தொட்டு கனவு கண்டு வந்த இந்திய உத்தமனாய்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கண்டுகளிக்கலாம். அ.மார்க்ஸ் நீட்சேயை பாதுகாப்பற்குத் தொடங்கினால் அவர் வந்துசேரும் இடம் பாசிசமாகவே இருக்கும்.

நீட்சேயின் குருவானவர்களில் ஒருவரான சோப்பன் கோவர் "எல்லாத் தீமைகட்கும் துயரங்கட்கும் விருப்புறுதியே காரணம்" என்ற சொன்னதை பழைய கருத்துமுதல்வாதச் சக்கையை எம்மைப் போன்ற யாருமற்ற அரசியல் அநாதைகட்கு ஊட்டிவிட அ.மார்க்ஸ் விடாக் கண்டானாக முயல்கின்றார். இதையே இந்தியாவில் இரண்டாயிரத்து ஐந்நூறு வருடத்திற்க்கு முன்பாக புத்தர் "ஆசையே சகல துக்கங்கட்கும் காரணம்" என்று சொல்லிருக்கிறார். தம் சொந்த தேசத்தின் கருத்துகளை அதன் வளர்ச்சிகளை பிராமணிய மரபுகட்கு வெளியே காணத் தெரியாதவர். ஐரோப்பாவில் சொல்லப்பட்டால் மட்டும், ஆங்கில மொழியூடாகப் புகுந்து வந்தால் மட்டும் அதை பக்தியொடு இவர்கள் பஜனை செய்வதற்குப் பெயர்தான் ஐரோப்பிய மையவாதம். மாக்சியத்திலே ஐரோப்பிய மையவாதத்தின் தாக்கம் உண்டு என்று ஐரோப்பிய சீர்திருத்தவாத இலக்கியங்களைப் படித்து விட்டு புறணியளந்தவர்கள் தாமே சுயமாய் சொந்தமாய்ப் ஐரோப்பிய மையவாதத்தின் பிடியில் ஆங்கில அதிகார மொழியின் வழி நடத்தலினுள் சிறைப்பட்டுள்ள பரிதாபத்தை காண கண்கள் போதவில்லை.

வரலாற்றின் புரட்சி எழுச்சிகளின் காலகட்டத்துக்கு ஏற்ற இறங்கட்கும், படிப்பினைக்கும் காத்திருக்க இந்த நடுத்தர வர்க்க ஏகாதிபத்திய கோட்பாட்டு நாட்டான் மைக்காறருக்கு பொழுது கிடையாது. சோசலிசம் இவர்கள் விரும்பிய வேகத்தில் எதிர்பார்த்த திசையில் இருந்து வரவில்லை. எனவே மார்க்சியத்தை விட்டோடி தம் உண்மையான வர்க்க



இருப்பை காட்டிவிட்டார்கள். பின்நவீனத்தவத்தின் திரட்டல் வாதப் போக்குகளை வைத்தக் கொண்டு கனகாலத்துக்கு அரசியலற்ற தத்துவவித்தை காட்டமுடியாது என்பது இப்போது தெளிவாகிவிட்டது. எனவே இவர்கள் நீட்சே, கைடேக்கர், தலித்தியம், பெரியாரியம், அம்பேத்காரியம், மரணதண்டனை எதிர்ப்பு என அடிக்கடி கூடுவிட்டுக் கூடு பாயத் தொடங்கிவிட்டனர். இவர்களிடம் தரிசிக்க எதுவும் இல்லை. இருப்புத் தீர்ந்து விட்டது என்ற எண்ணம் புகலிடத்தின் பின் நவீனத்துவ சிறார்கள் மட்டத்தில் கூட எட்டத் தொடங்கிவிட்து.

இது எழுத உதவிய நூல்கள்


1.வருங்காலச் சமுதாயம்
2.அம்பேத்கார் தொகுதி -6
3.AUFBRECHEN -MAI- NR-4.2000
4.WELT AM SONNTAG (6.8.2000)
5.NEUES DEUTSCHLAND (24.8.2000)
6.ALICE MILLER DER GEMIEDENE SCHIISSEL -1988
7.SCHWARZ BUCH KAPITALISMUS -1999 ROBERT KURZ


தமிழரசன்- பெர்லின்
26.8.2000



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அ.மார்க்ஸ் எந்த வர்க்கத்தின் பிரதிநிதி? அவரை அழைத்துக் கூடிக் கூத்தடிப்போர் எந்த வர்க்கத்தின் பிரதிநிதிகள்

தமிழ் மக்களின் போராட்டம் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கு எதிராக வளர்ச்சி பெற்ற போது, அது அம்மக்களின் போராட்டத்தை துப்பாக்கி முனையில் அடக்கி ஒடுக்கியது. இந்த அடக்குமுறைக்கு எதிரான சக்திகளின் அரசியல் தவறுகள் அவர்களையே அவர்களின் மண்ணில் இருந்து ஓட வைத்தது. ஓடிவந்தவர்கள் ஒடுக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகள் மீதான அக்கறையை தமது புதிய பூர்சுவா வாழ்க்கையுடன் தொலைக்கத் தொடங்கி சீரழிந்தவர்கள், அந்த மக்களின் நியாயமான குரல்களையே பின்னால் மறுப்பவர்களாக தம்மை மாற்றிக் கொண்டனர்.

பட்டாளிவர்க்கம் தனது சுரண்டலுக்கு எதிராக போராடும் வரலாற்றின் மீது தமது சேறடிப்புகளை தொடங்கியவர்கள் பின்னால் பாட்டாளி வர்க்கத்தையே தமது எதிரியாக பிரகடனம் செய்ய ஒருபோதும் தயங்கியதில்லை. ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிரான அனைத்து பூர்சுவா மற்றும் ஏகாதிபத்திய கோட்பாட்டு மற்றும் நடைமுறைகளை முன்நிறுத்தியவர்கள் தொடர்ந்து ஏகாதிபத்திய கோட்பாட்டை மாற்றாக வைக்க தொடங்கினர்.

ஒருபுறம் இந்த அரசியல் பித்தலாட்டத்தில் களைத்துப் போனவர்கள் தாம் சார்ந்த சிறு சஞ்சிகைகளை கைவிட்டுவிட சிலர் புதிய ஏகாதிபத்திய கோட்பாட்டுகளுடன் களம் இறங்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராக தம்மை முன்நிறுத்துகின்றனர். இதற்கு இந்தியாவில் ஒடுக்கப்பட்ட மக்களுக்குள் நடைமுறையில் செயல்பட தயாரற்ற ஏகாதிபத்திய புத்திஜீவிகளின் தயவை இவர்கள் நாடினர், நாடுகின்றனர். அவர்களுக்கு இதன் மூலம் கிடைத்த பணமும் இவர்களுக்கு தமது பாட்டாளி வர்க்க எதிர்ப்பை பிரகடனம் செய்ய கோட்பாட்டு ஆதரவும் கிடைக்க உதவியது.

கம்யூனிச எதிர்ப்பு பிரச்சரத்துக்கு கம்யூனிச எதிர்ப்பு கும்பலால் நிதி வழங்கி பாரிஸ் வந்துள்ள அ.மார்க்ஸ் கம்யூனிச எதிர்ப்பில் ஒரு ஏகாதிபத்தியக் கோட்பாட்டாளன். இந்த கம்யூனிச எதிர்ப்பு பிரச்சாரத்துக்கு அழைப்பவர்கள் யாரும் மக்களின் நலனில் அக்கறையற்ற லும்பன்கள். மக்களின் துன்ப துயரங்களில் பங்கு கொள்ளவோ, அவர்களின் சமூக வாழ்வின் மாறுதல் பற்றி அக்கறையற்ற இவர்கள் அரசியலில் வக்கிரத்தை வெளிப்படுத்துபவர்கள். அண்மையில் புலம்பெயர் இலக்கிய வன்முறையில் ஈடுபட்டதுடன் அதை சுயவிமர்சனம் செய்ய மறுப்பபவர்கள். அதைப் பாதுகாக்க ஒருதலை பட்சமாக திரித்து அதை நியாயப்படுத்தி அதில் பின்நவீனத்துவ வழியில் ஜனநாயகமாக நியாப்படுத்தியவர்கள்.

இவர்களின் சார்பில் வன்முறைக்கு எதிராக கூட்ட அழைப்பை முன்வைக்கும் புஸ்பராஜா ஆறு லட்சம் தோட்ட தொழிலாளார்களின் சந்தாப் பணத்தை கொள்ளையடித்தும், அம் மக்களுக்கு பொய் வாக்குறுதி கொடுத்து கோடீஸ்வரராகி, மலையக மக்களின் முதுகில் குத்தி, மாறி மாறி பெரும்தேசிய சிங்கள பாசிச அரசை முண்டு கொடுத்து பாதுகாத்து, ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கு உற்ற நண்பனாக இருந்த தொண்டமானுக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர், அ.மார்க்ஸ் சார்பாக கம்யூனிச எதிர்ப்பு பிரச்சாரத்துக்கு அழைப்பு விடுத்துள்ளார். தொண்டமானின் பரம்பரை அதிகாரத்துவத்துக்கும், மாறி மாறி நிறம் மாற்றி வன்முறைக்கு துணைபோனவருக்கு அண்மையில் கண்ணீர் அஞ்சலி செலுத்திய புஸ்பராஜா கம்யூனிச எதிர்ப்பு பிரச்சாரத்தில் வன்முறை பற்றியும் அதிகாரம் பற்றியும் பேச அழைப்பது தான் வேடிக்கையாக உள்ளது. இவர் சபாலிங்கம் மலரை ஒடுக்கப்பட்ட மக்களின் பிரதியாக கொண்டுவர விடுத்த வேண்டுகோளை நிராகரித்து அமர்தலிங்கம், உமாமகேஸ்வன் (இந்த உமாமகேஸ்வரன் உட்படுகொலைகள் மூலம் கொன்று போட்ட ஒடுக்கப்பட்ட பிரிவின் சார்பாக மலர் விடக் கோரினேன். ஆனால் மறுத்து ஒடுக்கும் உமாமகேஸ்வரன் சார்பாக மலரை விட்டவர்) போன்ற அதிகாரத்துவ பிற்போக்குகளை நினைவு கூர்ந்து வெளியிட்ட இவர் கம்யூனிச எதிாப்பு பிரச்சாரத்துக்கு பாரிசில் அழைப்பு விடுகின்றார்.

இப்படி இவர்களின் புண்ணியத்தில் பாரிசில் கம்யூனிச எதிர்ப்பிரச்சாரத்துக்கு வந்துள்ள அ.மார்க்சின் அரசியல் என்ன? இந்த கூட்டத்தை அழைத்து நடத்துபவர்களின் அரசியல் என்ன? இந்திய சமூகத்தில் பல்வேறுபட்ட வர்க்க முரண்பாடுகளில் எந்த வர்க்கத்துடன் நிற்கின்றார்? அ.மார்க்ஸ் எழுதியுள்ள எந்த நூலிலும் அப்பட்டமாக பிடிகொடாத பார்ப்பணிய சூது அரசியல்நிலை. புஸ்பராஜா பெயரில் முதலில் வெளியாகிய துண்டுப்பிரசுரத்தில் ஒரு பெண்ணை நிர்வாணமாக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏகாதிபத்திய உள்ளடக்கத்தை கொண்டிருந்தது. இதற்கு நண்பரின் கவிதை ஒன்றை மாற்றம்செய்து முன்வைப்பதன் மூலம் அதை இனம் காணமுடியும்.

"சுரண்டுவோரை சுரண்டுகின்றதா சுரண்டல் ஆணாதிக்கம் (டிக்கற்) உன்னை சுரண்டிப் பார்க்க வந்திருக்கும் ஆணாதிக்க அ.மார்க்ஸ்சே (எனது நண்பனுக்கு) நீயோர் சுயவிமர்சனம் செய் பார்க்கலாம்" பெண்ணின் உடுப்பை சுரண்டி நிர்வாணப்படுத்தும் இவர்களுக்கு எவ்வளவு வக்கிரம். பணக்கார சீமாட்டியும் பிரிட்டிஸ் ஏகாதிபத்தியத்து பட்டத்து ராணியான இளவரசி டயானாவின் வர்க்கநிலை என்ன? இதேபோல் அ.மார்க்ஸ்சின் வர்க்கநிலை என்ன? சி.என்.என் (CNN) அதிபர் உலக ஏழை மக்களின் நலனுக்கும், உலக முதல் பணக்காரனான கம்யூட்டர் பன்நாட்டு கம்பனியின் உரிமையாளரான வில்லியம்கேட்ஸ் மக்களின் நலனுக்கு பணம் கொடுத்த போதெல்லாம் இந்த பணக்காரக் கும்பலின் வர்க்க நிலை என்ன? இதே போல் அ.மார்க்ஸ்சின் வர்க்கநிலை என்ன? சிறுவர் உழைப்புக்கு எதிராக ஐக்கியநாட்டுசபையும், யூனெஸ்கோவும், ஏகாதிபத்திய தலைவர்களும் குரல் கொடுத்த போது இதன் வர்க்க நிலை என்ன? ஐக்கிய நாட்டுசபை பெண்கள் ஆண்டை தீர்மானிக்க ஏகாதிபத்தியம் ஆதரவு கொடுத்தபோது இதன் வர்க்க நிலை என்ன? இந்தியாவில் தாழ்த்தப்பட்ட மக்களின் நிலையையிட்டு ஏகாதிபத்திய தொலைக்காட்சியும், அடிமை வடிவத்துக்கு எதிரான அமைப்புகளும், மத அமைப்புகளும், யுனெஸ்கோவும், தன்னார்வக் குழுக்களும் குரல் கொடுத்த போது அதன் வர்க்கநிலை என்ன? பாபர் மசூதி தகர்க்கப்பட்ட போது ஏகாதிபத்தியமும் அதன் அச்சு அமைப்புகளும் கண்டித்த போது இதன் வர்க்க நிலை என்ன? செஞ்சிலுவைச் சங்கம், மனித உரிமை அமைப்புகள் என்று உள்ள பல அமைப்புகளின் வர்க்க நிலை என்ன? அன்னை திரேசாவின் வர்க்கநிலை என்ன? தன்னார்வக் குழுக்களின் வர்க்க நிலை என்ன? தொண்டமானின் வர்க்கநிலை என்ன? இதன் வர்க்கநிலையை கூறமுடியாத யாரும் அ.மர்க்சின் வர்க்கநிலையை கூறமுடியாத இந்த ஏகாதிபத்திய கூத்தடிப்பில் பங்கு கொள்வது அவர்களின் அறிவியல் எல்லையும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிரான துரோகமாகும். அ.மாக்ஸ்சின் வர்க்கநிலை என்ன?

ஆம் இன்று ஏகாதிபத்தியத்தின் கட்டுப்பாட்டில் உலகமயமாகின்ற போக்கில் அதற்கு தடையான அனைத்து தேசிய வடிவங்களையும் ஏகாதிபத்தியம் மறுக்கின்றது. இந்த மறுப்பில் உருவாகும் கோட்பாடுகள் புற்றீசலாக கிளம்புவதும் நியாயப்படுத்துவதும் புரட்சியாக அலங்கரித்து காட்டுவதும் புதியவடிவமாக மார்க்சியத்துக்கு எதிராக முன்நிறுத்தப்படுகின்றது. டயானா ஏன் கண்ணிவெடிக்கு எதிராக பிரச்சாரம் செய்கின்றார்?

இந்தவகையில் அ.மார்க்ஸின் எழுத்து எந்தவகையைச் சார்ந்தது. இந்தியாவில் உள்ள நிலப்பிரபுத்துவ இந்து பாசிசத்துக்கு எதிராக ஏகாதிபத்திய கட்டற்ற சுதந்திர கோட்பாட்டு எல்லைக்குள் தான் அ.மார்க்ஸ்சின் எழுத்துகள் புளுத்துப் போயுள்ளது. நிலப்பிரபுத்துவத்துக்கு எதிரான பாட்டாளிவர்க்கத்தையோ, தேசிய முதலாளி வர்க்கத்தையோ ஆதரிக்காது எதிர்த்து நிற்கும் அ.மார்க்சின் கோட்பாடு நேரடியாக ஏகாதிபத்தியத்தை சார்ந்தது. இது எப்படி என்கின்றீர்களா? நவீனத்துவமான முதலாளித்துவ அமைப்பு தனது நவீன முதலாளித்துவ கண்ணோட்டத்தை ஏகாதிபத்திய வடிவமாக தன்னை விரிவாக்கிய போது நவீனத்துவத்தையே அதாவது தனது சொந்த கோட்பாட்டையே முதலாளித்துவம் தூக்கியெறிந்தது. இனியும் சமுதாயம் நவீனத்துவமான முதலாளித்துவம் என்பது அர்த்தமற்றதாகியது. இந்த புதிய நிலையை செயலூக்கமுள்ள மார்க்சியம் சரியாக ஏகாதிபத்தியம் என்று அடையாளப்படுத்தியதன் மூலம் அச்சொல்லுக்கே போர்க்குணம் மிக்க அரசியல் வடிவத்தைக் கொடுத்தது. இதை எகாதிபத்தியத்தால் சகித்துக்கொள்ள முடியவில்லை. நவீனத்துவமான முதலாளித்துவத்தை தானே மறுத்த போது எப்படி புதிய நிலைமையை மதிப்பிட்டு பெயரிடுவது என்பது ஏகாதிபத்திய புத்திஜீவிகளின் மூளைக்கே சவால் விட்டது ஏகாதிபத்தியம் என்ற மார்க்சிய அடையாளப்படுத்தல்.

ஏகாதிபத்திய புத்திஜீவிகள் தனது சொந்த கட்டற்ற சுதந்திர சமுதாயத்தை பெயரிட பெயருக்காக அலைந்தனர். இதன் கண்டுபிடிப்பாகவே நவீனத்துவத்துக்கு பிந்தியதை பின்நவீனத்துவம் என்று அழைத்துக் கொள்வது மரபாகியது. இது நவீனத்துவத்துக்கு பிந்திய ஏகாதிபத்தியத்தை குறிக்கும் இன்னொரு சொல்லாக பின்நவீனத்துவம் ஆகியது. ஏகாதிபத்தியம் என்பது பாட்டாளிவர்க்கம் மற்றும் தேசிய முதலாளித்துவ சொல்லாக இருக்க ஏகாதிபத்திய பிரநிதிகளின் சொல்லாக பின்நவீனத்துவம் சொல் அரசியல் அர்த்தத்தை உள்வாங்கியது. இந்த பின்நவீனத்துவம் என்ற ஏகாதிபத்தியம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேசத்தின் எல்லைகளை ஊடுருவி அனைத்தையும் மறுத்து ஏகாதிபத்திய பண்பாட்டை ஏற்படுத்த முனைவதால் நிலப்பிரபுத்துவத்துக்கு எதிரான பாட்டாளி வர்க்கத்துக்கு மாற்றான பின்நவீனத்துவ ஏகாதிபத்திய புதிய ஆதிக்க செயல்களை புரட்சியாக நடித்து காட்டி ஏகாதிபத்திய நலனை நிறைவு செய்யும் கோட்பாடாக நடைமுறையாக உள்ளது.

இந்த ஏகாதிபத்திய உலகமயமாதலுக்கு வன்முறை என்பது அவசியமற்றது. இருக்கும் ஜனநாயக வடிவத்தை பாதுகாத்து அதை கட்டற்றதாக மாற்றுவதன் மூலம் ஏகாதிபத்தியமயமாதலை நிறுவமுடியும். பின்தங்கிய நிலப்பிரபுத்துவம் மற்றும் மதப்பண்பாடுளையும், தேசிய முதலாளித்துவத்தின் பிற்போக்கு கூறுகளை எதிர்த்து போராடுவதாக காட்டி இதை மக்களின் ஜனநாயகமாக காட்டுவதன் மூலம் ஏகாதிபத்திய பண்பாட்டை வன்முறையின்றி (இங்கு வன்முறை நிலவும் ஜனநாயக எல்லைக்குள் உள்ளது.) உலகமயமாகும் போராட்டத்தில் அ.மார்க்ஸ் போன்றோர் ஏகாதிபத்திய புரட்சியின் கதாநாயகர்கள் ஆகின்றனர். இதில் இருந்தே எந்த வெட்கமும் மானமும் இன்றி தம்மை பின்நவீனத்துவவாதிகள் என்கின்றனர்.

இதுபோல் காலனிக்கு பிந்திய ஏகாதிபத்திய ஆதிக்கத்தை மார்க்சியம் நவகாலனித்துவம், அரைக்காலனித்துவம், மறுகாலனி போன்றவற்றால் அடையாளப்படுத்தி போராட இதை அரசியல் அற்றவடிவமாக்க ஏகாதிபத்தியம் பின்காலனித்துவம் என்று அடையாளப்படுத்தி பாட்டாளிவர்க்க போராட்டத்தை சிதைக்க புதிய சொற்றொடர்களின் ஊடாக தன்னை அலங்கரித்துக் கொள்கின்றது. பாட்டாளிவர்க்கம் சமூகத்தின் அனைத்தையும் விமர்சித்து புதிய சமுதாயத்தை கோரியபோது இதை மழுங்கடித்து பழையதை மீளநிலைநாட்ட மறுவாசிப்பு என்ற புதிய வடிவத்தை ஏகாதிபத்தியம் முன்வைத்தது. அதாவது இருந்த தேசிய, நிலப்பிரபுத்துவ, மதவாத தன்மைகளை மறுத்து பழையதை மீள நிலைநிறுத்துவதும், ஏகாதிபத்திய நிலைக்கு இசைவாக வாசிப்பது என்ற மறுவாசிப்பு அவசியமாகின்றது. மார்க்சியம் விமர்சித்து புதியதை உருவாக்க முனைவதை மறுத்து, இருப்பதை மறுவாசிப்பு செய்து நிலைநிறுத்துவதே மறுவாசிப்பு தத்துவமாகும். இதுபோல் விளிம்புக் கோட்பாடு மார்க்சியம் அனைத்து ஒடுக்கப்பட்ட மக்கள் பிரிவுகளையும் உள்ளடக்கிய வெவ்வேறு நலன்களை பிரதிநிதித்துவம் செய்து முன்வைத்த ஐக்கியமுன்னணி தத்துவத்தை சிதைத்து புரட்சியை தடுக்க விளிம்பு கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அத்துடன் விளிம்பு என்பது புரட்சிக்கு பிந்திய பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தில் முதலாளித்துவபிரிவாகவும், பார்ப்பணியமாகவும், ஆணாதிக்கமாகவும் என அனைத்து மக்கள் விரோதமும் விளிம்பு என்பதை உள்ளடக்கியதே. இதற்காகவே மார்க்சியத்துக்கு எதிராக பின்நவீனத்துவ விவாத்தை முன்தள்ளுகின்றனர். தன்னார்வக் குழுக்களின் செயற்தளம் இந்த விளிம்பு பிரிவின் அடிப்படையில் திட்டமிடப்படுவதையும், பாட்டாளிவர்க்க புரட்சிக்கு எதிராக விளிம்பூடாக ஒழுங்கு படுத்தும் செயல் வடிவங்களின் விளக்கமாகும். இதுபோல் "தலித்" என்பது முன்பு காந்தி "அரிஜன்" என்றழைத்து பார்ப்பணிய இந்து இந்தியா அமைப்பை ஏற்படுத்தியது போல், "தலித்" இந்து இந்தியாவில் சாதி அரசியலை உக்கிரமாக்கி சாதிக்கு எதிராக அணிதிரள்வதை சிதைத்து இதன் மூலம் உலகமயமாதலை வேகப்படுத்தியுள்ளனர். இந்த "பின்", "மறு", "விளிம்பு" "தலித்" வாதிகள் இருப்பதை மறுத்து ஏகாதிபத்திய புரட்சியாக முன்வைத்து பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிக்கு எதிராக ஏகாதிபத்திய கேள்விகளையும், கலகக்கொடி எழுப்பினர், எழுப்புகின்றனர். இவர்கள் இந்த ஏகாதிபத்திய தேசிய மறுப்பு (இதனால் தான் தேசியத்தை கற்பிதம் என்கின்றனர்) புரட்சிக்கு தடையாக உள்ள பாட்டாளிவர்க்கத்தை சேறடிக்க எப்போதும் பின்நின்றதில்லை. கம்யூனிசபுரட்சியின் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் அதை அடிப்படையாக கொண்ட வர்க்க போராட்ட வன்முறையை ஜனநாயகத்துக்கு எதிரான வடிவமாக காட்டியே சேறடிக்கின்றனர். ஜனநாயகம் என்ற முதலாளித்துவ ஜனநாயகம் எப்படி முரண்பட்ட வர்க்க சமுதாயத்தில் எல்லோருக்கும் இருக்கமுடியும் என்பதையொட்டி பதிலளிப்பதில்லை.

சுரண்டுபவனுக்கும் சுரண்டப்படுபவனுக்கும், சாதி ஆதிக்கத்திற்கும் அதற்கு எதிரான நிலையிலும், ஆணாதிக்கத்திற்கும் அதற்கெதிரான நிலையிலும், வெள்ளை நிறவெறிக்கும் அதற்கெதிரான நிலையிலும் நீடிக்கும் இருதரப்பு வன்முறையில் நீ எந்தப் பக்கம் என்றால் மௌனம். ஆனால் இந்த மௌனம் இருக்கும் ஆதிக்க வன்முறையை சார்ந்தும் ஒடுக்கப்பட்ட வர்க்கத்தின் வன்முறையை எதிர்க்கும் போது மௌனம் ஒடுக்கப்பட்ட வர்க்கத்துக்கு எதிரானதாக உள்ளதை காட்டுகிறது. ஏகாதிபத்திய அமைதியான வன்முறைக்கு ஆதரவு என்பதன் மூலம் அதாவது சர்வதேச மன்னிப்புச்சபையின் நிலைபோல் அமைதியான சுரண்டல் நிலவ வாழ்த்துவதை இந்த மௌனங்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பறைசாற்றுகின்றது.

இவர்கள் அங்கு (முன்னாள் கம்யூனிச நாடுகளில்) அப்படி நடந்தது, இப்படி நடந்தது என்று பல கதைகள் கூறி கதையளப்பார்கள். அதாவது அ.மார்க்சின் முன்னைய கம்யூனிச எதிர்பிரச்சார சுற்றுப் பயணத்தின் தொகுப்பாக வந்த வெள்ளைத் திமிரில் ஐரோப்பியர் எல்லோருடைய கண்ணிலும் மின்னுவது நாசித்திமிர் என்று அப் புத்தகத்தில் பல புரட்டு கதைகள் எழுதியது போல், பலகூறு அதை கவ்விப்பிடிக்க ஆவென்று தமது கம்யூனிச எதிர்ப்பில் குளிர்காய இக்கூட்டத்தை நோக்கி ஒரு கூட்டம் ஆலாய் பறக்கின்றது.

நாங்கள் திறந்த விவாதம் நடத்துகின்றோம், முடிந்தமுடிவுகள் என எதுவுமில்லை, கேள்விகளே எமது ஜனநாயகம், கருத்தை யாரும் சொல்லமுடியும், நாங்கள் உடன்பட்டதில் கையெழுத்திடுவோம், முரண்பட்டதை விவாதிக்கவுள்ளது எனப் பதிவோம் என்று பல வண்ண கூத்துகளை தமது கம்யூனிச எதிர்ப்பில் கூடிக்கலந்து கூத்தடிப்பர். கூத்துகள் பல செய்து காட்டுவர். அதை கேட்க ஒரு கூட்டம் வாயைப் பிளக்கும்.

கம்யூனிச எதிர்ப்பை பலப்படுத்த ஏகாதிபத்தியம் நிதி ஒதுக்கி முன்னைய கம்யூனிச ஆவணங்களை எல்லாம் புரட்டி பிரட்டி திரித்து முன்வைப்பதை விசுவாசமாக கவ்விக் கொண்டு குரைப்போர் மறுபக்கத்தில் நேர்மை எதுவுமற்றது.

தமிழீழ தேசவிடுதலைப் போராட்டம் தமிழ்நாட்டை பாதித்தளவுக்கு பின்னால் அ.மார்க்சின் மௌனங்கள் அர்த்தம் என்ன? தேசத்தை கற்பிதம் என்றவரும் அவரின் இங்குள்ள சீடர்களும் தமிழ் மக்களின் நியாயமான போராட்டத்தை ஏற்றதுகிடையாது. புலியெதிர்ப்பு கோசத்தில் இங்குள்ளவர் குளிர் காய அ.மார்க்ஸ் இந்தியாவில் வேடங்கள் பல போட்டு தொப்பி பிரட்டுகின்றார். தமிழ் மக்களை பாசிச சிறிலங்கா அரசு படுகொலை செய்து தேசிய இன அடையாளத்தை அழிக்க அதை "கற்பிதம்" என்று கதைகூறி ஏகாதிபத்தியமயமாதலை நியாயப்படுத்தியவர். இதற்கு எதிராக போராடிய இயக்கங்கள் கம்யூனிஸ்டுகளையும், ஜனநாயகவாதிகளையும் கொன்றொழித்து வரும் வரலாற்றினை ஏன் கண்டித்து போராட முன்வரமுடியவில்லை. கம்யூனிச நாடுகளில் தேடித் திரிந்து கம்யூனிச எதிர்பிரச்சாரம் செய்ய பின்நிற்காத இவர், இலங்கை அதுவும் பக்கத்து நாட்டில் அதுவும் தமிழ் நாட்டை பாதித்த விடயம், அதுவும் சீடர்களின் தயவில் பணம் பல பெற்று தகவல் பல கம்யூனிச எதிர்ப்புக்கு பெறுபவர் இலங்கையின் வன்முறையை ஜனநாயகவிரோதத்துடன் முன்வைக்காத அந்தக் காதல் என்ன காதலோ நாம் அறியோம்.

இந்த காதலில் எப்படியெனின் முதல் கம்யூனிச எதிர்பிரச்சாரத்தை செய்ய ஐரோப்பா வந்தபோது படுகொலை செய்யப்பட்ட சபாலிங்கத்துக்கு வஞ்சகம் செய்த போதே அது புரிந்தது. பாரிசில் படுகொலை செய்யப்பட்ட நாதன், கஜன் கொலைக்கான குற்றவாளியை கண்டுபிடிக்ககோரி சரியாகவும் நியாயமாகவும் பிரஞ்சு தூதரகம் முன் சென்னையில் ஆர்ப்பாட்டம் செய்த அ.மார்க்ஸ் அதில் சபாலிங்கம் பற்றிய விசாரனையை செய்ய கோராத மர்மம் தான் அ.மார்க்சின் வன்முறைகள் மீதான விளிம் நிலைப் பார்வையாகும். இதே போல் புலிகளால் கடத்தப்பட்டு பின்னால் செல்வியை கொன்றுபோட்ட புலிகளை நோக்கி இந்தியாவில் சிலர் கையெழுத்திட்ட அறிக்கையில் இருந்த அ.மார்க்ஸ்சின் பெயரை அவரின் அனுமதியின்றி இருந்ததாக கூறி ஜனநாயகத்தை வன்முறையில் நியாயப்படுத்தியவர். இப்படி பல.

இந்தியாவில் தலித் மற்றும் தமிழ் இனக் குழுக்கள் புலியை ஆதரிக்கும் போது, புலியின் மக்கள் விரோத வன்முறையை ஆதரிக்கும் போது அ.மார்க்ஸ்சின் ஆதரவுகள் இதை பலப்படுத்தி வரும் கூத்தடிப்பே இதன் அரசியலாகும்.

ஆட்களுக்கும், நேரத்துக்கும், இடத்துக்கும் இசைவாக கதைப்பதும் பிழைப்பதும் அ.மார்க்ஸ்சின் அரசியல் அகராதி. இதுதான் புலம்பெயர் இலக்கிய செம்மல்களின் நாய்ப்பிழைப்பாகும். அ.மார்க்ஸ் நடைமுறைவாதிகளை மதிப்பதாக பகிரங்கமாக அறிவித்து நெருக்கடிகளில் இருந்து தப்பும் பிழைப்புவாதமும், கோட்பாட்டில் ஏகாதிபத்திய மாற்றை முன்வைப்பதும் என்ற இரட்டைவேடம் அவரின் நடிப்பு அரசியலாகும்.


புலம்பெயர் இலக்கியம் (இங்கு இவர்களிடம் புலம் பெயர் அரசியல் இல்லை) என்ற பெயரில் கம்யூனிச எதிர்ப்பு அரசியலில் நெருக்கடிகள் என்றுமில்லாத வகையில் படுகுழிக்குள் சிதைந்துவருகின்றது. அது வன்முறை மற்றும் சதிகளை விதைத்துவருகின்றது. இது வன்முறை, சதிகள், அவதூறுகள், கல்வெட்டுகள், ஏகாதிபத்திய அரசுக்கு தகவல் கொடுப்பதிலும் புலம்பெயர்

தொடர்ச்சி இரண்டாம் பக்கத்தில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அரசியற் தத்துவார்த்த புரட்சிகர விமர்சன ஏடு

சமர் - 26

பக்கங்கள் -68

30.9.2000

SAMAR
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR-SEINE
FRANCE

கருத்து மக்களைப் பற்றிக் கொண்டால்
மாபெரும் சக்தியாக உருவாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்